SKY WINGS LTD
TRAVEL & TOURS
"WHERE THE SUN NEVER SETS"
Cheapest Worldwide Fares with the Best Service
We are authorised main agents for Srilankan, Jet Airways, Qatar, Kuwait, Oman...
Reservation: Mob: 07850876921
02086729111
We accept all major credit cards
Colombo £170 + Taxes
Visa Service to Srilanka, Australia, India & USA
119,Tooting High street, London, SW17 OSY

BILINGUAL FORTNIGHTLY
# ஒரு பேப்பர்
ORU PAPER
FREE
PAPER - 11 ♦ ISSUE - 233 ♦ FRIDAY 09 JANUARY 2015

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லயைா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
- Personal injury (Neck,Back & Shoulder Pain)
- Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE *
* Other Insurance charges may apply
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




POST OFFICE & SHOP FOR SALE
Post office & shop for sale / lease hold in Rainham, Kent
Rainham, Kent இல் அண்மையில் திருத்தம் செய்யப்பட்ட Post office உடன் இணைந்த கடை உடன் விற்பனைக்குள்ளது.
3 grammar schoolsக்கு அருகாமையில் உள்ளது
உரிமையாளர் இப்பிரதேசத்தில் 15 வருடங்களாக பணியாற்றிய அனுபவம் உள்ளவர்
விலை பேசித் தீர்மானிக்கலாம்
·POST OFFICE SALARY 55,000 TO 60,000
·SHOP TAKING - 350 K
£75000 LEASE HOLD PRICE
RENT £600 PER MONTH
Tel : 07578833654

HYGIENE RESOURCES
Consultants
Are you a food handler?
- Fast food Handler
- Manufacturing staff
- Take away food handler
- Packaging staff
- Restaurant worker
So if you are ready to gain knowledge and build career in catering industry then call Hygiene Resource or email or visit website above.
Call Syed anytime on: 0795 8942 988
75 Springbank Road, Lewisham, London SE13 6SS
E Mail : syed@uabdl.com

Nandika's Sarees
மங்கையர் மனம் விரும்பும் நவநாகரீக பட்டுப் புடவைகள், சுடிதார், பிளவுஸ், மற்றும் காஞ்சி பட்டுகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
Free UK Delivery
www.nandikasarees.co.uk

Unique Wedding & Party Services
Bespoke Services | Centre Piece Decorations
Catering Services | Stages & Mandaps - Marquee Hire - hall decoration | Wedding Car Hire
Wedding Cake | Hall Table Decoraion
திருமண மற்றும் பிறந்தநாள் பூப்புனித நீராட்டு விழா என அனைத்து சுப வைபவங்களுக்கும் உதவ நாங்கள் இருக்கிறோம்
Unique Wedding & Party Services
0203 086 9915 - 07872015560

CHICKEN SHOP FOR SALE - COVENTRY
நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் Chicken Shop உடனடியாக விற்பனைக்கு உண்டு
Price £ 25,000
Quick Sale
இலவச வாகன தரிப்பிடம்
நல்ல சுற்றுச் சூழலுடன்
மேல்மாடியில் 2 அறைகள்
take away & eat in
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
270 Harnall Lane East , COVENTRY, CV1 5AY
Call : Nesan 07846561150

குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
HSFC offers comprehensive services in the areas of assisted reproduction (including IVF, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.
We have a flexible schedule, including appointments in the evenings and weekends.
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
134, Harley Street, London, W1G 7JY
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

சென்னையிலிருந்து UK விசா
- தொழிலாளர் விசா
- தங்கியிருக்கும் விசா
- மாணவர் விசா
- சுற்றுலா விசா
இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

# AIKON ACCOUNTANTS LTD

**Our Services**

- *Preparation of accounts for companies and individuals/ for companies house*
- *Preparation of annual accounts and working with auditors*
- *Reporting to lenders and other external parties*
- *Preparation of management accounts*
- *VAT Computation and filing*
- *Self-assessment returns*
- *Corporation Tax computation and filing*
- *HMRC correspondence and representation*
- *Company Formation and VAT registration*
- *PAYE – Preparation of Payroll and filing returns*
- *Scenario Testing & feeding through to forecasts*
- *Budgeting & Variance Analysis*
- *Financial Planning and Analysis*
- *Evaluation of the internal controls and propose suitable solutions in order to eliminate weaknesses.*
- *Cash flow forecasts & Projected Accounts*
- *Restructuring*
- *Mergers and Acquisitions*
- *Due diligence*
- *Investment and Project Appraisal*
- *Assisting Foreign companies establishing in the UK*
- *Assisting UK companies expanding and establishing overseas*
- *Assisting with securing finance for business growth*

**FAST GROWING ACCOUNTANTS IN LONDON FOR ALL YOUR NEEDS!**

For a no obligation, FREE consultation Call us on 02031891884
accounts@a-accountants.com - www.a-accountants.com

வாழ்க வளமுடன்

## சிறந்த முறையில் ஜாதகம் பார்க்கப்படும்.

அனைத்து சுபகாரியங்களுக்கும் மற்றும் சிலருக்கு அல்லது சில குடும்பத்திற்கு நவக்கிரகங்களாலும் பில்லி சூனியத்தாலும் பாதிப்புக்கள் ஏற்படலாம்.

இவ்வகையான பாதிப்பு பற்றி அவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள். தொழில் நஷ்டம், வீண் மனக்கவலை, குடும்பத்தில் அமைதியில்லாத நிலை, கணவன்–மனைவிக்கு இடையே தகறாறு, பொருள் நஷ்டம் என்று பாதிப்புக்களின் வடிவம் வேறு வேறு வகைகளில் இருக்கலாம்.

இத்தகைய பிரச்சினைகள் தொடர்கதையாக இல்லாமல் முடிவு கட்ட வேண்டாமா ?

மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்


**07508657674 - K.நாதன் G**

Uwps
UNIQUE WEDDING & PARTY SERVICES

திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்த நாள் நிகழ்வுகள் மற்றும் அனைத்து தேவைகளுக்கும்

Inspire your guests by creating an event that's truly unique, Passion, Experience & Creativity, we have the perfect formula in UWPS where the occasion always exceeds your expectations












**Wedding Decoration | Ballons Decoration | Stage Arrangement | Banqueting Hall Decoration | Videography & Photography | Catering | LCD Backdrop Hire | Fresh Flower Bouquet | Gifts | Party Planning | Chair Cover | Marquee | Table & Chair Hire | Table Cloth Hire | Centre Piece Arrangement**

Tel: 0203 086 9915 Mob: 0795 083 3135 – 0787 201 5560
London, UK, Europe
www.uwps.co.uk | uwps@hotmail.co.uk

newlife
Home of Fertility, Immunology & Women's Health

## Newlife Fertility Clinic



We provide the best affordable infertility treatments (IVF, IUI, ICSI)
www.newlifeclinic.org.uk

T : 01372 738 932
The Pines, 2 The Parade, Epsom KT18 5DH

## Technician Required for Pc / Laptop/ Tab

கணினி, லப்ரொப் மற்றும் ரப் திருத்தக்கூடிய திருத்துநர் தேவை.

Technician Required for pc, laptop, tab



email id : harans@hotmail.com

தொடர்புகளுக்கு - கரன் - 07984172957

## வீட்டு வேலைக்கு ஆள் தேவை

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடியவராகவும், குழந்தையை பராமரிப்பதற்கும், Surrey பகுதியில் திருமணமான பெண் பராமரிப்பாளர் தேவை.



வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்களாகவும் 30 வயதுக்கும் 50 வயதுக்கு இடைப்பட்டவர்களாகவும் இருப்பவர்கள் விரும்பத்தக்கது

**Contact Tel - 07405406806**




## ஜனாதிபதித் தேர்தல்

நாளை முடிவு வெளியாகிவிடும். கூட்டடணியும் தமிழ் மக்களும் பழி வாங்கும் எண்ணம் கொண்டு முழு மூச்சுடன் மஹிந்தருக்கு எதிராக வாக்களித்திப்பார்கள். வாக்களிக்காதீர்கள் என்று கூச்சலிட்டவர்கள் வெறும் கூச்சலோடு நிறுத்தி விட்டார்கள். அவர்கள் ஒரு அபேட்சகரை நிறுத்தி சுயநிர்ணய உரிமை தான் தமிழருக்கு வேண்டுமென்பதை தமிழ் வாக்குகள் மூலம் உலகுக்கு எடுத்துக் காட்ட முனைந்திருக்கலாம்.

*- மார்க்கண்டு*

## அங்கோவாட்டின் அதிசயக் கோயில்

உமா மகாலிங்கம் குறிப்பிடும் கம்போடியாவின் கோயில் அதிசயம் மிக்க ஒரு படைப்புத் தான். பார்ப்ப வரை வியக்க வைக்கும் அக்கட்டிடக் கலை உண்மையிலே ஒரு அதிசயம் தான். அதற்காக வேற்றுக் கிரக வாசிகள் அவர்கள், இவர்கள் என்று கூறுவது தேவையற்ற செயல்.

*- சுபாஸ்*

## மக்கள் தண்டித்து விட்டார்கள்!

மைத்திரிபால சிறிசேனாவின் வெற்றி தமிழர்களின் வெற்றி அல்ல. அத்துடன் செய்த குற்றங்களுக்கு எந்த விதமான தீர்ப்பும் கிடைக்காமலேயே ராஜபட்சே அரியணையிலிருந்து விடைபெற்றுவிட்டார். இனி ராஜபட்சே அரசின் மீதான இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகூட மெல்ல மெல்ல காலாவதியாகிவிடலாம். அது தான் மக்களே தண்டித்துவிட்டார்களே ! இப்போது அனைத்து இன மக்களின் ஆதரவைப் பெற்ற ஆட்சி அரியணை ஏறப்போகிறதே !!

*- செந்தில்நாதன்*

## பாதிரியார் இனி ஊருக்குப் போகலாம்..

1995ம் ஆண்டு சந்திரிக்கா மேற்கொண்ட சூரியக்கதிர் நடவடிக்கையினால் யாழ் மக்கள் இடம்பெயர்ந்தபோது வெளிநாட்டுக்கு வந்தவர் இமானுவல் பாதிரியார். சந்திரிக்கா செய்த எல்லா இனவழிப்புகளையும் மன்னித்து அவரது மைத்திரிக்கு வாக்களிக்கச் சொன்ன அவரது மனிதாபிமானம் மெச்சத்தக்கது. மைத்திரி பதவிக்கு வந்தால் மனிதாபிமானியான பாதிரியார் ஊருக்குத் திரும்பி அங்குள்ள மக்களுக்கு உதவுவார் என எதிர்பார்க்கலாம்.

*- சுமதி ஜீவன்*

## பாலசந்தர்!

திரையுலகில் சாதனை படைத்த இயக்குநர்களில் பாலசந்தர் முதலிடம் வகிப்பது ஏதோ உண்மை தான். அவர் ஈழத்தமிழர் பிரச்சினையில் காட்டிய கயமை உணர்வுகளையும் நாம் குறிப்பிடத்தான் வேண்டும். புன்னகை மன்னன் படத்தில், விடுதலைப்புலிப் போராளிகளை சிங்கள மக்களுக்கு எதிரான இனவாதிகள் என்று காட்ட முற்பட்டாரே அல்லாமல் அவர்களை விடுதலைப் போராளிகள் என்று காட்ட முன்வரவில்லை. அவர் திறமையை மதிக்கலாம். அதே நேரம் கயமையையும் மறக்கக் கூடாது.

*- சூரியநாதன்*

## தமிழர் வாக்களிக்காமல் இருந்திருந்தால்?

வடக்கு கிழக்கில் தமிழர்கள் வாக்காளிக்காமல் இருந்திருந்தால் ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் எப்பிடி இருந்திருக்கும் ? மைத்திரிபால : 52,39,051 (வடக்கு கிழக்கு 9,78,111), மகிந்த : 54,44,490 (வடக்கு கிழக்கு 3,23,600) என்று இருந்திருக்கும். தமிழ் மக்களின்றை வாக்குகளால் வென்றுவிட்டு தமிழ் மக்களுக்கு ஆப்பு வைக்கிற வேலையைச் செய்யா விட்டால் சரி....

*- பரமேஸ்வரன்*

## கோத்தாவின் இடத்திற்கு சரத் பொன்சேகா

புதிய பாதுகாப்புச் செயலாளராக தமிழின அழிப்பாளர்களில் ஒருவரான முன்னால் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நியமிக்கப்படப் போகிறாராம். மாற்றம் மாற்றம் என்று எங்கட ஆட்கள் கத்தினார்களே இதுக்குத்தானா? அவன் கட்டளை வழங்கினான் ஆனால் இவன் களத்தில் நின்று எம் உறவுகளை அழித்தவன். நீண்டகாலமாக இனவெறியுடன் செயல்பட்ட ராணுவத் தளபதி. இது தான் கூட்டமைப்பு நம் மக்களுக்கு வாக்கை சிங்களவனுக்கு அடகு வைத்து தந்த மாற்றம். எல்லாம் போகப் போகத் தேரியும்.

*- மலர் நேசன்*

## கார்ப்பெட் ரோட்டினால் ஆற்றுப்படுத்த முடியாது!

மகிந்த தோற்கடிக்கப்படுவதை உள்ளூர விரும்பியிருந்தேன். தோற்ற முகத்தை கண்குளிரக் காண வேண்டும் என்னும் மாதிரியான.. ஆம் இது ஒரு வகைப் பழி உணர்ச்சிதான். இன்று வாக்குச் செலுத்திய பல்லாயிரம் தமிழர்களை இவ்வகையான உணர்வுதான் அதிகம் வழி நடாத்தியிருக்கும். இப்படி மனிதர்கள் பழி உணர்ச்சியோடு அலைவது நல்லதல்ல. இதை ஆற்றுப்படுத்தும் அதிகாரமும் பொறுப்பும் ஜனாதிபதியிடம் இருந்தது. அவர் அதைச் செய்யவில்லை. தோற்கடிக்கப்பட்டதாக, ஏமாற்றப்பட்டதாக உணர்கின்ற ஒரு சமூகத்தை, கார்ப்பெட் ரோட்டினால் ஆற்றுப்படுத்த முடியுமென்று கருதிவிட்டார்.

*- சயன்*

## சிறு தவறு..

சென்ற 232வது இதழில் வந்த 2015 புத்தாண்டு பற்றிய எனது கட்டுரையில் கடைசியில் இருந்து மூன்றாவது பந்தியில் ‘ஆண்டுக்கு 11 நிமிடங்கள்’ என்பதற்குப் பதிலாக ‘நாளுக்கு 11 நிமிடங்கள்’ என்று தவறுதலாகப் பதியப்பட்டு விட்டது. தவறுக்கு மன்னிக்கவும்.

*- சி.மாசிலாமணி*

## சிறுகதைப் போட்டி நடக்குமா ?

கடந்த இதழ்களில் சிறுகதைப் போட்டி நடாத்துவது பற்றி தெரிவித்திருந்தீர்கள் பிறகு அதைப்பற்றிய எந்த தகவல்களையும் காணவில்லை. இது தொடர்பான மேலதிக விபரங்களை இந்த இதழிலாவது அறியத்தருவீர்களா ?

*- வாகீசன்*

## ஒரு உண்மை...

இந்த அதிபர் தேர்தலில் மகிந்த தோற்கடிக்கப்பட்டதைத் தவிர வேறு எந்த எள்ளளவு நீண்ட கால நலனும் தமிழருக்குக் கிட்டாது அது வென்றவருக்கு நிச்சயமாகத் தெரியும். அதே போல் இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் தங்கள் அரசியலுக்காக தூர நோக்கோடு யாரோ காட்டிய இடத்தில் புள்ளடி இடாமல் சிந்தித்து வாக்களிக்கும் காலம் வர வருடக் கணக்கில் எடுக்கும்.

*- ஒலிவடிவில் வந்த பெயரில்லா அஞ்சல்*

*ஒரு பேப்பர் தொடர்பான உங்கள் கருத்துக்களுக்கு.....*
**Tel : 020 7043 4314**
*Email: info@orupaper.com*

# தேசியத் தலைவர் மீது அவதூறு பரப்பும் சம்பந்தனுக்கு கண்டனம்

### – தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

Indian Express சஞ்சிகைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வழங்கிய செவ்வியில் தமிழீழத் தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களை சர்வாதிகாரியாகக் குறிப்பிட்டமைப்புக்கு பல நாடுகளிலுமுள்ள தமிழர் ஒருங்கிணைப்புக்குழுக்கள் தமது கண்டனத்தை தெரிவித்துள்ளன. இது தொடர்பில் இவ்வமைப்புகளால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையினை இங்கு பிரசுரிக்கிறோம்.

எதிர்வரும் சனவரி 8, 2015 அன்று இலங்கையில் நடைபெறவிருக்கும் சனாதிபதி தேர்தல் தொடர்பாக கடந்த 31.12.2014 அன்று வெளியான Indian Express நாளிதழில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் திரு சம்பந்தன் அவர்கள் வழங்கியிருக்கும் நேர்காணலில் "குறிப்பாக பிரபாகரனின் சர்வாதிகாரமோ அல்லது மகிந்த ராஜபக்சவின் சர்வாதிகாரமோ தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்காது" என சம்பந்தன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தமிழினத்துக்கு அடையாளம் தந்த தேசியத் தலைவரையும், தமிழின அழிப்பில் முதன்மையானவரான மகிந்த ராஜபக்சவையும் சம்பந்தன் அவர்கள் சமப்படுத்தியமை உலகத்தமிழர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

தேர்தல் காலத்தில் தமிழ் மக்களிடம் வாக்குகள் பெறுவதற்கு தேசியத் தலைவரை புகழ்வதும், சில சந்தர்ப்பங்களில் தேசியத் தலைவரை அவமதித்து பேசுவதும், விடுதலைக்கான எமது நியாயமான போராட்டத்தை சம்பந்தன் அவர்கள் அவமதிப்பதையே கோடிட்டு காட்டுகின்றது.

உலகத்தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஈடுஇணையற்ற மாபெரும் தலைவனை அவமதிப்பது தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை குழி தோண்டி புதைப்பதற்கு இணையாகவே பார்க்கப்பட வேண்டும் . திரு சம்பந்தன் அவர்களின் இக் கருத்துக்கு தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஆகிய நாம் எமது கடுமையான கண்டனத்தை தெரிவிக்கின்றோம். இதேவேளை, சம்பந்தன் அவர்கள் பொறுப்பற்ற முறையிலும் , போராட்டத்துக்கு நேர்மையற்ற முறையிலும் செயற்படுகிறார் என்ற தமிழ் மக்களின் கருத்துக்களையும் இத் தருணத்தில் பதிவு செய்யவிரும்புகிறோம்.

நடைபெற இருக்கும் சனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்திருக்கும் நிலைப்பாடு என்பது ஒரு மாபெரும் வரலாற்றுத் தவறாகும். ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் தமிழர்களுக்கு நன்மை ஏற்படும் என்ற எதிர்பார்ப்பு பொய்யானதென வரலாற்று ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் திரு. சம்பந்தன் போன்ற மிதவாதத் தலைவர்களின் விட்டுக் கொடுத்தல்களாலும் தூரநோக்கற்ற சிந்தனையின் விளைவாலுமே எமது மக்கள் பேரவலங்களை சுமக்க வேண்டிவந்தது.

மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள பௌத்த பேரினவாதக் கட்சிகள் தமிழின அழிப்பு என்ற விடயத்தில் ஒரேநிலைப்பாட்டையே எடுத்துள்ளதை எமது மக்களாகிய நீங்கள் அறிவீர்கள். அவ்வாறான சூழலிலேயே எதிர்வரும் சனாதிபதித் தேர்தலும் இடம்பெறவுள்ளது.

இத் தருணத்தில், எமது மாவீரர்களினதும் மக்களினதும் தியாகங்களை மனதிலிருத்தி, சிறீலங்காவின் ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறைக்குள் கரைந்து போகாமல், அரைகுறைத் தீர்வுகளுக்குள் எமது மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளை புதைத்து விடாமல், எமது தேசத்தின் அடிப்படைக் கோட்பாடுகளான தாயகம், தேசியம், தன்னாட்சி ஆகியவற்றில் உறுதியாக இருந்து செயற்படவேண்டும் என அனைவரையும் இத்தருணத்தில் உரிமையோடு கேட்டுக்கொள்கின்றோம்.

- பிரித்தானியா தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
- யேர்மன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
- நோர்வே தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
- சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
- பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
- டென்மார்க் தமிழ் அமைப்புகளின் ஒன்றியம்
- இத்தாலி தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
- நியூசீலாந்து தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
- அவுஸ்ரேலியா தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
- சுவீடன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
- பின்லாந்து தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
- நெதர்லாண்ட் தமிழர் பேரவை
- பெல்ஜியம் தமிழர் கலை பண்பாட்டுக் கழகம்

We offer a one-stop-shop for all of your Telecoms needs
Saving you Time & Money





Office Phone Systems
- Easy to control
- Lower call costs
- No need for a costly PBX
- No maintenance charges
- Lines from £9.95

Our Products and Services:
- Landlines & Broadband
- SIP Trunks
  - Per Channel £6.60
  - Free Inclusive Minutes

FREE FIBRE/ETHERNET INSTALLATION*
*subject to Availability

MERRY X'MAS & A HAPPY NEW YEAR
Wishes from
MONEX TELECOM
Exclusively for Businesses
0207 402 2900
www.monextelecom.co.uk
24/7 Technical Support

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, JANUARY 09, 2015, ISSUE 233

## ஒரு இனப்படுகொலையாளன் தண்டிக்கபட்டிருக்கிறான்

சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த இராஜபக்ச தோல்வியைச் சந்தித்துள்ளார். தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு இரண்டு வருடகாலத்திற்கு முன்னரே தேர்தலைச் சந்திக்க அவர் முன்வந்த போது அவரது வெற்றி ஓரளவு உறுதி செய்யப்பட்டதாகவே தென்பட்டது. அதிகம் அறியப்படாதவராக இருந்த அவரது கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனா பொது வேட்பாளராகக் களமிறக்கப்பட்டமை மாத்திரம் இன்றைய முடிவுகளிற்கு காரணமாக அமையவில்லை. இவ்விடயத்தில், சிறிலங்காவில் ஆட்சிமாற்றம் வேண்டி நின்ற வெளிச்சக்திகளின் பங்கினையும் நாம் குறைத்து மதிப்பிட முடியாது. ஒரு முழுமையான ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாவிட்டாலும், குறைந்த பட்சம் தலைவர்களை மாற்றுவதிலாவது இச்சக்திகள் வெற்றி கண்டுள்ளன.

மகிந்தவின் தோல்வியில் தமிழ், முஸ்லீம் வாக்காளர்களின் பங்கு முக்கியமானதாக அமைந்திருந்ததை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியிருந்தன. தமிழர் தாயகப்பகுதிகளில் மைத்திரி – மகிந்த ஆகிய முன்னணி வேட்பாளர்களுக்கிடையிலான வாக்கு வித்தியாசம் சராசரியாக 75% - 25% என்ற அடிப்படையில் அமைந்திருந்த போதிலும், சிங்களப்பகுதிகளில் அவ்வாறான தெளிவான வேறுபாட்டினைக் காண முடியவில்லை. இது தமிழ் மக்கள் தமது வாக்குச் சீட்டின் மூலம் ஒரு இனப்படுகொலையாளனைத் தண்டிக்க முற்றபட்டமையை காட்டிநிற்கிறது.

தமது அரசியல் பிரச்சனைகள் பற்றி எதுவுமே குறிப்பிடாத, அதே சமயம் இனவாதக் கொள்கைளில் மகிந்தவிடமிருந்து அதிகம் வேறுபடாத ஒருவரை தேர்ந்தெடுப்பதில் தமிழ்மக்கள் காட்டிய ஆர்வத்திற்கு வேறு வியாக்கியானங்கள் வழங்க முடியாது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை, இத்தேர்தல் முடிவுகளையிட்டு கொண்டாடுவதற்கு எதுவுமில்லை என்றாலும், தமிழினப் படுகொலை ஒன்றை மாத்திரமே மூலதனமாகக் கொண்டு தனது ஆட்சியை தக்கவைக்க முடியும் என்ற ஒரு இனபடுகொலையாளனின் தோல்வி அவர்களுக்கு சற்று ஆறுதலைக் கொடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

தேர்தலில் வெற்றி பெற்ற மைத்திரி பல கட்சிகளையும் உள்ளடக்கிய ஒரு தேசிய அரசாங்கத்தை அமைக்கவிருக்கிறார் எனக் கூறப்படுகிறது. ஜனநாயகத்தை நிலைநாட்டி நல்லாட்சியை ஏற்படுத்துவார் எனவும் சில தரப்புகளால் எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் ஏற்படும் ஜனநாயக வெளியை வாய்ப்பாகப் பயன்படுத்தி தமிழ் மக்கள் தமது அரசியல் செயற்பாடுகளை வலுப்படுத்த முன்வரவேண்டும்.

## ஒரு பேப்பர்

*வணக்கம் !*

*திருப்பித் திருப்பி சொல்லுகிறமோ தெரியேல்லை, இருந்தாலும் சொல்லுறம் உங்கள் எல்லாருக்கும் எங்கடை புதுவருச வாழத்துகள். இதைச் சிலர் ஆங்கில புதுவருசம் எண்டும் கிறகறியன் புதுவருசம் எண்டு சொல்லுவினம். நாங்கள் கலண்டரிலை இருக்கிறபடி சொல்லுறம் அவ்வளவுதான். வேறை சமயம் சம்பந்தப்பட்ட காரணம் ஒண்டும் இல்லை.*

*சிறுகதைப் போட்டி ஒண்டு வைக்கப்போறம் எண்டு இடைக்கிடை அருக்கூட்டிக் கொண்டு இருந்தனாங்கள். ஆனால் நாங்கள் எல்லாரும் சேர்ந்து நல்லா யோசிச்சு முடிவெடுத்திருக்கிறம். சிறுகதைப் போட்டியை வைக்கிறதில்லை எண்டு. அதுக்கு காரணம் நல்ல சிறுகதைகள் வாறதிற்கு வாய்ப்பு குறைவு எண்டு விசயம் தெரிஞ்ச ஓராள் சொன்ன கருத்தை ஓரளவுக்கு எல்லாரும் ஒத்துக் கொண்டிட்டினம். சிறுகதைப் போட்டிக்கு பதிலாக 'முத்தமிழ் விழா' நடாத்தலாம் எண்ட இன்னொருஆலோசனை வந்திருக்குது. அது கொஞ்சம் நல்ல விசயம் போல தெரியுது. எதுக்கும் நாங்கள் தீர்க்கமாக முடிவெடுக்க முன்னம் உங்கடை கருத்தை அறிய விரும்பிறம். நீங்களும் உங்கடை கருத்துகளை கொஞ்சம் கெதிப்பண்ணி சொல்லுவியள் எண்டால் நாங்களும் எங்கடை முடிவை அறிவிக்க வசதியாயிருக்கும்.*

*பேப்பர் விநியோகம் எண்டது ஒரு நித்திய பிரச்சனையாகப் போயிட்டுது. தெற்கு லண்டனிலை பேப்பரை ஒரு இடமும் காணேல்லை எண்டு சிலர் சொல்லியினம். தயவு செய்து, ஒண்டு செய்யுங்கோ எங்கை எங்கை பேப்பர் கிடைக்கிறேல்லை எண்ட்டதை எங்களுக்கு ஒருக்கால் சொல்லுங்கோ.*

*இந்த வருசம் முதல் வேலையாக இந்த விசயத்திலைதான் கவனம் செலுத்தப்போறம்.*

*மற்றது, இளந்தாரிப் பெடி பெட்டையளை ஆசிரியர் குழுவிலை சேர்த்து அவையளின்ரை விருப்பதுக்கு ஏற்றமாதிரியும் **ஒரு பேப்பர்** ரை கொண்டுவரோணும் எண்டு சொல்லியிருந்தம். அதை மறந்திடாதேங்கோ.*

*இந்தப் புதன் கிழமை பரிஸ் இல் படுகொலை செய்யப்பட்ட 'Charlie Hebdo' சஞ்சிகையின் ஊடகவியலாளர்களுக்கு எங்கடை இறுதி வணக்கத்தை தெரிவிக்கிறம். எள்ளல் தொனியிலான கேலிச்சித்திரங்களை பிரசுரித்தமைக்காகவே அவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் துணிந்து நின்று அவையளுக்கு தலை வணங்கிறோம். என்னென்டால் பகிடி விளங்காதவங்கள் உலகம் முழுக்க இருக்கிறாங்கள் போல இருக்கு. இப்பிடியான ஆட்களோடை எப்பிடி காலத்தைத் தள்ளுறது எண்டது எங்களுக்கும் யோசனையாய்தான் இருக்கு.*

*பொங்கல் வாழ்த்துகளுடன்*

*அடுத்த பேப்பரில் சந்திக்கிறம்*

***ஒரு பேப்பர்** காரன்கள் + காரிகள்*

# J'accuse: Charlie Hebdo and the Rank Stupidity of the Infantile Left




**By : Karthick Ram Manoharan**

In the wake of the brutal murders at the office of the French satirist magazine Charlie Hebdo, did you come across any article which read something like the following?

'While the Hebdo murders are sad (add few token lines of phony sympathy) France has killed many people during colonialism. And it has a history of white racism. Plus, it is also engaged in neo-colonial endeavors. Likewise, Charlie Hebdo is Islamophobic (give few examples). The murderers are just isolated madmen and do not have an ideology. etc etc.'

Well done! You've just had a generous dose of infantile leftism! Criticism is reserved only for the West and Israel. Only the Whites and Jews have it in them to be the super-villains of the world. The rest are just innocent suffering victims. And yes, the 'resistance' of these 'victims' - whatever form it might come in - ought not be criticized. Ironically, this sort of Manichean thinking, that of the bad West vs the poor Rest, is precisely the mirror-image of the Bush doctrine of "either you are with us or against us".

Slovene philosopher Slavoj Zizek made an interesting comment about such trends among the left: "For the multiculturalist, white Anglo-Saxon Protestants are prohibited, Italians and Irish get a little respect, blacks are good, native Americans are even better. The further away we go, the more they deserve respect. This is a kind of inverted, patronizing respect that puts everyone at a distance."

The irrational hatred for Whites and Jews (including those from the working class) apart, this is precisely the kind of patronizing respect that the infantile left in Western countries shows towards Islamism. In reality, this left is much like the right, in that it secretly accepts that Muslims are incapable of radical social reform, and hence, becomes a patron of Islamist identity politics. And the bogey it invents to hide its own failures and to shut down legitimate criticisms of Islamism is that of Islamophobia. And the 'name-and-shame' campaign this coterie launches against critics - not to mention the real, existential threat posed by Islamic fanatic groups - create a climate where there is self-censorship that writers, intellectuals and comedians impose on themselves. The implicit message seems to be this: criticize Islam, and you are an Islamophobe. Should you be killed, you probably deserved it.

Isn't that what is also transpiring in Hebdo attack case? Though the magazine was clearly an equal-opportunity offender some on the left have used even this tragic circumstance to paint the institution as 'Islamophobic'.

I did come across a few nauseating articles but this one by Richard Seymour on a magazine that goes by the name "Jacobin" takes the cake. Let alone a solidarity with the victims - which the writer believes to be "platitudinous" - there is not even a word of condemnation of the terrorists (again, a term which the writer opposes to categorize the killers) who executed this barbaric attack. Instead there is a banal sermon on the possible dangers of Islamophobia, a totally irrelevant anecdote about Thatcher coupled with an inappropriate comparison with the IRA, and accusations at Charlie Hebdo which make it sound as though the magazine invited the attack.

It is precisely this sort of irresponsible justifications of acts of blind terrorism that shrink the already limited political space for progressive activists, representatives of the working class and oppressed nations. And no less a person than Lenin condemned these sort of acts. Seymour asks his readers to check up on Said's Orientalism (and it is not a wonder that he is disapproving of Zizek). But maybe he should re-read - and try to understand - what Lenin meant when he called terrorist-glorification tendencies an 'infantile disorder'.

A true leftist would realize that the attack on Charlie Hebdo is not merely an attack on a liberal freedom of press - it is an attack of a core Marxist value, namely, the ethical imperative to critically examine every ideology under the sun, and Islam is no special exception. For a leftist to ignore that is imbecility at its worst.

"For the multiculturalist, white Anglo-Saxon Protestants are prohibited, Italians and Irish get a little respect, blacks are good, native Americans are even better. The further away we go, the more they deserve respect. This is a kind of inverted, patronizing respect that puts everyone at a distance."

As far Islamist terrorism goes, maybe the Left should remember what Robespierre, the patriarch of modern day revolutionaries, said - "To punish the oppressors of humanity is benevolence; to be benevolent to them is barbarism." This, and this alone, is real Jacobinism.

# Political Battle Between Two Defence Ministers & Justice for Victims in Sri Lanka



By :Nirmanusan Balasundaram

### Elections and the Engineers of Mass Atrocities

Sri Lanka, a country currently under international scrutiny for its violation of international humanitarian law and human rights law during the final phase of the war in Mullivaaikaal in the country's north, is preparing for its seventh presidential election scheduled to be held on 8 January 2015.

Three consecutive resolutions concerning wartime mass atrocities and accountability in Sri Lanka were adopted respectively in March 2012, March 2013 and March 2014 at the UN Human Rights Council. In addition, two high-level detailed reports on war time atrocities and UN action in Sri Lanka have been published by the UN. These international steps have helped highlight the mass atrocities committed in Sri Lanka and the importance of addressing accountability and bringing perpetrators of these crimes to international justice.

Incumbent President Mahinda Rajapaksa, since coming to power in November 2005, has been the Minister of Defence and Commander in Chief of the armed forces, and is at the top of the chain of command responsible for mass atrocities committed by the country's armed forces. Currently, he is contesting for his third term of presidency.

Maithripala Sirisena, once in the same party as Rajapaksa has been acting Minister of Defence during the peak of the offensive military operations. He has held this position at least five times throughout the armed conflict between the Sri Lankan government armed forces and Liberation Tigers of Tamil Eelam (LTTE). In November 2014, he defected from the government to contest against President Rajapaksa under the banner of being a common opposition candidate. Having played a key role in the chain of command, not only is he also responsible for crimes committed by the armed forces, but he has and continues to be a frontline campaigner against international justice mechanisms.

During the last presidential election in January 2010 the main challenger to President Rajapaksa had been former Army Commander General Sarath Fonseka, the man in charge of the Sri Lankan army throughout the last phase of the war. While he had lost the presidential contest in 2010 he has re-emerged to pledge his support to the January 2015 presidential election common opposition candidate. Their camaraderie extends back to the war with the common opposition candidate having stated in an interview, "I was the Minister in Charge of Defence during the last two weeks of the war in which most of the leaders of the LTTE were killed with General Fonseka at the helm of the Army."

War victory and the execution of the last phase of the war seems to dominate the campaigns and propaganda of both main candidates in Sri Lanka's presidential election, whether it be for the presidential election of 2010 or that of 2015. Each candidate has repeatedly self-proclaimed themselves as the 'war hero' in order to attract Sinhala Buddhist voters, grasping at the 'war victory' card which often plays a crucial role in the Sinhala voters' mindset.

As for the ethnic Tamil voters, neither leading candidate are war heroes of any form, but rather perpetrators responsible for the death of thousands of Tamil civilians. The UN Panel of Experts (PoE) report published in April 2011 indicated that "there could have as many as 40,000 civilian deaths". The report further elaborated, "Only a proper investigation can lead to the identification of all of the victims and to the formulation of an accurate figure for the total number of civilian deaths." The UN internal review panel report published in November 2012 estimated that over 70,000 Tamil people were unaccounted for. The Bishop of Mannar Rayappu Joseph, after analysis of census statistics, came to the estimation that over 146,679 Tamil people in the Vanni were unaccounted for.

However, in Sri Lanka, the overwhelming majority of the Sinhala voters and the two main presidential candidates themselves, both of whom hold responsibilities in the chain of command in relation to mass atrocities, have not yet accepted the systematic killings of Tamil civilians.

Ironically though, expecting a close contest, both leading candidates are competing to get Tamil votes. President Rajapaksa visited Mullaiththeevu district, the very location where mass atrocities were committed during the final stages of the war, and campaigned asking the Tamil people to forget the past and vote for him. In an election rally in Jaffna he stated that "a known devil is better than an unknown angel." Both leading candidates even visited Bishop Rayappu Joseph to get his 'blessing'.

### The Chain of Command and ICC

Incumbent President Rajapaksa is currently facing possible western isolation due to his brutality and his governance style of the country, which seems to be bordering towards dictatorship. His strategy has been to use western pressure on Sri Lanka to maintain democracy and accountability as a tool in order to gain votes from the Sinhala masses.

Throughout the election campaign he has continued to present himself as a victim of 'international conspiracy' and 'international forces' wanting to take him and Sri Lanka's armed forces to the International Criminal Court (ICC). It should be noted that Sri Lanka is not a signatory to the Rome Statute. However, Sri Lanka's Minister of External Affairs has stated that based on recent experience, Sri Lanka can still be vulnerable to ICC jurisdiction.

The President in his address at the first election rally said that the Hague had enquired about the chain of command of the Sri Lankan armed forces and that it was a strong indication that some sections of the "international community" were trying to prosecute the heads of the Sri Lankan military establishments. He also added that the "Sri Lankan government will not bow down for foreign interventions in the matter of the war victory."

His speeches and campaigns have largely focused on claims of international conspiracies and war crimes charges against the Sri Lankan armed forces, and his determination to resist them.

In parallel, Jathika Hela Urumaya (JHU), an extremist Buddhist party and a key body backing the common opposition candidate expressed that both they and the common opposition candidate have agreed to oppose efforts to prosecute military authorities. General Secretary of JHU said, "We will not give room for international war crimes probe. Whether it is the President, the Defence Secretary (Gotabaya Rajapaksa), the then Service Commanders – Sarath Fonseka and Karannagoda or the likes of Shavindra Silva and Presanna Silva, we will not allow any of these people to be tried before the International Criminal Court (ICC)."

The election manifesto of the common opposition presidential candidate asserts that, "I will allow no international power to ill-treat or touch a single citizen of this country on account of the campaign to defeat terrorism". He has also said, "I will not allow President Rajapaksa, his family or any member of our armed forces to be taken before any international war crimes tribunal."

> Sri Lanka's history underlines consecutive governments have had a deliberate policy of destruction and degradation of the Tamil nation

It is important to note that common opposition candidate Maithripala Sirisena, himself an alleged perpetrator of mass atrocities, could face justice in the future regardless of current international climate which may seem supportive of him today. In fact, the very day he was sworn in as the Minister of Defence, over 1700 Tamil civilians were reported to have been killed and 3000 injured by Sri Lankan government shelling within the space of 48 hours. Thousands more were killed in the days that followed. The infamous white flag incident too took place, while Sirisena was serving as the Minister of Defence.

> the culture of impunity in Sri Lanka will remain unchanged regardless of the outcome of the election. The colour may change but the cage will remain the same.

In order to repel calls for an international investigation into wartime mass atrocities, Maithripala Sirisena stated that he will launch a domestic war crimes inquiry if he wins in the forthcoming election. An important question arises as to how an alleged perpetrator could establish a credible investigation mechanism and what form of justice the victims and survivors could expect from it. Infact, incumbent President Rajapaksa has to date already appointed a few domestic mechanisms with the inclusion of eminent international legal experts to handle the international pressure. However, these were not received well and instead were rather widely discredited by international actors who were already well aware of President Rajapaksa's intention and strategy behind these initiatives. For the survivors and victims of these crimes, the Rajapaksa regime symbolises tyranny and mass atrocities. They have appalling and unforgettable experiences of mass atrocities and broken promises not only of the current regime, but also of each successive previous regime, leading them to have no faith in any domestic justice mechanism.

*( Continued on page 28)*

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon.................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]
K.Durairajah [Greenford]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER Ltd**
Bank: **HSBC**
A/C: **02211556**
S/C: **40-07-04**

**ஒரு பேப்பர்**
**ORU PAPER**

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

*ஆசிரியர் குழு:*

*பிரித்தானியா*
**அ.இரவி - மணி - அகிலன் மாதவன்**

*கனடா*
**தயா - அரவிந்தன் - சிந்து**

*பொறுப்பாசிரியர்*
**- கோபி -**

*விளம்பரம்*
**அஜந்தா**

*அச்சு*
**தர்சினி (கனடா) - சுகன்யா**

*வடிவமைப்பு*
**மயூரன் - யுகன்**

*முகப்பு வடிவமைப்பு*
**seven zero graphics**

*விளம்பர வடிவமைப்பு*
**ரஜீவன் - மாயா - சாரங்கன்**

*தமிழ் எழுத்துரு உதவி*
**சுரதா யாழ்வாணன்**

*நிதி – நிர்வாகம்*
**அஜந்தா**

*வழங்கல்*
**உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்**

**உங்கள் தொடர்புகட்கு:**

தொலைபேசி (Tel)
**லண்டன் 020 7043 4310**
**கனடா 416 613 2850**

தொலைநகல் (Fax)
**லண்டன் 020 7043 4312**
**கனடா 416 438 7855**

*ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:*

**பணிமனை முகவரி**
**ORU PAPER**
**G11 LOMBARD HOUSE**
**2 PURLEY WAY**
**CROYDON, CR0 3JP**

*மின்னஞ்சல்:*
**info@orupaper.com**
*இணையம்:*
**www.orupaper.com**


*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# இலங்கைத் தேர்தல்: தமிழர்கள் இழந்த வாய்ப்பு!

## நடந்து முடிந்த தேர்தலின் முடிவுகள் குறித்து ஒரு மின்னல் வேகப் பார்வை

மைத்திரிபால சிறிசேனாவின் வெற்றி தமிழர்களின் வெற்றி அல்ல. அத்துடன் செய்த குற்றங்களுக்கு எந்த விதமான தீர்ப்பும் கிடைக்காமலேயே ராஜபட்சே அரியணையிலிருந்து விடைபெற்றுவிட்டார். இனி ராஜபட்சே அரசின் மீதான இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகூட மெல்ல மெல்ல காலவதியாகிவிடலாம். அதுதான் மக்களே தண்டித்துவிட்டார்களே! இப்போது அனைத்து இன மக்களின் ஆதரவைப் பெற்ற ஆட்சி அரியணை ஏறப்போகிறதே!!

ஆக, சிறிசேனாவின் தலைமையிலான ஆட்சியானது ஏற்கனவே நடந்துகொண்டிருக்கும் அமைப்பு ரீதியிலான இனப்படுகொலையை அமெரிக்க-இந்திய அரசுகளின் நல்லாசியுடன் தொடர்ந்து செய்யப்போகிறது. சிங்களப் பேரினவாதம் போர்க்கால அரசியலிலிருந்து சமாதான கால அரசியலுக்கு இடம்பெயர்ந்து புதிய விதிகளோடு தன் ஆட்டத்தை ஆரம்பிக்கும்.

இந்தத் தேர்தலை தமிழர் தரப்பு சரிவர கையாளவில்லை. வடக்கு மாகாணத்தை ஆளும் த.தே. கூட்டணியைப் பொறுத்தவரை, அது எந்த முடிவை எடுத்தால் தமிழர் தரப்புக்கு அது சாதகமானதாக சரியானதாக இருந்திருக்கும் என்கிற கேள்வி முறைப்படி எழுப்பப்படவுமில்லை, பதிலளிக்கப்படவுமில்லை.

த.தே.கூட்டணி சிறிசேனாவுக்கு ஆதரவளிக்க வேண்டியிருக்கிறது என்பதற்காக முன்வைக்கப்பட்ட காரணிகளில் சொல்லப்பட்ட உள்நாட்டு காரணிகளைவிட சொல்லப்படாத வெளிநாட்டு காரணிகளும் உண்டு. ஆனால் ராஜபட்சேவுக்கு எதிரான வாக்குகளை சிதறாமல் தடுத்து இனப்படுகொலையாளனை வீட்டுக்கு அனுப்பியதில் ஒரு சிறிய சந்தோஷம் மக்களுக்கு இருக்கவே செய்கிறது. அதாவது, ராஜபட்சேவை சாதாரண வாக்காளர்கள் தண்டித்திருக்கிறார்கள். அது ஒரு கணநேர மகிழ்ச்சி. சற்றே பழிதீர்த்த உணர்வு.

ஆனால் தமிழர் தரப்புக்கு இதைவிட சரியான மாற்று வியூகம் இருந்திருக்காதா? இருந்தது. ஆனால் அதைப் பற்றி சிந்திக்கும் திறனும் சிந்தித்திருந்தாலும் நடைமுறைப்படுத்தும் "அதிகாரமும்" த.தே.கூட்டணிக்கு இருந்திருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால் தமக்குப் பின்னால் உள்ள சர்வதேச சக்திகளான அமெரிக்க, இந்திய சக்திகளின் ஆசைக்கு அப்பால் செல்லக்கூடிய அதிகாரம் அதனிடம் இல்லை.

தேர்தல் என்பது அரசு அதிகாரத்துக்கு வருவதற்கான ஒரு வழிமுறை மட்டுமல்ல. ஒரு தரப்பைத் தோற்கடிப்பது அல்லது வேறு ஒரு தரப்பை வெற்றிப்பெறச்செய்வது ஆகியவை மட்டுமே தேர்தல் மூலமாக நாம் அடையக்கூடிய வாய்ப்புகள் அல்ல. இந்த இரு நோக்கங்களுக்கும் அப்பால் தேர்தல் வேறு சில வாய்ப்புகளையும் தருகிறது.

தேர்தலுக்கு வாக்குத்தீர்ப்பு (referendum) மதிப்பும் உண்டு. கடந்த வடக்கு மாகாணத் தேர்தலில் மக்கள் பெருவாரியாக த.தே.கூட்டணிக்கு வாக்களித்தது விக்னேஸ்வரனுக்காக அல்ல, ராஜபட்சேவை நிராகரிப்பதற்காக.

1977 தேர்தலில் தமிழர் கட்சிகள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன்மொழிந்து வாக்குகளைக் கேட்டன. தமிழர்கள் பெருவாரியாக அவர்களை தேர்ந்தெடுத்தார்கள். அது தமிழீழ தேசியத்துக்கு தமிழீழக் கோரிக்கைக்கு மக்கள் ஆதரவாக இருந்ததை வெளிப்படுத்தியது. அதுதான் பிறகு ஈழ அரசியலை மிதவாதிகளிடமிருந்து போராளிக் குழுக்களுக்கு மாற்றித்தந்தது. தமிழீழக் கோரிக்கை முதன்மையாக ஆனது. எனவே தேர்தலை ஒரு வாக்குத்தீர்ப்பாகவும் நாம் திட்டமிட்டு மாற்றமுடியும்.

கடந்த வடக்கு மாகாணத் தேர்தலின்போது, போருக்குப் பிந்தைய சூழலின் எல்லா கொடுமைகளையும் தாங்கிக்கொண்டு மக்கள் த.தே. கூட்டணிக்கு வாக்களித்தது ஏன்? விக்னேஸ்வரன்களால் விடுதலை கிடைக்கும் என்றா? அல்லது இனி எல்லாம் முடிந்துபோனது என்றா? இரண்டும் இல்லை, மக்கள் சிங்கள பேரினவாதத்துக்கு எதிராக தாங்கள் நிற்பதை மீண்டும் உறுதிப்படுத்தவிரும்பினார்கள். ராஜபட்சேயின் வடக்கின் வசந்தத்தையும் இந்தியாவின் "வீடுகட்டிக் கொடுக்கும் ராஜதந்திரத்தையும்" அவர்கள் நிராகரித்து தங்களுக்கு வேண்டியது சலுகைகள் அல்ல, அதிகாரம் என்பதை நிலைநாட்டினார்கள். சொத்தையாக இருந்தாலும்சரி, முன்பு புலிகளால் ஆதரிக்கப்பட்டவர்கள் என்பதால் த.தே. கூட்டணியின் வேட்பாளர்களை அவர்கள் வெற்றி பெறச்செய்தார்கள்.

அந்த வெற்றிக்குப் பிறகு த.தே.கூ என்ன செய்திருக்கவேண்டும்? ஒருபடி மேல்நோக்கி நகர்ந்து, தமிழர் தரப்பில் ஒரு குடியரசுத் தலைவர் வேட்பாளரை நிறுத்தியிருக்கவேண்டும். தெரிந்த சிங்களப் பிசாசினையும் தெரியாத சிங்களப் பிசாசினையும் தமிழர்கள் நிராகரிக்க அது வழி செய்திருக்கும். தமது சொந்த வேட்பாளர்களுக்கு பெருவாரியாக வாக்களிக்க தமிழர்களுக்கும் ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

அதாவது, தமிழர்கள் இந்தத் தருணத்திலும் தனித்துவத்துடனயே தங்கள் அரசியல் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த விரும்புகிறார்கள் என்பதை அது உலகறியச் செய்திருக்கும். இலங்கைத் தேர்தல் என்கிற ஒன்றுபட்ட இலங்கைக்கான ஓர் அமைப்புமுறையை அது எள்ளிநகையாடியிருக்கும்.

இதற்கெல்லாம் உடனடியாக பெரிய அளவுக்கு பலன் இருக்காது என்பது உண்மைதான். ஆனால் போருக்குப் பிந்தைய சூழலில், புலிகள் களத்தில் இல்லாத நிலையில், மக்கள் தங்களுடைய தேர்தலை வாக்குத்தீர்ப்பாக மாற்றியிருக்க முடியும் என்பது சாத்தியமே. அது ஏதோ ஒரு பின்னொரு காலத்திலாவது தமிழர் தரப்புக்கு பெரியளவுக்கு பேரம்பேசும்திறனை உருவாக்கியிருக்கலாம். தமிழர் வாக்குகளுக்கான சட்டபூர்வமதிப்பு உலகத்தால் கவனம் கொள்ளப்படவேண்டிய காலம் வரும்போது, அப்போது அது உதவியிருக்கும். குறைந்தபட்சம் இன்று இரு சிங்களத் தலைவர்களையும் நாங்கள் ஏற்கவில்லை என்பதை உறுதிசெய்யும் நடவடிக்கையாகவாவது அது பார்க்கப்பட்டிருக்கும். ஈழஎல்லைகள் இலங்கைத் தீவில் தனி எல்லைகளாக துலங்கியிருக்கும்.

ஆனால் தமிழர்கள் தரப்பில் சிலர் தேர்தல் புறக்கணிப்பை முன்வைத்தார்கள். தேர்தல் பங்கேற்போ தேர்தல் புறக்கணிப்போ இரண்டுமே அதனளவிலேயே பயன்தரக்கூடிய ஒன்றல்ல. அத்துடன், எல்லாத் தேர்தல்களையும் தேர்தல் புறக்கணிப்பாக மாற்றுவதும் சாத்தியமல்ல. புறக்கணிப்பை முன்வைப்பவர்கள் அதை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்களை கணக்கெடுக்கமறுக்கிறார்கள். தேர்தல் புறக்கணிப்பு என்பது ஒரு பிரமாஸ்திரம் போல. அதை அரிதாகவே பயன்படுத்தவேண்டும். ஒவ்வொரு தேர்தலையும் புறக்கணிக்கப்படுவதற்கான விஷயமாக மாற்ற நினைப்பவர்கள் தேர்தல் அரசியலின் சாத்தியப்பாடுகளையும் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள், மக்களின் மனநிலைகளையும் கருத்தில் கொள்ள மறுக்கிறார்கள்.

தமிழர்களின் வாக்குகள் குறித்தே கவலைப்படப்போவதில்லை என ராஜபட்சேயும் மைத்திரிபாலவும் முடிவெடுத்திருந்த நிலையில், தமிழர்கள் தேர்தல் புறக்கணிப்பு செய்திருந்தால் அதனால் எந்த பலனும் அவர்களுக்கு கிடைத்திருக்காது. அதைப் போல த.தே.கூட்டணியின் மைத்திரிபால ஆதரவு என்பது ஒரு பெரிய சரணாகதியாகவே தெரிகிறது. அது ஒரு பெரிய பின்னடைவுதான்.

எனவே தமக்கான வேட்பாளரை தமிழர் தரப்பு முன்னிறுத்தியிருக்கவேண்டும். வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு ஆதரவான வாக்கெடுப்பாக 1977 தேர்தல் நடந்ததுபோல, இந்தத் தேர்தலும் நமக்கான ஒரு வாக்குத்தீர்ப்பாக அமைந்திருக்கும். தமிழர்களின் அரசியல் அதிகாரத்தை முன்னிறுத்தக்கூடிய ஒரு தமிழரே தமிழர்கள் மத்தியில் வெற்றி பெறமுடியும் என்பதை உணர்த்தும் அரிய வாய்ப்பை தமிழர் தரப்பு இழந்துவிட்டது.

*- ஆழி செந்தில்நாதன்*

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்

## உயிரோட்டம் உள்ளதா வாழ்க்கையில்!

(அனைவருக்கும் என் உளங்கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.)

எல்லோருமே வாழ்க்கையில் மகிழ்ச்சியைத் தேடுகிறோம், ஒரு அர்த்தத்தைத் தேடுகிறோம், வெற்றியடைய ஆசைப்படுகிறோம். மகிழ்ச்சியும், அர்த்தமும், வெற்றியும் எது எது என்பது ஆளுக்கு ஆள் மாறுபடும் விஷயங்கள் என்றாலும் எல்லோருடைய தேடலும் அவற்றை நோக்கியே இருக்கின்றன. என்றேனும் ஒரு நாளில் வெற்றியடைவோம், வாழ்வில் அர்த்தம் கண்டு பிடிப்போம், மகிழ்ச்சியடைவோம் என்ற எதிர்பார்ப்பில் தினசரி வாழ்க்கையைக் கோட்டை விடும் முட்டாள்தனம் பலரிடம் இருக்கிறது.

பலருடைய தினசரி வாழ்க்கை எந்திரத்தனமாக இருந்து விடுகிறது. என்றோ வாழப்போகும் நல்லதொரு வாழ்க்கைக்கான ஓட்டப்பந்தயமாக இருந்து விடுகிறது. வாழ்கின்ற வாழ்க்கை சரிதானா என்ற சந்தேகம் அடிக்கடி வர அடுத்தவர்களைப் பார்த்து அவ்வப்போது மாற்றிக் கொள்கிறதாகி விடுகிறது. இயற்கையான ஆரம்ப இலக்குகள் மாறி பணம், புகழ், படாடோபம் என்ற இலக்குகள் பெரும்பாலானவர்களின் இலக்குகளாகி விடுகின்றன. இந்த இலக்குகளில் மகிழ்ச்சியும், அர்த்தமும், வெற்றியும் தேடும் போது பலருக்கும் ஏமாற்றமே மிஞ்சுகிறது.

உண்மையான மகிழ்ச்சி, அர்த்தம், வெற்றி இருக்கிறதா என்பதை அறிய ஒரு மனிதனின் தினசரி வாழ்க்கையைப் பார்ப்பது மிகச்சரியாக இருக்கும். காலத்தை மறந்து, செய்கின்ற வேலையில் ஐக்கியமாவது உண்டா? பெரிய செலவில்லாமல் ரசிக்கும் சின்னச் சின்ன விஷயங்கள் உண்டா? அடுத்தவர் பார்வைக்கு எப்படி இருக்கிறது என்று கவலைப்படாமல் உங்களுக்குப் பிடித்திருக்கிறது என்பதற்காகவே ஈடுபடும் விஷயங்கள் உண்டா? பெரும்பாலான நாட்களில் உற்சாகமாக எதிர்பார்க்கவும், செய்யவும் ஏதாவது புதுப்புது முயற்சிகள் உண்டா? இதில் ஓரிரண்டு கேள்விகளுக்காவது பதில் ஆம் என்று இருந்தால் உங்கள் வாழ்க்கை உயிரோட்டம் உள்ள வாழ்க்கை. உங்கள் வாழ்க்கை அர்த்தத்தோடும், மகிழ்ச்சியாகவும், வெற்றிகரமாகவும் போய்க் கொண்டிருக்கிறது என்று பொருள்.

அதற்கு எதிர்மாறாக உங்கள் தினசரி வாழ்க்கை இருந்து வந்தால் உங்கள் வாழ்க்கையில் உண்மையான உயிரோட்டம் இல்லை என்று பொருள். கேளிக்கைகளில் ஈடுபட்டால் தான் மகிழ்ச்சி கிடைக்கிறதா? தினசரி குடித்தால் தான் நிம்மதி கிடைக்கிறதா? அடுத்தவர்களைப் பற்றி வம்பு பேசி தான் பொழுது போகிறதா? அடுத்தவருடன் ஒப்பிட்டுப் பார்த்து மிஞ்ச முனைவதில் தான் தினமும் அதிக நாட்டம் செல்கிறதா? பொருளாதார இலாபம் இல்லா விட்டால் உங்களுக்கு மிக ஆர்வமுள்ளவற்றில் கூட கவனம் செலுத்த மறுக்கிறீர்களா? இதில் சிலவற்றிற்கு பதில் "ஆம்" என்றால் உங்கள் வாழ்க்கையில் ஓட்டம் இருக்கலாம், ஆனால் உயிர் இல்லை என்று பொருள்.

மனதுக்குப் பிடித்ததே வேலையாகவோ, தொழிலாகவோ அமையும் பாக்கியம் ஒருசிலருக்கே வாய்க்கிறது. பலருக்கு அப்படி அமைவதில்லை. அமைகின்ற வேலை உற்சாகமாக இல்லாத போது பொழுது போக்கு ஒன்றையாவது உற்சாகமாகவோ, உபயோகமாகவோ வைத்துக் கொள்வது மிக புத்திசாலித்தனமான அணுகுமுறை. வருமானத்திற்கு ஒரு தொழிலும், மனதிற்கு பிடித்ததாய் ஒரு நல்ல பொழுது போக்கும் அமைத்துக் கொண்டு உயிரோட்டம் உள்ள வாழ்க்கை வாழ்பவர்கள் நிறைய இருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் சிறிய அரசாங்க வேலையில் இருக்கிறார். அவர் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மிகுந்த அக்கறை உடையவர். அவர் இது வரை ஆயிரம் மரக்கன்றுகளுக்கு மேல் நட்டுள்ளார். அப்படி நடும் போதும் அதைப் பற்றி பேசும் போதும் அவர் முகத்தில் பொங்கும் பெருமிதம் பார்க்கவே அலாதியாக இருக்கும். இப்படி சிலர் சமூக சேவை எதிலாவது முழு மனதுடன் ஈடுபட்டு உயிரோட்டமாய் வாழ்க்கையை வைத்துக் கொள்கிறார்கள்.

எனவே உங்கள் வாழ்க்கையில் உயிரோட்டம் உள்ளதா என்பதை சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். மாற்றம் தேவையானால் மாற்றிக் கொள்ளுங்கள். அடுத்தவர் பார்வைக்கு வெற்றிகரமான வாழ்க்கையாய் தெரிந்து உள்ளுக்குள் வெறுமையை உணரும் வாழ்க்கையாக இருக்கும் அவலம் மட்டும் வேண்டவே வேண்டாம்.

*- என்.கணேசன்*

# ஆட்சி மாற்றமும் மேற்குலகமும்



**கோபி**
*ஒரு பேப்பர்*

நேற்று (ஜனவரி 8) இரவு அனைத்துலக உயிரோடைத்தமிழ் வானொலியில் தேர்தல் முடிவுகள் அறிவிப்பது தொடர்பான கருத்தாடல் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டிருந்தபோது, பத்து முப்பது மணியளவில் எரிக் சொல்ஹெய்ம் அனுப்பிய ருவிற்றர் செய்தி ஒன்றைக் காணமுடிந்தது. அக்குறுஞ் செய்தி இவ்வாறிருந்தது "Going to bed with a clear lead for opposition in #SriLanka postal votes. The country may write history tomorrow!". (தபால் மூலமான வாக்குகளில் எதிர்க்கட்சிகள் முன்னணியிலிருப்பது தெளிவாகியிருக்கும் நிலையில் நித்திரைக்குச் செல்கிறேன். நாளை அந்நாடு ஒரு சரித்திரத்தை எழுதக் கூடும்) விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கத்துக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளின்போது அனுசரணயாளராகவிருந்த நோர்வேயின் முன்னாள் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சர் சொல்ஹெய்ம்க்கு சிறிலங்காவின் ஆட்சிமாற்றத்தில் உள்ள அக்கறையை அல்லது விருப்பை இக்குறுஞ்செய்தி மூலம் அறியக் கூடியதாகவிருந்தது.

இன்று (ஜனவரி 9) காலையில் தேர்தல் முடிவுகள் வெளிவந்து மகிந்தவின் தோல்வி உறுதியான நிலையில், சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஜனவரி எட்டு எனத் திகதியிடப்பட்ட அமெரிக்க இராஜங்கச் செயலாளர் ஜோன் கெரி அவர்களது செய்தியினை இராஜங்கத் திணைக்களத்தின் இணையதளத்தில் பதிவேற்றியிருந்தமையை காண முடிந்தது. தேர்தல் சுமூகமான முறையில் நடந்தேறியமைக்காக தேர்தல் ஆணையாளர், பாதுகாப்புப் படையினர், சிவில் சமூகம் ஆகியவற்றுக்கு பாராட்டுத் தெரிவிப்பதாகவும், தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொணடு பதவி விலக முன்வந்தமைக்கு மகிந்த இராஜபக்சவிற்கு பாராட்டுத் தெரிவிப்பதாகவும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் அச்செய்தியில், புதிய அரசாங்கத்துடன் சேர்ந்து பணியாற்றுவதனை எதிர்பார்ப்பதாகவும், தேர்தல் பரப்புரைகளில் குறிப்பிட்டது போன்று சமாதானத்துடன் கூடியதும் எல்லோரையும் உள்ளடக்கியதுமான ஜனநாயக முறையில் இயங்குவதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவற்கு முன்வரவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

உலக நாடுகளில் தேர்தல் நடைபெற்று முடிவுகள் வெளிவரும்போதெல்லாம் இவ்வாறான வாழ்த்துச் செய்திகள் வெளியிடப்படும் நடைமுறை உள்ள போதிலும், சிறிலங்கா விடயத்தில் மேற்குலக சக்திகள் அதிக அக்கறை கொண்டிருந்தமையை இச்செய்திகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. தேர்தலுக்கு சில தினங்களுக்கு முன்னர் மகிந்தவுடன் தொலைபேசியில் பேசிய ஜோன் கெரி, தேர்தலில் மகிந்த தோல்வியுற்றால், இராணுவத்தைப் பயன்படுத்தி ஆட்சியில் நீடிக்க முயற்சிக்கவேண்டாம் என அவரை எச்சரித்ததாக உறுதிப்படுத்த முடியாத தகவல் ஒன்று உண்டு. முன்னர், இத்தேர்தல் தொடர்பாக, மேற்குநாடுகளின் கொள்கை வகுப்பாளர்களுக்கு நெருக்கமான சர்வதேச முரண்பாடுகளுக்கான மையம் (International Crisis Group) வெளியிட்ட அறிக்கையிலும், தேர்தலில் குழறுபடிகள் ஏற்படுத்துவதை தவிர்க்குமாறும், மகிந்த இராஜபக்ச தோல்வியுறும் பட்சத்தில், சுமூகமான முறையில் ஆட்சியை கையளிப்பதனை உறுதி செய்ய வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கப்பட்டிருக்கப்பட்டிருந்தது. இவ்விடயங்களில் மகிந்த இராஜபக்ச உடன்பட மறுக்கும் பட்சத்தில் வரும் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனிதவுரிமைச் சபையின் கூட்டத்தொடரில் சிறிலங்கா தொடர்பில் கடுமையான நிலைப்பாடு எடுக்கப்படும் சந்தர்ப்பம் இருப்பதாகவும் மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவற்றை வைத்துப் பார்க்கையில் தேர்தல் மூலம் மகிந்த இராஜபக்சவின் ஆட்சியினை அகற்ற முடியும் என்பதில் மேற்குலகச் சக்திகள் நம்பிக்கை கொண்டிருந்தன எனபதனை ஓரளவு ஊகித்துக் கொள்ள முடிகிறது. 'விக்கிலீக்ஸ்' இல் கசிய விடப்பட்டது போன்ற இராஜதந்திர வட்டாரங்களின் கேபிள்களின் உதவியின்றி இவ்விடயங்களில் வலுவான ஆதாரங்களை முன்வைப்பது சிரமமாகவிருக்கும். 'சர்வதேச்சதி' பற்றி அதிகமாகப் பேசிக் கொண்ட மகிந்த இராஜபக்ச தரப்பினால் கூட ஆட்சிமாற்றம் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பிற்கும் வெளிச்சக்திகளுக்கும் இடையிலிருந்த தொடர்புகள் பற்றிய நம்பத்தகுந்த ஆதாரங்கள் எதனையும் முன்வைக்க முடியவில்லை.

இம்முறை தேர்தல் பரப்புரைகளில் சிங்கள மொழியில் நிகழ்த்தப்பட்ட உரைகளை செவிமடுத்தால், அதில் அதிகமாக இடம்பெற்ற சொற் தொடர் 'ஜாதியாந்திர குமன்திரய' (International Conspiracy) என்பதாகவே இருக்கும். இதனுடைய தமிழாக்கம் 'சர்வதேசச் சதி' எனக்குறிப்பிடலாம். மகிந்த இராஜபக்சவிற்கான பரப்புரைகளில் எதிரணியினருக்கு ஆதரவு வழங்குவதில் சர்வதேச் சதியொன்று இருப்பதாகக் குற்றம் சாட்டி வந்தனர். தமது நாடு வளர்ச்சிப்பாதையில் செல்வதனை பொறுத்துக் கொள்ளாத வெளிச்சக்திகள் தமது அரசாங்கத்தை மாற்ற முனைவதாகவும். அவை மகிந்த இராஜபக்சவை அனைத்துலக குற்றவியல் நீதி மன்றத்தின் முன் நிறுத்த முனைவதாகவும் தேர்தல் மேடைகளில் பேசப்பட்டது. சிங்கள மக்களின் தேசியவாத உணர்வைத் தூண்டி அவர்களது வாக்குகளைச் சேகரிக்கும் வகையில் இப்பரப்புரைகள் அமைந்திருந்த போதிலும் இதில் ஓரளவு உண்மையிருக்கிறது என்பதனை விடயம் அறிந்தவர்கள் ஏற்றுக்கொள்வர்.

மகிந்த அணியின் சர்வதேசச் சதி பற்றிய குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்த எதிரணியினர் மேற்கு நாடுகள் சிறிலங்காவிற்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பதற்கு மகிந்த அரசாங்கத்தின் தவறான வெளியுறவுக் கொள்கைகளே காரணமாக இருப்பதாகவும், சர்வதேச சதி எதுவுமில்லை என தமது பிரச்சார மேடைகளில் கூறிவந்தனர். மகிந்த அரசாங்கம் புரிந்த இனப்படுகொலை, மனிதவுரிமை மீறல்கள் போர்க்குற்றம் காரணமாகவே மேற்குலகம் சிறிலங்கா மீது நடவடிக்கை எடுக்க முனைகிறது என்ற கருத்துடன் எதிர்க்கட்சி கூட்டமைப்பு உடனபடவில்லை. மாறாக, மகிந்த அரசாங்கத்தின் தவறான வெளிவிவகாரக் கொள்கைகளை குற்றம் சாட்டுவதன்மூலம் தம்மால் சர்வதேச அழுத்தங்களை எதிர்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையினை அவர்கள் வெளிப்படுத்தி வருகிறார்கள்.

பின் முள்ளிவாய்க்கால் காலத்தில், மேற்குநாடுகளின் தலைவர்கள், இராஜதந்திரிகள் பற்றிய அச்சம், வெறுப்பு என்பன சிங்கள மத்தியில் அதிகரித்து வந்தன. அதனை மூலதனமாக வைத்தே மகிந்த இராஜபக்ச தனது வாக்கு வங்கியைத் தக்க வைத்தது வந்தார். ஆனால் தவறான வெளிவிவகாரக் கொள்கை காரணமாகவே மேற்குலகம் இவ்வாறு நடந்துகொள்கிறது, தமது ஆட்சியில் சரியானவர்கள் இப்பொறுப்பை ஏற்பார்கள் எனக் கூறி சிங்கள மக்களின் அச்சத்தை தணிப்பதில் எதிர்க்கட்சிகளின் கூட்டணி ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறது.

**விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு துணை நின்ற மேற்குலக சக்திகள், தமிழ்மக்களை தேசிய இனம் என்ற நிலையிலிருந்து மத ரீதியான சிறுபான்மையினராக சிறிலங்காவின் தேசிய நீரோட்டத்தில் இணைப்பதனையே இலக்காகக் கொண்டிருக்கிறாரகள்.**

சிங்கள மக்கள சர்வதேச நாடுகளையிட்டு வெறுப்படைந்திருக்கிற நிலையில், தமிழ் மக்கள் மத்தியில் சர்வதேசம் பற்றிய நம்பிக்கை மென்மேலும் அதிகரித்து வருகிறது. மனிதவுரிமைச் சபையில் சிறிலங்கா தொடர்பில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களும், இறுதி யுத்தத்தின்போது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பாக சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணையும் இந்நிலையை தோற்றுவித்துள்ளது. சிங்களத் தரப்புகளுக்கு நேரெதிராகக் காணப்படும் இந்நிலைப்பாட்டினை வாய்ப்பாகக் கொண்டே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது அரசியல் நகர்வுகளை மேற்கொண்டு வருவதனைக் காணலாம். இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை சர்வதேச சக்திகளின் நெறிப்படுத்தலில் நடந்து கொள்ளும் நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. இதன் மூலம் தமிழ் மக்கள் அடையப்போகும் சாதக பாதக நிலை பற்றியே நாம் அதிகம் அக்கறைப்பட வேண்டியுள்ளது.

**இப்போது ஆட்சிமாற்ற முயற்சி வெற்றி பெற்றுள்ள மேற்குலகச் சக்திகள் சிறிலங்கா விடயத்தில் இனி எவ்வாறு நடந்து கொள்ளப் போகின்றன என்பதனை அடுத்த சிலமாதங்களில், குறிப்பாக மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ள ஐ.நா. மனிவுரிமை கூட்டத் தொடரின்போது அறிந்து கொள்ளலாம்.**

விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு துணை நின்ற மேற்குலக சக்திகள், தமிழ்மக்களை தேசிய இனம் என்ற நிலையிலிருந்து மத ரீதியான சிறுபான்மையினராக சிறிலங்காவின் தேசிய நீரோட்டத்தில் இணைப்பதனையே இலக்காகக் கொண்டிருக்கிறாரகள். இந்த முயற்சிக்குத் துணை நிற்பவர்களாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், புலம் பெயர் அமைப்புகளான உலகத்தமிழர் பேரவை, கனேடிய தமிழ் கொங்கிரஸ் போன்றவற்றினையும் பார்க்க வேண்டியுள்ளது.

இப்போது ஆட்சிமாற்ற முயற்சி வெற்றி பெற்றுள்ள மேற்குலகச் சக்திகள் சிறிலங்கா விடயத்தில் இனி எவ்வாறு நடந்து கொள்ளப் போகின்றன என்பதனை அடுத்த சிலமாதங்களில், குறிப்பாக மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ள ஐ.நா. மனிவுரிமை கூட்டத் தொடரின்போது அறிந்து கொள்ளலாம். இருப்பினும், புதிய அரசாங்கத்திற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்காக நடவடிக்கை எதுவும் எடுக்காது கால அவகாசம் வழங்கப்படும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

*கருத்துக்களுக்கு -*
*facebook.com/orupaper @orupaper*

## ஒரு பேப்பர்
கிடைக்குமிடங்கள்

| | |
|---|---|
| **New Malden** | |
| Ayngaran | 020 8949 6734 |
| Megaa Superstore | 020 8336 0061 |
| Vaaniyan | 020 8605 0434 |
| Murugan Kovil | 020 8942 4475 |
| Vaishna Superfoods | 020 8399 4488 |
| Stoneleigh Amman | 020 8393 8147 |
| **Tooting** | |
| Yhaal House | 020 8767 8585 |
| Rainbow Restaurant. | 020 8640 4230 |
| Selvarajah Gold house | 020 8767 3795 |
| Niru Con.Store | 020 8672 3200 |
| Ayngaran | 020 8540 1500 |
| Suvai Aruvi | 020 8543 6266 |
| Adchaya | 020 8540 8192 |
| **Croydon** | |
| Best Foods | 020 8684 6269 |
| Haran Bros | 020 8686 2552 |
| Chennai dosa | 020 8665 9192 |
| Eelam Video | 020 8664 8351 |
| Spice Land | 020 8667 1700 |
| **Lewisham** | |
| Chandra | 020 8333 8680 |
| Eelam Shop | 020 8690 6545 |
| Katpagam | 020 8694 8810 |
| AJ Video | 020 8691 8888 |
| Sivan Kovil | 020 8318 9844 |
| KRS Supermarket | 020 8297 9432 |
| Best Food | 020 8692 9811 |
| **Eastham** | |
| Seelans | 020 8471 5733 |
| Sakthi Cash & Carry | 020 8394 4560 |
| Murugan Temple | 020 8478 8433 |
| Station Super Store | 020 8503 4711 |
| Best Food | 020 8552 9578 |
| Akilan Enterprise | 020 8548 0033 |
| Anjappar | 020 8552 1155 |
| **Ilford** | |
| Vinnayagar Kovil | 020 8911 8934 |
| Nathan | 020 8514 1744 |
| Angels | 020 8553 0490 |
| Sri store ltd | 020 8553 7737 |
| **Edmonton** | |
| New Kannan Stores | 020 8884 4979 |
| Sayas | 020 8805 9529 |
| Nagapoosani Temple | 020 8884 3333 |
| **Walthamstow** | |
| Vinayagar Kovil | 020 8527 3819 |
| Kumarans | 020 7609 1912 |
| Prabas | 020 8509 3322 |
| **Harrow** | |
| Tsk food & Wine | 020 7622 4258 |
| North Harrow C&C | 020 8863 6160 |
| Prabhas | 020 8866 0977 |
| South Harrow F&W. | 020 8423 6321 |
| Best foods | 020 8423 9933 |
| Sambal Express | 020 8799 7171 |
| **Wembley** | |
| Malar Super Market | 020 8795 5797 |
| Ganapathy C & C | 020 8795 4627 |
| Best foods | 020 8900 0100 |
| Vahizan Disc | 020 8795 0648 |
| **Ealing** | |
| Amman kovil | 020 8810 0835 |
| **Greenford** | |
| Ambiha | 020 8813 0967 |
| **Coventry** | |
| Eellakanthan Temple | 02476663554 |
| **South hall** | |
| Thamilini C & C | 020 8606 9900 |
| Abi Fast Food | 0208 813 9494 |
| Palm Palace Restaurant | 020 8574 9209 |
| Spicy Palace Restaurant | 020 8574 4087 |
| Luxmys C & C | 020 8571 4599 |
| Tamilan C & C | 020 8561 8174 |
| Lady Margret | 020 8571 4434 |



இனிய பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
14.01.
2015
Happy
Pongal
15.01.2015
மாட்டுப் பொங்கல்
புத்தரிசிப் புதுப்பானை பொங்கலுடன் கதிரவனை வணங்கி! கொண்டாடுவோம் பொங்கலை பழையன கழிதலும்
புதியன புகுதலும் இயற்கையை மீறாமல் இருக்கும்படி கொண்டாடுவோம் இப்புத்தாண்டின் பொங்கலை
பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்(The Federation of Saiva (HINDU) Temples UK)
2-4, Bedford Road, Walthamstow, London, E174PX, Contact: 0208 527 3817 | 07956919511




Nisiposha
நிசிபோஷ
High Calcium
Enriched with Iron
Fortified with Zinc
High Protein
3* for £1.00
*200g x 3
Specialised processed cereal
சக்திக்கும்...
புத்திக்கும்....
இப்போது அனைத்து
தமிழ்க் கடைகளிலும் நிசிபோஷவைப்
பெற்றுக்கொள்ளலாம்

# சிறீலங்கா அரச தலைவர் தேர்தல் - பழிதீர்க்கும் உணர்வே தமிழ் மக்களிடம் உண்டு



**வேல்ஸ் இலிருந்து அருஷ்**

ஆறுஜோசியர்களை அழைத்துவந்த மகிந்தா ராஜபக்ச, அவர்களின் கணிப்புக்கு இணங்க இரண்டு வருடங்களுக்கு முன்னர் அரச தலைவர் தேர்தலை நடாத்தி அதில் தான் மூன்றாவது தடவை போட்டியிடுகின்றார். மகிந்தாவே வெற்றி பெறுவார் என ஆறு பேரும் கூறியதை நம்பி களமிறங்கிய மகிந்தாவுக்கு தற்போது தன் மீதும், தனது வெற்றியின் மீதும் சந்தேகம் எழுந்துள்ளது.

காலம் காலமாக சிறீலங்கா அரசில் பதவி வகித்து வந்த அரசியல் தலைவர்கள் அனைவரும் தமிழ் மக்களை பெருமளவில் படுகொலை செய்த போர்க்குற்றங்களை மேற்கொண்டவர்கள். எனினும் பிரதானமான போர்க்குற்றவாளியாக மகிந்த ராஜபக்சாவையே தமிழ் மக்கள் எண்ணுகின்றனர். அவரை பழி வாங்கவேண்டும் என்ற உணர்வே வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் மக்களின் மனங்களில் கொழுந்து விட்டு எரிகின்றது.

குழந்தைகள், வயோதிபர், பெண்கள் என்று கூட பார்க்காது பல ஆயிரம் தமிழ் மக்களை திட்டமிட்டு படுகொலை செய்ததுடன் பல ஆயிரம் இளைஞர்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து கடத்திச் சென்று படை முகாம்களில் வைத்து சித்திரவதை செய்தும் படுகொலை செய்திருந்தது மகிந்தா அரசு.

இந்த காயங்களை காலம் ஆற்றிவிடும் என்ற மகிந்தரின் கணக்கு தவறாகிப்போயுள்ளது. மாறாக பழிவாங்கும் உணர்வுகள் தமிழ் மனங்களில் எங்கும் வியாபித்துப்போயுள்ளது. உலகத்தின் வல்லரசுப் பேய்களுடன் சேர்ந்து நீ எம்மை அழிக்கலாம் என்றால் உன்னை அழிப்பதற்கு நான் ஏன் எந்த பேயுடனும் கூட்டுச்சேர முடியாது என்பது வன்னியில் தனது ஒட்டுமொத்த குடும்பத்தையும் பறிகொடுத்த பெண்மணியின் கருத்து.

தொலைக்காட்சியிலும், பத்திரிகையிலும், நேரிடையாகவும் தமிழ் மக்களிடம் வாக்குகளை வேண்டி நிற்கும் மகிந்தா ராஜபச்சாவை நோக்கி யாழில் இருக்கும் தமிழர் ஒருவர் கேட்கும் கேள்வி ஒன்றுதான். அதாவது கடத்திச் சென்றஎமதுபலஆயிரம்பிள்ளைகளைகொண்டு வந்து விட்டுவிடு நான் உனக்கு வாக்கு போடுகின்றேன் என்பது தான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவு மற்றும் முஸ்லீம் காங்கிரசின் விலகலுடன் மகிந்தவும் அவருடன் ஒட்டிக்கொண்டிருக்கும் ஒட்டுக் குழுக்களும் ஆட்டம் கண்டுள்ளன. தற்போது தாம் தப்பிப்பிழைப்பதற்காக அவர்கள் போராடிக்கொண்டிருக்கும் போது மூழ்கும் கப்பலில் இருந்து எலிகள் ஒடுவதுபோல அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் தலை தெறிக்க ஓடுகின்றனர்.

ஆனால் தமிழினத்திற்காக குரல்கொடுக்கும் பிரதிநிதிகள், அரசியல் தலைவர்கள், அமைப்புக்கள் மற்றும் ஆய்வாளர்களிடம் பல்வேறு பட்ட கருத்துக்கள் உண்டு.

இந்த தேர்தலை புறக்கணிப்பதா அல்லது வாக்குகளை எமது இராஜதந்திரத்திற்காக பயன்படுத்துவதா என்பதே தற்போதைய முதன்மையான கேள்வி?

தேர்தலை புறக்கணிப்பது என்பது முன்னர் எதற்காக எடுக்கப்பட்ட முடிவு என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். 2005 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் அந்த முடிவை எடுத்தபோது அதன் மூலம் ஒரு தரப்பை வீழ்த்துவதே அவர்களின் குறிக்கோளாக இருந்தது.

ஆனால் 1994 ஆம் ஆண்டு சந்திரிக்கா தேர்தலில் நின்றபோது விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு வேறு கோணத்தில் இருந்தது. அதனை அவர்கள் தமது அதிகாரபூர்வ ஏடான விடுதலைப் புலிகள் ஏட்டில் தெரிவித்தும் இருந்தனர்.

அதாவது அரசியல் கொள்கைகளும், வெளியுறவுக் கொள்கைகளும் ஏன் பாதுகாப்பு கொள்கைகளும் கூட சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்படுவதுண்டு. அதுவே உலக நியதி நாம் தப்பிப் பிழைப்பதற்காக வழியும் அதுவே. புறக்கணிக்கவேண்டும் என 10 வருடங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானத்தை தற்போதும் அப்படியேபின்பற்ற வேண்டுமா? என்பதை காலமும் சூழ்நிலையும் தான் தீர்மானிக்கும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்த வரையில் மகிந்தாவை தவிர யாரையும் ஆதரிக்கலாம் அல்லது தேர்தலை புறக்கணிக்கலாமே தவிர மகிந்தாவை ஆதரிக்க முடியாது. அதற்கான காரணம் வெளிப்படையானது. அவர் கரங்களில் உள்ள தமிழ் மக்களின் குருதி இன்னும் காயவில்லை. தமிழ் மக்கள் மீதான போரை அனுமதித்த ஐக்கிய நாடுகள் சபை கூட பின்னர் 40,000 தமிழ் மக்கள் கொல்லப்பட்டதை ஏற்றுக் கொண்டுள்ளது. அதாவது ஐ.நாவின் பார்வையில் அவர் ஒரு போர்க்குற்றவாளி.

அது தவிர போரில் பாதிக்கப்பட்ட சாதாரண தமிழ் மக்களின் நிலையில் இருந்து சிங்கள தேசத்தை பார்க்கவேண்டிய தேவையும் அவர்களுக்கு உண்டு.

ஏறத்தாள ஐந்து வருடங்கள் ஆகியும் ஐக்கிய நாடுகள் சபையும், அனைத்துலக சமூகமும் தமிழ் மக்களுக்கான நீதியை பெற்றுத்தரவில்லை. தற்போதைய ஐ.நாவின் நகர்வு கூட ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும், தமிழருமான நவ நீதம்பிள்ளை அவர்களின் அழுத்தம் காரணமாகவே கொண்டுவரப்பட்டுள்ளது.

போர் உக்கிரமாக இடம்பெற்றபோது சிறீலங்காவுக்கு வருகைதந்த ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் லூயிஸ் ஆபர் கூட சிறீலங்கா அரசு மீது ஒரு அழுத்தத்தை கொண்டுவர முன்வரவில்லை. அன்று அவ்வாறு நிகழ்ந்திருந்தால் பல ஆயிரம் உயிர்களை அவர் காப்பாற்றியிருக்கலாம்.

ஆனால் ஐ.நாவும், இந்தியாவும் சிறீலங்காவின் போரை ஆதரித்து கைகட்டி நின்றன. எனினும் படுகொலைகள் நிகழ்ந்த பின்னர் போர்க்குற்றம் என்று கூறி விசாரணைகளை மேற்கொள்வதாக மேற்குலகம் பேசிவருகின்றபோதும், அது தொடர்பில் அவர்களின் வேகம் நத்தை வேகத்தைவிட மந்தமாகவே உள்ளது.

எனினும் அனைத்துலக குற்றவியல் நீதிமன்ற (The International Criminal Court) உடன்பாட்டில் தான் கையெழுத்திடவில்லை எனவே தன்னை தண்டிக்க முடியாது என்ற நம்பிக்கையில் மிதக்கின்றது சிறீலங்கா அரசு. அதற்கு ஆதரவான உதவிகளை இந்திய வழங்கி வருகின்றது.

கடந்த ஐம்பது வருடங்களில் உலகில் இடம்பெற்ற மிகப்பெரும் படுகொலைகளில் 2009 ஆம் ஆண்டில் இடம்பெற்ற படுகொலைகள் மிகவும் பாரதூரமானவை. ஆனால் அனைத்துலக சமூகமோ, பிராந்திய வல்லரசுகளோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையோ அதனைக் கண்டுகொள்ளவில்லை.

எனவே தான் சிறீலங்காவின் போர்க்குற்றங்களுக்கு எம்மால் தண்டனை வழங்கமுடியாதா? என்ற தமிழ் மக்களின் ஆதங்கம் இன்று மிகப் பெரும் ஒரு பழிவாங்கும் உணர்வாக மாற்றம் பெற்றுள்ளது. தற்போதைய அரசை பதவியில் இருந்து தூக்கி எறிவதன் மூலம் அவர்களுக்கான முதலாவது தண்டனையை வழங்க வேண்டும் என்பது தமிழ் இனத்தின் தற்போதைய நகர்வு. எந்த பதவியை அடைவதற்காகவும், அதனை தக்கவைப்பதற்காகவும் அவர்கள் தமிழ் மக்களை பெருமளவில் படுகொலை செய்தார்களோ அதனை பிடுங்குவது தான் முதலாவதுநகர்வு.அதன்பின்னர்தண்டனையைஅனைத்துலக சமூகம் மேற்கொள்ள வேண்டும்.

மகிந்தா ராஜபக்சா மேற்குலகத்திற்கு எதிரானவராக இருந்தால் அவர் இந்தியாவுக்கு ஆதரவானவர் என்பதே அதன் பொருள். எதிரணி வேட்பாளர்கள் மேற்குலகத்திற்கு ஆதரவானவர்களாக இருந்தால் அவர்கள் இந்தியாவுக்கு எதிரானவர்கள் என்பதே அதன் அர்த்தம்.

இந்து சமுத்திரப்பிராந்தியத்தினுள் மேற்குலகத்தை அனுமதிப்பதற்கு இந்தியா விரும்பப் போவதில்லை. அதற்கான காரணம் நாம் அறிந்தவையே அதாவது இந்தியா, சீனா என்ற இரு பெரும் தேசங்கள் பல சிறிய தேசங்களாக உருமாற்றம் அடைவதே மேற்குலகத்தின் உள் நுளைவின் விளைவாகும். இது உடனடியான நடவடிக்கையாக அல்லாத போதும் நீண்ட காலத்திட்டம் என்பது அதுவே.

தேர்தலைப் புறக்கணிப்பதன் மூலம் மேற்குலகம் எம்மை கண்டுகொள்ளுமா அல்லது எம்மை அங்கீகரிக்குமா என்பதற்கான விடைகள் யாரிடமும் இல்லை. ஏனெனில் வட்டுக் கோட்டை தீர்மானம் மீதான வாக்கெடுப்பு மற்றும்நாடுகடந்ததமிழீழ அரசுக்கானதேர்தல் என பல தேர்தல்களில் தமது நோக்கத்தையும், ஒற்றுமையையும்புலம்பெயர் சமூகம்முன்னரே தெளிவாக வெளிக்காட்டியிருந்தது.

ஆயுதப்போராட்டம், அதன் பின்னர் திம்பு பேச்சு, இந்திய இலங்கை உடன்படிக்கை, இந்திய இராணுவத்தின் வருகை, ஆயுத ஒப்படைப்பு, தியாகி திலீபன் கையில் எடுத்த அகிம்சைப் போர், விடுதலைப்புலிகள் - பிரேமதாசா அரசு பேச்சுவார்த்தை, நோர்வேயின் அனுசரணையுடனான பேச்சுவார்த்தை என்பன விடுதலைப்போர் சந்தித்த பல வடிவங்களாகும்.

இந்த மாற்றங்கள் அனைத்தும் கால சூழ்நிலைக்கு தக்கவாறு எடுக்கப்பட்ட நகர்வுகளே தவிர போராட்ட இலட்சியத்தின் மாற்றங்கள் அல்ல.

ஆனால் தற்போது விடுதலைப்புலிகள் அற்ற நிலையில் எந்த முடிவைஎடுப்பது என்ற தடுமாற்றங்களும், குழப்பங்களும் பலரிடம் உண்டு. தற்போதைய தேர்தலில் தமிழ் மக்களின் பங்கு தொடர்பான முரன்பட்ட கருத்துக்களும் அதன் விளைவாகவே ஏற்பட்டுள்ளது.

ஆனால் தமிழ் மக்களிடம் காணப்படும் உணர்வு ஒன்று தான். அது பழிதீர்க்கும் உணர்வு, தண்டனை வழங்கும் உணர்வு. அனைத்துலக சமூகத்தால் ஏமாற்றப்பட்டு, புறக்கணிக்கப்பட்ட விளைவுகளின் உள்ளக்குமுறல்கள். அனைத்துலக சமூகத்தினால் புறக்கணிக்கப்பட்ட நீதியை தற்போது தமிழ் மக்கள் கையில் எடுத்துள்ளனர்.

பெரும்பாலான தமிழ் மக்கள் சிறீலங்காவின் அரச தலைவர் தேர்தல் தொடர்பில் அலட்டிக் கொள்வதில்லை ஆனால் வாக்களிக்கச் செல்லும் சொற்ப தமிழ் மக்களிடமும் பழிவாங்கும் உணர்வே மேலோங்கியிருக்கும் என்பதே யதார்த்தமானது. அதன் விளைவு தேர்தல் முடிவுகளில் தெரிந்துவிடும்.

*நன்றி - ஈழம் ஈ நியூஸ்*

CARLTON LEISURE
Worldwide Travel & Tours
LOW SEASON OFFER

| | | | |
|---|---|---|---|
| TORONTO | fr£421 | DUBAI | fr£245 |
| VANCOUVER | fr£439 | SINGAPORE | fr£457 |
| CALGARY | fr£456 | BANGKOK | fr£438 |
| NEW YORK | fr£455 | KUALA LUMPUR | fr£438 |

Low season fares are from and include taxes, subject to availability & conditions apply.
Hundreds of airlines and thousands of destinations worldwide
Book online@ www.carltonleisure.com

SPECIAL FARES
30KG / 40KG

| | ETIHAD | Emirates | OMAN AIR | QATAR | SriLankan |
|---|---|---|---|---|---|
| COLOMBO | £438 | £502 | £422 | £468 | £485 |
| CHENNAI | £415 | £411 | £415 | £395 | £421 |

INCLUDING TAXES
Book By 14 Jan
Low season fares are from and include taxes, subject to availability & conditions apply.

இலங்கைக்கு விமானச்சீட்டுக்கள் விற்பதில் முதல் இடத்தில் இருக்கும் பிரயாண முகவர்

RAVNERS LANE 020 8426 1266
ILFORD 020 8554 4200
EAST HAM 020 8552 6125
TOOTING 020 8672 5757

# என்னத்தச் சொல்ல...

**சுகி**
*(ஒரு பேப்பருக்காக)*

என்னத்தை பட்டுத் தொலைச்சாலும், எழுதிக் கிழிச்சாலும், ஏறுகிறது தான் ஏறும். ஆணி நல்லா இருந்தாலும், மரமும் பசும் மரமாய் இருக்க வேணுமே. யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்பது போல, மகாராசாக்கள் இளவயதில் போய் சேர்ந்து விட்டார்கள், இப்பொழுதும் அவர்கள் விட்டு சென்ற அந்தப்புள்ளி, இடம், காலம், ஏவல் அறிந்து, சதுரங்க விளையாட்டில் செக் என்று சொல்வது போல சொல்லி விட்டு, தாம் அழிந்தாலும், தமிழீழக் கோரிக்கையையும், தமிழரின் தலையான அபிலாசைகளையும், அடகு வைக்காது, ம்... சீ.. உங்களுக்கேன் தேசியக்கொடியும், தமிழீழமும் என்று அடுத்தவன், காறி துப்பாமல், உலகமே உள்ளத்தின் உறுதியும், கொண்ட கொள்கையில் உள்ள பற்றும் கண்டு தமக்குள் வியக்கும் வண்ணம் வரலாறு ஆனார்கள்.

அவர்கள் அழிவில், மேற்குலற்கு எவ்வளவு பங்குள்ளதோ, அதற்கு சரிசமமான பங்கு, சொல்லப்பட்ட எமது தமிழ் அரசியல் வாதிகளுக்கும் உள்ளது. அது வரலாற்றில் பதியப்படும், மாணவர்கள் ஒருகாலத்தில், இதையும் மேற்படிப்புக்கு ஆய்வாக எடுத்து, அக்கு வேறு, ஆணி வேறாக பிரிந்து ஆராய்ச்சி செய்யும் போது, அழிவின் ஆரம்பப்படியாய் இருந்தவன், ஆப்பு வைத்தவன், கூடியிருந்தே குழிபறித்தவன், ஓடு மீன் ஓடி, உறு மீன் வரும் வரை வாடியிருக்குமாம் கொக்கு என்று வாடியிருந்த மேற்குலகிற்கு, அகப்பட்ட உறுமீன், என்று விரிவான விளக்கங்கள் வரும். அது வரை அழித்தவன், சிங்களத்தின் ஆட்சியில் இருந்தவன், அழிக்கப்பட்டவர்கள் தமிழ்ர்கள் என்று அரையும், குறையுமாய் விளங்கிக் கொள்வோம். சிங்களவர்கள் தமிழ் நண்பர்களைப் பற்றி கதைக்கும் போது, ' அவன் தமிழன், ஆனாலும் நல்லவன் என்று சொல்வதைக் கேட்ட அனுபவம் எத்தனை பேருக்கு உள்ளது.

இங்கு அடிப்படையில் பிழை உள்ளது. சிங்கள தேசம், தமிழ்த்தேசத்தை புரிதலில் தவறு உள்ளது. அதை, அத்தேசத்தில் அபிலாசைகளை, அவர்களை பிரதிநிதிப்படுத்தும் அரசியல் வாதிகள் தமக்கு அரசியல் சார்பான அரசியல் ஆக்குகிறார்கள். நான்தான் தமிழனை அழித்தேன், இல்லை நான் தான் அழித்தேன் என்று மார் தட்டுகிறார்கள். மொத்தத்தில் தமிழனுக்கு நன்மை செய்வதில் சிங்கள் அரசியல் வாதிகளுக்கு நாட்டம் இல்லை, அது சிங்கள தேசத்திடமும் இல்லை. வரும் காலத்திலும் அழிப்பது சிங்களமாகவும், அழிக்கப்படுவது தமிழனாகவுமே தான் இருக்கப்போகிறது அதில் மாற்றம் இல்லை.

இப்போது நடந்த தேர்தலில் தமிழர்கள் மகிந்தாவுக்கு எதிராக வாக்களித்திருந்தால் அது இன்னொருவருக்கு சார்பான வாக்கு என்பதை விட, அவர்கள் தமது எதிர்ப்பை காட்டுவதற்கான சந்தர்பமாக இத்தேர்தலைப் பாவித்திருக்கிறார்கள் என்றே பார்க்க வேண்டும். இதை ஆங்கிலத்தில் React என்பார்கள். அதாவது ஒரு தாக்கத்திற்கான மறுதாக்கம். ஆனால் அரசியலில் எமக்கு வேண்டியது. புரோஅக்ற் அதாவது ஒரு தாக்கம் வரும் முதல், வர இருக்கும் தாக்கத்தை எதிர்கொள்ளும் செயல்பாடு. அதற்கு வரும் தாக்கத்தை புரிந்து கொண்டு, திட்டமிட்டு, ஒருமித்த குரலில் அதை எதிர் கொள்ளும் அறிவு, ஆற்றல் இருக்க வேண்டும்.

இந்த சந்தர்பத்தில் பார்த்தோமேயானால் மேற்குலகு ஏன் மகிந்தாவை மாற்ற நினைகிறது ? தமிழனுக்கு கெடுதல் செய்ததாலேயா அல்லது அவ்வரசின் வெளிநாட்டு வர்த்தக வியாபார கொள்கைகள் சீனாவின் பக்கம் சார்ந்து இருப்பதாலா என்று சிந்தித்தால், இரண்டாவது தான் பதில் என்பது அனைத்து தமிழருக்கும் தெரியும். மகிந்தா தொடர்ந்தும் இருந்தால், தொடர்ந்து ஆதரவளிக்கும் சிங்கள தேசத்தை உடைப்பதற்கு தமிழ் மக்களின் ஆதரவை வேண்டும் நிலை, மேற்குலகிற்கு தொடர்ந்தும் இருந்திருக்கும். அதை நாம் எமது குறுகிய பழிவாங்கும், மறுதாக்கத்தை காட்டுவதற்கு பாவிக்கும் போது. வரும் தாக்கமாக, புதிய அரசை எதிர் கொள்ளும் புரிதலை இழந்து விடுகிறோம். வரும் அரசு மேற்குலகிற்கு சார்பானதாக வருவதால் அவர்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் அரசாக இருக்கும். இனி தமிழைப் பாவிக்கும் தேவை மேற்குலகிற்கு இல்லாமல் போய்விடும். எனவே எமது நிலை. கையறு நிலைதான்.

பதவியில் இருக்கும் தமிழ் அரசியல் வாதிகளில் அனந்தி, சிவாஜிலிங்கம். ரவிகரன் ஆகிய மூன்று அரசியல் வாதிகள் மட்டுமே இந்தத் தேர்தலைப் புறக்கணித்தார்கள். ஆனால் மற்ற இரண்டு பேரையும் விட அனந்தி சசிதரனுக்கு மட்டுமே இதையிட்டு நெருகடிகள் ஏற்பட்டதோடு, பரவலாக பேசப்பட்டது. அரசியலில், தமிழ் பெண் போராளிகளுக்கு வெளியில், தமிழ் பெண்கள் அரசியலில் ஈடுபடுவது என்பது தாயகத்திலும், வெளிநாட்டிலும் மிகக்குறைவு. அதையும் மீறி ஈடுபடும் பெண்களுக்கு எமது தமிழ் சமூகத்தால் வரும் எதிர்ப்பு ஆண்களுக்கு வரும் எதிர்பை விட வித்தியாசமானது. அவதானித்து பார்த்தால் பெண்கள் சொல்லும் கருத்தை கருத்தால், எதிர்கொள்வதை விடுத்து, தனிப்பட்ட மிரட்டல், போன்றவற்றில் ஈடுபடுகிறார்கள். ஒரு கட்சியில் கீழ் உறுப்பினராக இருந்தால், கட்சி உடன்படும் அனைத்திற்கும் உடன்படவேண்டும் என்ற அவசியம் இல்லை.

இங்கு வெளிநாட்டில் கூட, நாடுகடந்த அரசின் பெண் அமைச்சர் ஒருவர், தொலைகாட்சியில் வந்த கலந்துரையாடல் ஒன்றை ஒரு சமூக இணையத்தளம் வீடியோ இணைப்பின் முலம் விமர்ச்சிக்கும் போது, “ஒரு பக்கம் பார்கிறா, ஒரு கண்ணைச் சாய்கிறா” என்று ஒரு சினிமா பாடலை அதில் போட்டிருந்தது. இப்படியான விமர்சனங்கள், ஒரு போராடும் இனத்திற்கு அரசியல் விழிப்புணர்வை தராது. அரசியலில் பெண்கள் வரும் போது, உங்கள் விமர்சனத்தை ஆக்க பூர்வமாக வையுங்கள். ஒருவரும் பிறக்கும் போது அரசியல் அறிவுடன் பிறப்பதில்லை. வல்லவனுக்கு வல்லவன் வையத்தில் உண்டு. கருத்தை கருத்தால் எதிர் கொள்ளுங்கள். பெண்களின் கருத்துகளை எதிர்கொள்ளும் போது, கருத்தை விட அவர்களின் தனிப்பட்ட விடையங்களைப் பற்றி கதைப்பதுதான் அதிகமாக உள்ளது. ஓரிரு தடவை இப்பத்திரிகை கூட அப்பிடியான பிழைகனை ஆரம்பத்தில் விட்டிருந்தது.

> **பதவியில் இருக்கும் தமிழ் அரசியல் வாதிகளில் அனந்தி, சிவாஜிலிங்கம். ரவிகரன் ஆகிய மூன்று அரசியல் வாதிகள் மட்டுமே இந்தத் தேர்தலைப் புறக்கணித்தார்கள். ஆனால் மற்ற இரண்டு பேரையும் விட அனந்தி சசிதரனுக்கு மட்டுமே இதையிட்டு நெருகடிகள் ஏற்பட்டதோடு, பரவலாக பேசப்பட்டது.**

லண்டனின், ஒரு தமிழ் நிறுவனத்தின் கூட்டத்திற்கு போய் இருந்த போது, முன்வரிசையில் புடவை கட்டி, காலுக்கு மேல் கால் போட்டு அமர்திருந்தேன். அப்போது எனக்கு பக்த்தில் இருந்தவர் சொன்னார். அக் கூட்டத்தின் தலைவருக்கு, பெண்கள் காலுக்கு மேல் கால் போட்டுக்கு கொண்டு, முன்னுக்கு இருப்பது பிடிக்காது என்று! நான் அதிர்ச்சியை, நகை சுவையால் மறைந்துக் கொண்டு, அது எனக்கு பரவாயில்லை, ஏனெனில் “நான் எனது காலுக்கு மேல் தான் காலை போட்டுள்ளேன் இதில் யாருக்கும் தொந்தரவு தரவில்லை. என்றேன்”. இது போல இன்னொரு நிகழ்ச்சியில் நீங்கள் ஏன் புடவை கட்டிவரவில்லை என்று ஒருவர் கேட்டார், அவரிடம் சொன்னேன் “நீங்கள் வேட்டி ஏன் அணிந்து வரவில்லை என்று யோசியுங்கள், நான் உங்களின் கேள்விக்கு விடை சொல்லுகிறேன் என்று”.பெண்கள் பொது வேலைக்கு வரும் போது அவர்கள்மேல் உள்ள எதிர்பார்ப்பும், விமர்சனமும் ஆண்களை விட அதிகமாகவும், எதிர்மறையான தாகவுமே அதிகமாக உள்ளது. இது ஒரு விடுதலை அரசியலுக்கு ஏற்றதல்ல.

MASS GLOBAL SHIPPING
Sea - Air - Road & Ticketing , Serving all Communities
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK
* Packers * Movers * Shippers
Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers
We Offer the Best Services than all the Other in the trade!

உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதகாப்பாகவும் துரிதமாகவும் குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.



Special rates for Containers and Machinery
4 Collection Points :
Harrow
Watford
Knightsbridege
Croydon
T-chest Box சென்னைக்கு அனுப்ப £40 மட்டுமே
ஒரு T-chest Box அனுப்ப £40 இரண்டு T-chest Box அனுப்ப £30
FREIGHT ONLY £15.00
FREIGHT AND BOX £15.00
(Volume 4.5Cu.ft)
Wooden boxes available
Call - 0208 3862314
Hot Line 24/7- 079 4010 8177
Local Collection Charge £10.00 upto Hounslow. Within M1 collection charge £15.00 All other area's we will offer the best rates
MASS GLOBAL SHIPPING
N0 58 THE ARCHES, HARROW, HA2 8AA
E-Mail: info@massshipping.com, Web : www.massshipping.com
*Condition Apply - No hidden charges - No bogus promotions

New and used shop shelving
For all your shop shelving and refrigeration needs please call or visit our show room for a free quote and see how we can help

Gondola shelving
Wall shelving
Magazine shelving
Veg displays
Shopping baskets
Shelving4Shops.co.uk
01455 221512
New and refurbished refrigeration

Cold freeze specialise in the installation of new and refurbished refrigeration
Bottle fridges
Dairy cabinets
Multideck chillers
coldfreeze.co.uk refrigeration
with lots to choose from our Hinckley site or visit our web site
Unit A1, Asfare Business Park, Hinckley Road, Wolvey, Leicestershire LE10 3JG

# அவதூறுகளும் பொய்களும் நிறைந்திருந்த தேர்தல் பரப்புரை ஜிரிவியும் தன்பங்கினைச் செய்தது...




**தே.இரவிசங்கர்**

தேர்தல் பரப்புரைகளில் அவதூறுகளும், பொய்களும், உணர்ச்சி வசப்பட்ட பேச்சுகளுமாக மக்களை ஏமாற்றி வாக்குபெற முனைவது ஒன்றும் புதுமையான விடயமல்ல. ஆனால் இம்முறை நடைபெற்ற சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தலில் மேற்கொள்ளப்பட்ட பரப்புரை இலங்கைத் தீவின் தேர்தல் வரலாற்றில் மட்டுமல்லாது உலக நாடுகளில் நடைபெறும் தேர்தல் பரப்புரைகள் மத்தியிலும் புதிய சாதனையைப் படைத்திருக்கிறது. மேடைப் பேச்சாளர்கள் தாங்கள் பொய்யைத் தவிர வேறெதனையும் கூறப்போவதில்லை என உறுதிப்பிரமாணம் எடுத்துவிட்டு வந்தவர்கள் போல் ஆளுக்காள் பொய் கூறி வந்தார்கள். மேடைப் பேச்சுகளில்தான் இவ்வாறு இருந்தது என்றில்லாமல், இணையதளங்கள், சமூக வலையமைப்புகள் என எல்லாவிடங்களிலும் இந்தக் கொடுமை நடந்தேறியது.

மகிந்த தரப்பு மேடைகளில் விமல் வீரவன்ச நான் இனவாதம் தவிர வேறேதும் பேசமாட்டேன் என்பதுபோல் நடந்துகொண்டார். அவரது பேச்சுகளில் சுரேன் சுரேந்திரன் புலம்பெயர் புலியாக்கப்பட்டார். ஐரோப்பா எங்கும் புலிகள் அணிவகுத்து நிற்பதாகவும் மைத்திரி பதவிக்கு வந்தால் விமானமேறி நேரே இங்கு வந்துவிடுவார்கள் என சிங்கள வாக்காளர்களை பயமுறுத்தினார். மைத்திரியின் மேடைகளில் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க புகுந்து விளையாடிக் கொண்டிருந்தார். தேர்தலில் போட்டியிடுகிற சிங்களத்தரப்புகளில் இவ்வாறு நடந்ததென்றால், மைத்திரிக்கு பல்லக்குத் தூக்கும் தமிழ்தேசியக் கூட்டமைப்புத் தரப்பிலிருந்தும் மோசடியான பிரச்சாரங்களுக்கு குறைவிருக்கவில்லை. தேர்தலை புறக்கணிப்புச் செய்யுமாறு கோருபவர்களை அவதூறு செய்வதில் இவர்கள் திருப்தியடைந்து கொண்டார்கள்.

### ஜேவிபி நியூஸ்

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த இராஜபக்சவை வெல்ல வைப்பதற்காகவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலை புறக்கணிக்குமாறு கோருவதாகவும் அதற்காக மகிந்தவிடம் பணம் பெற்றதாகவும் ஜேவிபி நியுஸ் என்ற அநாமதேயங்களால் நடாத்தப்படும் இணையதளம் ஒரு செய்தியை வெளியிட்டது. இதனை முகநூலிலும் போட்டும் மின்னஞ்சல் வழியாக அனுப்பியும் பரப்பிக் கொண்டிருந்தார்கள் கூட்டமைப்பின் புலம்பெயர் ஆதரவாளர்கள்.

ஜேவிபி நியூஸ் இணையதளத்திற்கும் தமக்கும் எதுவித தொடர்புமில்லை என ஜேவிபி என அழைக்கப்படும் மக்கள் விடுதலை முன்னணி மறுப்புத் தெரிவித்திருந்தது. அவ்வாறானால் யார் இதனை நடாத்துகிறார்கள் ? கிடைக்கப்பெறும் தகவல்களின் படி சுவிற்சலாந்திலிருக்கும் லங்காசிறி, தமிழ்வின் இணைய தளங்களை நடாத்தும் சிவஞானம் சிறிகுகன் என்பவரே இந்த இணைய தளத்தை நடாத்துவதாகவும், உறுதிபடுத்த முடியாத தகவல்களை இந்த இணையதளத்தில் பிரசுரிப்பதாகவும் தெரியவருகிறது. எனினும் இந்தத் தகவலை உறுதிப்படுத்த முடியவில்லை. சிறிகுகன் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் சகோதரர் என்பது மேலதிகமான தகவல்.

### அனந்தி மீதான அவதூறு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களான சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் கூட்டமைப்பின் முடிவினை அறிவித்ததன் பின்னர். இம்முடிவுடன் உடன்படாத அதன் இளைஞர் அணித்தலைவர் சிவகரன், மாகாணசபை உறுப்பினர்களான அனந்தி சசிதரன், சிவாஜிலிங்கம், தமிழரசுகட்சியின் செயற்குழு உறுப்பினர் மறவன்புலவு சச்சிதானந்தம் ஆகியோர் தமது கருத்தை வெளியிடுவதற்கு யாழ் ஊடகமைத்தில் ஊடகவியளார்களைச் சந்தித்தனர். இதுதொடர்பாக பிபிசி தமிழ்ச் சேவைக்கு செவ்வி வழங்கிய அனந்தி முதன்மை ஜனாதிபதி வேட்பாளர்களான இருவரையும் தம்மால் ஆதரிக்க முடியாது எனக்குறிப்பிட்டார். மேலும், ‘மைத்திரிபால’ ஒரு போர்க்குற்றவாளி எனவும் அவர் ஐ.நா.வின் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்’ என்றகருத்தினையும் வெளிப்படுத்தியிருந்தார். இதனைத் தொடர்ந்து கூட்டமைப்பின் தலைவர்களும், அவர்களது ஆதரவாளர்களும் அனந்தி மீது தாக்குதலைத் தொடுத்தனர்.

### ஜீ.ரி.வியில் செய்தி

மைத்திரிபாலவை போர்க்குற்றவாளி என அனந்தி குறிப்பிட்டமையை பொறுத்துக்கொள்ளாத சுனந்த தேசப்பிரிய என்ற சிங்கள ஊடகவியலார் அனந்தி பற்றிய அவதூறுகளை அவரது srilankabrief.com என்ற இணையதளத்தில்‘The Truth About Ananthi Sasitharan’ என்ற தலைப்பில் வெளியிட்டார். சுவிற்சலாந்தில் வசிக்கும் சுனந்த தேசப்பிரிய சிறிலங்காவில் பல மில்லியன் ருபாய் மோசடி செய்ததாக குற்றம்சாட்டப்பட்டவர் என்பதும் மைத்திரி பதவிக்கு வந்தால் நாடு திரும்புவதற்கு தயாராக இருப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. சுனந்தவிற்கெதிரான ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகளை Colombo Telegraph இணைய தளத்தில் உவிந்து குருகுலசூரிய பகிரங்கமாக வெளியிட்டிருந்தார். சுனந்த தெரிவித்த பொய்த்தகவல்களை ஆதாரமாகக் காட்டி ஜீரிவி என்ற தொலைக்காட்சியும் தமது செய்தியில் தெரிவித்து தன்பங்கிற்கு அவதூறினை தொடர்ந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகப்பற்றற்ற தொலைக்காட்சி போல் இயங்கிவரும் இத்தொலைக்காட்சியின் செய்தி ஆசிரியராக சுவிற்சலாந்தில் வசிக்கும் இராமசாமி துரைரத்தினம் என்ற கூட்டமைப்பின் ஆதரவாளர் பணியாற்றுகிறார். அவதூறு பரப்பும் எல்லோரும் சுவிற்சலாந்துடன் தொடர்புபட்டிருப்பது ஒன்றும் தற்செயலானது அல்ல.

ஜீரிவியைப் போலவே யாழ்ப்பாணத்திலிருந்து இயங்கும் ஈபிடிபியின் டாண் என்ற தொலைக்காட்சியும் தேர்தலை பகிஸ்கரிக்குமாறு அனந்தி கொடுத்த விளம்பரம் என பரப்புரைக்கான இறுதி நாளில் ஒளிபரப்பியது. அதனையும் அனந்தி மறுத்திருந்தார். ஈபிடிபியின் ஊடகத்தை விட்டுவிடுவோம். தமிழ்த் தேசிய ஊடகம், கரம்பிடி வடம் பிடி மக்களிடம் நிதி கேட்கிற ஜீரிவி விடுதலைப்புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த எழிலன் அவர்களது மனைவியை இவ்வாறு துன்புறுத்துவதில் என்ன இன்பம் காண்கிறதோ தெரியிவல்லை !

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மறுப்பறிக்கை

ஜே.வி.பி இணையம் வெளியிட்ட பொய்யான செய்தி தொடர்பாக தமது நிலைப்பாட்டை விளக்கி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு அறிக்கையை வெளியிட்டது. அவ்வறிக்கையின் விபரம் பின்வருமாறு அமைந்திருந்து.

“கடந்த 2ம் திகதி இணையத்தளமொன்றில் எமது கட்சி ஜனாதிபதி மகிந்த இராஜபக்சவுக்கு ஆதரவாக இந்த ஜனாதிபதித் தேர்தலில் செயற்பட போகின்றது என்றும் அதற்காக இராஜபக்சவிடமிருந்து பெருந்தொகைப் பணத்தினைப் பெற்றிருப்பதாகவும் அவதூறான செய்தி ஒன்றினை திட்டமிட்டுப் பரப்பியிருக்கின்றது.

இச்செய்தியினை எமது கட்சி வன்மையாக மறுப்பதுடன் இது போன்ற மக்களைக் குழப்புகின்ற செய்திகளை வெளியிடுகின்றமைக்கு நாம் எமது கடுமையான கண்டனங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாம் இத் தேர்தல் தொடர்பில் எமது நிலைப்பாட்டினைத் தெளிவாக ஏற்கனவே வெளிப்படுத்தியிருந்தோம். ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வென்றும், தமிழ் மக்களிற்கெதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலைகள், போர்க் குற்றங்கள் என்பவற்றிற் கெதிராக விசாரணை எதுவும் நடாத்தப் போவதில்லை என்றும் கூறி பௌத்த சிங்களப் பேரினவாதத் தளத்தின் உச்சாணியில் இருந்து இத் தேர்தலை எதிர் கொள்ளும் இரு வேட்பாளர்களையும் ஆதரிக்கப் போவதில்லை என்ற எமது உறுதியான நிலைப்பாட்டில் எவ்வித மாற்றங்களும் இல்லை.

**மேடைப் பேச்சாளர்கள் தாங்கள் பொய்யைத் தவிர வேறெதனையும் கூறப்போவதில்லை என உறுதிப்பிரமாணம் எடுத்துவிட்டு வந்தவர்கள் போல் ஆளுக்காள் பொய் கூறி வந்தார்கள்.**

மகிந்த அரசின் அட்டூழியங்கள் மற்றும் இன அழிப்புச் செயற்பாடுகளுகளிற்கெதிராக உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் உறுதியுடன் போராடும் ஒரே அரசியற் கட்சி நாம் மட்டுமே. எமது கட்சி இனப்படுகொலைக்கு எதிராக சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வருவதுடன் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் விசாரணைகளிற்கு தாயகத்திலுள்ள மக்கள் சாட்சியங்கள் வழங்குவதற்கு ஊக்குவித்து, சாட்சியங்களை நேரடியாக திரட்டி அனுப்பியதுடன், நாம் நேரடிச் சாட்சியங்களையும் வழங்கியிருந்தோம் என்பது மக்கள் அனைவரும் அறிந்ததே. எமது இலட்சிய உறுதிமிக்க மக்கள் நலன் சார்ந்த இத்தகைய செயற்பாடுகளை குழப்பும் தீய நோக்கம் கொண்ட அரச இயந்திரத்துடன் சேர்ந்து இயங்கும் ஊடகமே இத்தகைய பொய்யான செய்திகளை பரப்பிவருகின்றது.

நாம் அறிந்த வகையில் இச் செய்தியைப் பரப்பிய இணையத்தளம் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சொந்த சகோதரனினால் வெளிநாட்டில் இருந்து நடாத்தப்படும் இணையத்தளமாகும். இந்த இணையத்தளம் கடந்த காலங்களிலும் எமக்கெதிரான அவதூறுகளைப் பரப்பியிருந்தது. பாராளுமன்றத் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் எமது நியாயமான கருத்துக்களை கருத்துக்ளால் வெல்ல முடியாதவர்களால் இத்தகைய மக்களைக் குழப்பிவிடும் பொய்யான பரப்புரைகள் திட்டமிட்டுப் பரப்பப்படும் என்பதால் இத்தகைய போலிச் செயதிகளை மக்கள் நம்ப வேண்டாம் என நாம் தாழ்மையாகத் கோருகின்றோம்.”



# பன்னாட்டு நீதிமன்றத்தில் பலஸ்த்தீனம் அதிரடியாக இணைந்தது



**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

2014-ம் ஆண்டு 29-ம் திகதி பலஸ்த்தீனத்தை ஒரு நாடாக ஏற்றுக் கொள்ளும் முன் மொழிவை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் ஜோர்தான் முன்வைத்தது. இந்த முன் மொழிவில் இஸ்ரேல் பலஸ்த்தீனத்துடனான பேச்சு வார்த்தைகளை ஓராண்டுக்குள் முடிவுக்குக் கொண்டு வரவேண்டும், மேற்க்கு கரையிலிருந்து (ஜோர்தானிய ஆற்றின்) கிழக்கு ஜெருசலத்தில் இருந்தும் இஸ்ரேலியப் படைகள் மூன்று ஆண்டுகளுக்குள் வெளியேற வேண்டும், கிழக்கு ஜெருசலம் பலஸ்த்தீனத்தின் தலை நகராக்கப்பட வேண்டும், பலஸ்த்தீனியர்களின் நிலங்களில் இஸ்ரேலியக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### ◆ ஐக்கிய அமெரிக்காவின் எதிர்ப்பால் தீர்மானம் நிராகரிப்பு

ஜோர்தானின் முன்மொழிவை இரசியா, சீனா, பிரான்ஸ், ஆர்ஜெண்டீனா, சாட், சிலி, லக்சம்பேர்க், ஆகிய எட்டு நாடுகள் ஆதரித்தன. ஐக்கிய இராச்சியம், லித்துவேனியா, நைஜீரியா, கொரியக் குடியரசு, ருவண்டா ஆகிய நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. ஐக்கிய அமெரிக்காவும் அவுஸ்திரேலியாவும் எதிர்த்து வாக்களித்தன. ஐந்து வல்லரசு நாடுகளை நிரந்தர உறுப்பினர்களாகவும் பத்து நாடுகளை தற்காலிக உறுப்பினர்களாகவும் கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் வல்லரசு நாடான ஐக்கிய அமெரிக்காவின் எதிர்ப்பால் ஜோர்தானின் முன் மொழிவு நிராகரிக்கப்பட்டது.

### ◆ மஹ்மூட் அப்பாஸின் அதிரடியும் பதில் மிரட்டல்களும்

அமெரிக்கா ஐக்கிய நாடுகள் சபையில் பலஸ்த்தீனம் ஒரு தனி நாடாக ஏற்றுக் கொள்ளப்படுவதை எதிர்த்ததால் ஆத்திரமடைந்த பலஸ்த்தீனியர்களைச் சமாளிக்க பலஸ்த்தீனிய அதிகார சபையின் அதிபர் மஹ்மூட் அப்பாஸ் (வயது 79) பலஸ்த்தீனத்தை பன்னாட்டு நீதிமன்றில் ஓர் உறுப்பு நாடாக இணைத்தார். 2015-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதியில் இருந்து பலஸ்த்தீனம் பன்னாட்டு நீதிமன்றில் உறுப்புரிமை பெறும் என்பதை ஐக்கிய நாடுகள் சபையும் உறுதி செய்துவிட்டது. ஐக்கிய அமெரிக்கா, கனடா, மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் பலஸ்த்தீனம் பன்னாட்டு நீதி மன்றில் உறுப்புரிமை பெறக்கூடாது என வற்புறுத்தி வந்தன. பன்னாட்டு நீதி மன்றத்தில் உறுப்புரிமை பெற்றால் பலஸ்த்தீன அதிகார சபைக்கு வழங்கும் நிதி உதவியை தாம் நிறுத்தி விடுவதாக இந்த நாடுகள் மிரட்டின. இஸ்ரேலும் தன் பங்கிற்கு மிரட்டியது. 2014-ம் ஆண்டு ஜுலை மாத இறுதியில் பலஸ்த்தீன அதிகார சபையின் தலைவர் மஹ்மூட் அப்பாஸ் பனாட்டு நீதிமன்றில் இணைவது தொடர்பாக பலஸ்த்தீனியர்களின் பல்வேறுபட்ட அமைப்புக்களின் கருத்தை அறியும் கூட்டம் ஒன்றைக் கூட்டியிருந்தார். காசா நிலப்பரப்பில் செயற்படும் ஹமாஸ் அமைப்பும் மேற்குக் கரையில் செயற்படும் இசுலாமியப் புனிதப் போராளி அமைப்பும் இதற்குத் தயக்கம் காட்டியதாகச் சொல்லப்படுகின்றது. இந்த இரு அமைப்புக்கள் மீதும் போர்க் குற்றம் சாட்டும் சாத்தியம் உண்டு. தற்போது இஸ்ரேல் தான் பலஸ்த்தீனத்தில் வசூலிக்கும் வரியில் ஒரு பகுதியை பலஸ்த்தீன அதிகார சபைக்கு வழங்கி வருகின்றது. அந்த 127 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான நிதிவழங்கலை தான் நிறுத்தப் போவதாக அது மிரட்டுகின்றது. ஐக்கிய அமெரிக்கா தான் தற்போது பலஸ்த்தீன அதிகார சபைக்கு ஆண்டு தோறும் வழங்கும் 400 மில்லியன் டொலர்கள் நிதி உதவியை நிறுத்தப் போவதாக மிரட்டுகின்றது.

### ◆ பன்னாட்டு நீதிமன்றம்

பன்னாட்டு நீதி மன்றம் 2002-ம் ஆண்டு செய்யப்பட்ட ரோம் உடன்படிக்கையின் படி உருவாக்கப்பட்டது. உலகின் மோசமான மனித உரிமை மீறல்களை விசாரிப்பது இதன் தலையாய பணியாகும். இந்த நீதி மன்றத்தின் நியாய ஆதிக்கம் (விசாரிக்கும் உரிமை) இந்த உடன்படிக்கையில் கையொப்பமிட்டு உறுப்புரிமை பெற்ற நாடுகளின் குடிமக்கள் மீது மட்டுமே உண்டு. இஸ்ரேல் இந்த உடன் படிக்கையில் கையொப்பம் இடாத படியால் அதன் மீது இந்த நீதி மன்றில் குற்றம் சாட்ட ஐநா பாதுகாப்புச் சபையின் ஒத்துழைப்பும் தேவைப்படும்.

### ◆ முழு உறுப்புரிமை பெற முன்னர் எடுத்த முயற்ச்சி

ஏற்கனவே 135 நாடுகள் பலஸ்தீனத்தை ஒரு நாடாக தனிப்பட்ட ரீதியில் அங்கீகரித்துள்ளன. பலஸ்த்தீனம் ஐநாவின் ஒரு முழு உறுப்புரிமை பெற அதற்கு எல்லாத் தகுதிகளும் அதற்கு உண்டு. அது ஒரு சுய நிர்ணய உரிமை உள்ள ஒரு தேசியம். ஆனால் 2011இல் ஐநா பாதுகாப்புச் சபையில் முழு உறுப்புரிமை பெறக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் பாதுகாப்புச் சபையில் தோற்கடிக்கப்பட்டது. ஐநா சாசனத்தின் 4(2)இன்படி ஒரு நாடு முழு உறுப்புரிமை பெற பொதுச் சபையில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் பெற்று பாதுகாப்புச் சபையும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

### ◆ 2012இல் ஐநாவில் பார்வையாளர் நிலை பெற்ற பலஸ்த்தீனம்

2011இல் ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து முழு உறுப்புரிமைக் கோரிக்கையைக் கைவிட்டு உறுப்புரிமையற்ற ஒரு நாடாக பலஸ்த்தீனத்தை ஏற்றுக் கொள்ளும் முன்மொழிவு பொதுச் சபையின் முன் வைக்கப்பட்டது. 29-12-2012 ஐக்கிய நாடுகள் சபையில் பலஸ்த்தீனம் உறுப்புரிமையற்ற பார்வையாளர் நிலையப் (non-member observer state) பெற்றது. இதற்கான தீர்மானம் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில்138 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. அப்போது மேற்குக் கரையிலும் காசாவிலும் மக்கள் பட்டாசுகள் கொழுத்தி ஆர்ப்பரித்தனர். இந்தத் தீர்மானத்தை எதிர்த்து கனடா, செக் குடியரசு, இஸ்ரேல், மார்ஷல் தீவுகள், மைகுரொனிசியா, நௌரு, பலௌ, பனாமா, ஐக்கிய அமெரிக்கா (Canada, Czech Republic, Israel, Marshall Islands, Micronesia, Nauru, Palau, Panama, United States) ஆகிய ஒன்பது நாடுகள் வாக்களித்தன.

சரியாக 65 ஆண்டுகளுக்கு முன்னர், 29-11-947இல் பலஸ்த்தீனத்தை ஐநா தீர்மானம் நிறைவேற்றி இரு நாடுகளாகப் பிரித்ததுடன் இஸ்ரேலை ஒரு தனி நாடாகாவும் ஆக்கியது. அப்பிராந்தியம் அதற்கு முன்னர் பிரித்தானிய ஆணைக்குட்பட்டிருந்தது. பிரித்தானியா தனது ஆணையை 18-02-1947இலன்று ஐக்கிய நாடுகள் சபையிடம் ஒப்படைப்பதாக அறிவித்தது. 28-11-2012 வரை ஐநாவில் ஒரு தனியுரு (entity) வாகக் கருதப்பட்ட பலஸ்த்தீனம் 29-11-12இல் இருந்து ஒரு உறுப்புரிமையற்ற நாடாகக் கருதப்படும் நிலையைப் பெற்றது. அதைத் தொடர்ந்து ஐநா பொதுச் சபை விவாதங்களில் பலஸ்த்தீனம் கலந்து கொள்ளலாம் என்ற நிலையைப் பெற்றது ஆனால் வாக்களிக்க முடியாது. கத்தோலிக்கர்களின் வத்திக்கானும் ஐநா பொதுச் சபையில் ஒரு உறுப்புரிமையற்ற நாடாக உள்ளது.

### ◆ வஞ்சனை நிறைந்த ஐநா சபை

2009-ம் ஆண்டு இஸ்ரேல் காஸா நிலப்பரப்பில் ஈய வார்ப்பு என்னும் குறியீட்டுப் பெயருடன் செய்த படை நடவடிக்கையில் இழைக்கப்பட்ட போர்க் குற்றம் தொடர்பாக பன்னாட்டு நீதி மன்றத்திடம் பலஸ்த்தீனியர்கள் எடுத்துச் சென்ற போது பலஸ்த்தீனம் ஒரு நாடு அல்ல என்பதால் வழக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஐக்கிய நாடுகள் சபை சார்பாக இஸ்ரேலின் ஈய வார்ப்பு படை நடவடிக்கையை விசாரணை செய்ய தென் ஆபிரிக்க நீதியாளர் ரிச்சர்ட் கோல்ட்ஸ்ரன் என்பவர் நியமிக்கப்பட்டார். இவருடன் ஒத்துழைக்க இஸ்ரேல் மறுத்தது. இதைத் தொடர்ந்து இஸ்ரேல் ஓர் உள்ளக விசாரணையை மேற்கொண்டது. ரிச்சர்ட் கோல்ட்ஸ்ரன் இஸ்ரேலும் ஹமாஸ் அமைப்பும் போர்க்குற்றமும் மானிடத்திற்கு எதிரான குற்றமும் புரிந்ததாக அறிக்கை சமர்ப்பித்திருந்தார். இருதரப்பினரும் தமது குற்றங்களிற்கு உள்ளக விசாரணைகளை முதலில் மேற் கொண்டுவிட்டு பின்னர் பன்னாட்டு நீதிமன்றத்திற்குச் செல்லும் படி பரிந்துரை செய்திருந்தார். ஆனால் ஐநா பொதுச் செயலர் பான் கீ மூன் ரிச்சர்ட் கோல்ட்ஸ்ரனின் அறிக்கையில் அதிக அக்கறை காட்டவில்லை. ஐநா சபையின் விசாரணைச் சபையின் தலைவர் இஸ்ரேலியப் படைகள் பலஸ்த்தீனத்தில் இருந்த ஒன்பது ஐநா நிலையங்கள் மீது தாக்குதல் நடாத்தியதைப் போர்க்குற்றம் எனக் கூறி அதை விசாரிக்க வேண்டும் எனத் தெரிவித்திருதார். அதை பான் கீ மூன் தடுத்துவிட்டார். இந்த விசாரணைகளைத் தடுக்கும் பான் கீ மூனின் அறிக்கை நியூயோர்க்கில் உள்ள இஸ்ரேலியர்களால் தயாரிக்கப்பட்டது.

### ◆ புதிய போர் முனை வெற்றியளிக்குமா?

இஸ்ரேலுடன் பலஸ்த்தீனிய விடுதலை இயக்கத் தலைவரும் பலஸ்த்தீன அதிகார சபையின் அதிபருமான மஹ்மூட் அப்பாஸ் நடாத்திய பேச்சு வார்த்தைகள் 2014-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முறிவடைந்தது. இதனால் அவரது செல்வாக்குச் சரியத் தொடங்கியது. ஜோர்தானிய ஆற்றுக்கும் மத்திய தரைக் கடலுக்கும் இடையில் இருக்கும் காசா நிலப்பரப்பில் இருந்து செயற்படும் ஹமாஸ் அமைப்பு இஸ்ரேலுடன் கடுமையாக நடந்து கொண்டு அடிக்கடி மோதலிலும் ஈடுபடும் வேளையில் மஹ்மூட் அப்பாஸ் இஸ்ரேலுடன் ஒரு மிதமான போக்கையே கடைப்பிடித்து வந்தார்.

பன்னாட்டு நீதி மன்றில் உறுப்புரிமை பெற்றதன் மூலம் இஸ்ரேலுக்கு எதிராக பன்னாட்டு அரங்கில் ஒரு சட்ட நடவடிக்கைப் போரை ஆரம்பித்து தனது செல்வாக்கை சரியாமல் தூக்கி நிறுத்த மஹ்மூட் அப்பாஸ் முயல்கின்றார். 135 நாடுகளால் அங்கீகரிகரிக்கப் பட்ட நிலையிலும் பலஸ்த்தீனம் தனது விடுதலைக்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டி இருக்கின்றது.


கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?

தனிநபரோ... வியாபாரமோ...

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

BBK PARTNERSHIP

R3

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்

www.bbkca.com

Email: admin@bbkca.com



Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Bookkeeping

BARNET-LONDON 020 8216 2520 MR. ANANDAN
CROYDON 020 8150 9950 MR. SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN
SOUTHGATE 020 8886 9589 MR. KANDEE

# Polarised Realities:
- Paralysis
- Multiple Sclerosis
- Post Natal Care
- Acne And Pimples
- Hair Loss And Dandruff
- Infertility
- PCOD, PCOS, Irregular Menstrual Disorders
- Asthma & Bronchitis
- Stress, Anxiety & Depression
- Obesity
- Hypertension
- Hyper And Hypothyroidism
- Post Cancer
- Rejuvenation
- Sports Injuries And Sprains
- Non-Specific Low Back Ache

WINTER SPECIAL
SAVE £55 from
Our Normal Price £ 175
3 sessions of Ayurvedic Therapeutic Massage + Detox Steam & 1 session of complementary Ayurvedic Herbal Facial
All for just £120 only
Ideal gift for your loved one or rejuvenate yourself for continuous wellness

505, London Road, Thornton Heath, Croydon, Greater London, CR7 6AR
For further details contact:
Dr RAJALAKSHMI RAMESH BAMS, SMBRCP, YIC
For an appointment call us now at 0203 6206 999 or 0785 0439 999
Web : www.ayurmedics.org
Mail : ayurmedics@gmail.com

# இனவாதத் தேர்தலிலிருந்து விலகியிருப்பதன் மூலமே தமிழ்மக்கள் தமது சுதந்திர வேட்கையை வெளிப்படுத்த முடியும்

யூட் லால் பெர்னான்டோ

யார் கூடுதலான தீமைகளைச் செய்தவர், யார் குறைவாகத் தீமைகளைச் செய்தவர் என்ற கண்ணோட்டத்தில் மகிந்த இராஜபக்சவையும், மைத்திரிபால சிறிசேனவையும் பார்க்க முடியாது என அயர்லாந்து றினிற்றி கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றும் கலாநிதி யூட் லால் பெர்னான்டோ தமிழ்நெற் இணையதளத்திற்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

அச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது: “சிங்கள ஜனநாயகவாதிகள் எனத் தம்மை அழைத்துக் கொள்பவர்கள் கூறுவதுபோன்று, தமிழ் மக்களுக்கான ஜனநாயகமும், சிங்கள மக்களுக்கான ஜனநாயகமும் ஒன்றல்ல. இவர்கள் உறுதியளிக்கும் ஜனநாயகம் என்பது தமிழர்களுக்கு ஒரு அர்த்தத்தையும், சிங்களவர்களுக்கு வேறான அர்த்தத்தையும் வழங்குகிறது.

“சிங்களமக்களுக்கு நல்லாட்சியை வழங்குவதனையும், தமிழ் மக்கள் தொடர்ந்து ஒடுக்கப்படுவதனையுமே அது குறித்துநிற்கிறது. ஜனநாயகம் என்ற பெயரில் சிங்களப் பேரினவாதத்தை பலப்படுத்துவதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகள் பயன்படுத்துகின்றன.”

“மகிந்த இராஜபக்சவையும், மைத்திரிபால சேனநாயக்கவையும் மட்டுமல்லாது இவர்களது பேரினவாத நிகழ்ச்சித்திட்டத்திற்கு உதவும் தமிழ் அரசியல் தரப்புகளையும் தமிழ் மக்கள் எதிர்த்து நிற்கவேண்டும்.”

“எதிரணிகளின் பொது வேட்பாளர் வெற்றிபெறுவாராயின் அது தமிழ் மக்களுக்கு எதிரான இனப் படுகொலையினை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்வதாகவே அமையும். அது இன அழிப்பு நடவடிக்கையின் இறுதிக்கட்டத்தின் தொடக்கத்தை குறிப்பதாக இருக்கும்.?

“தமிழ் இனவழிப்பின் உண்மையான சூத்திரதாரிகளான அமெரிக்காவும், பிரித்தானியாவும். 2009ம் ஆண்டு படுகொலைகளுக்கு பொறுப்பானவர் என சர்வதேச மட்டத்தில் அறியப்பட்ட மகிந்த இராஜபக்சவை அகற்றி விட்டு அதற்குப் பதிலாக ஒரு புதியவரை வைத்து தமது முயற்சிகளுக்கு புத்துயிர் அளிக்க முனைகின்றன.”

“இந்த ஆட்சி மாற்றம் இராஜபக்கசவினால் ஏற்படுத்துப்பட்ட சீனாவுடனான நெருக்கத்தை குறைப்பதன் மூலம் ஒரு இராணுவப்பரிசினை அமெரிக்கா, பிரித்தானியாவிற்கு பெற்றுக் கொடுக்கிறது. இவர்களுக்கு முன்னனர் உபயோகமாகவிருந்த இராஜபக்ச இப்போது பயன்படுத்தப்பட்ட பின்னர் வீசியெறியப்படும் அழுக்குத்துணிபோல் அகற்றப்படவுள்ளார்.”

“ஜனநாயகத்தை ஏற்படுத்துவது தொடர்பான குழப்பம் சிங்களவர்கள் மத்தியில் இருக்கிறதென்றால் அதனை தீர்க்கும் விடயத்தை அவர்களிடமே விட்டுவிடுவோம். தமிழ்மக்கள் அதில் பங்கெடுக்க வேண்டியதில்லை.”

“தமிழ் மக்கள் ஒரு மிகப்பெரிய படுகொலைகளிலிருந்து தப்பியவர்கள் அவர்களுக்கு கூட்டாக சுயநிர்ணய உரிமை இருக்கிறது. சிறிலங்காவின் ஒற்றையாட்சியை உறுதிப்படுத்தும் வகையில் சர்வதேச சக்திகளின் ஆதரவில் நடைபெறும் இந்த இனவாதத் தேர்தலிலிருந்து விலகியிருப்பதன் மூலம் விடுதலைக்கான தமது வேணவாவை அவர்கள் வெளிப்படுத்த முடியும்.?”

# Sinhala elite succeeds proving Rajapaksa a liability for genocidal State

Sections of Sinhala elite have succeeded in removing Mahinda Rajapaksa as a liability for the continuation of the genocidal Sinhala State and its monopoly over the island, Tamil political observers commented on the outcome of the ‘presidential’ election for the Establishment in Colombo. According to latest reports on Friday morning, Mahinda Rajapaksa left the charge of his official residence in Colombo to the current opposition leader Ranil Wikramasinghe, who in turn is expected to invite the winning candidate Maithripala Srisena to become the next president. Rajapaksa was open in his campaign that the choice between the two main candidates was a choice between China and the USA. India had a tacit understanding with the USA, political observers said.

Both Washington and New Delhi were together in the guise of ‘counterterrorism’ agenda in supporting Rajapaksa and in coursing the genocide of the nation of Eezham Tamils in the island, for upholding the unitary State of their strategic benefits.

Within five years Rajapaksa became a liability when the agenda is confirmation, containment and at the same time getaway from indictment.

The Sinhala elite, including the Buddhist, Jathika Hela Urumaya was intelligent enough in realising that any continuation of Rajapaksa would be a liability for the continuation of the Sinhala State, its international acceptance and its continued genocidal monopoly of the island.

The Sinhala elite was able to mobilise, strike deals with powers and convince the Sinhala masses.

There was no such political preparation and mobilisation among Tamil elite in internationally presenting its case. As such, the trend is going to be a ‘containment’ agenda, herding the present Tamil and Muslim leaderships into a subordinate alliance at the establishment in Colombo, Tamil political observers said. However, another line of political thinking is already emerging among the Tamil grassroot and soon it has to inevitably polarise into a political movement, the observers further said.

நடந்த நிகழ்வுகள் மற்றும் நடக்க இருக்கும் நிகழ்வுகள்
எவையாயிருந்தாலும் பிரசுரிப்பதற்கு தொடர்பு கொள்ளுங்கள்
அனுப்பவேண்டிய முகவரிகள் –
www.facebook.com/orupaper
Email: info@orupaper.com
தொலைபேசி இலக்கம்: 020 7043 4314.

sarasas
SOUTH INDIAN RESTAURANT

- தென்னிந்திய, இலங்கை, வட இந்திய, செட்டினாட் மற்றும் சைனீஸ் உணவின் ருசியை அனுபவியுங்கள்.
- உங்கள் வீட்டுத் தோட்டத்தில் அல்லது நீங்கள் விரும்பும் இடத்தில் எமது தோசை தயாரிக்கப்படும்.
- சகல பாத்திரங்களும் நாம் கொண்டு வருவோம்.
- நீங்கள் எமது உணவை ருசித்து மகிழவேண்டியது மாத்திரமே




* Outdoor catering * Function hall * Party orders
புதிய விழாக்களுக்கான மண்டபம் Bar வசதியுடன் திறக்கப்பட்டுள்ளது






SARASAS CATERING
எமது சேவை, கற்பனை, ருசியான உணவு, சிறந்த சமையல் ஆகியவற்றின் வெளிப்பாடாகும்
We make 30 different Types of Dosa
630-634 Uxbridge Road, Hayes, Middlesex, UB4 0RY
TEL : 020 8561 8188 for further enquiries please contact : 07939 246 552
Email: raj@sarasasrestaurant.com www.sarasasrestaurant.com
FREE CAR PARKING UPTO 100 CARS
Opening Times 12.00 noon to 11.00pm (7 days a week)

# ஜனாதிபதி தேர்தல் நிலைப்பாடு: தனித்து ஓடும் சம்பந்தன் - சுமந்திரன் கூட்டணி



**முத்துக்குமார்**

ஜனாதிபதி தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவித நிபந்தனையும் இல்லாமல் பொது எதிரணியின் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்துள்ளது. கூட்டமைப்பு மைத்திரி ஆதரவு நிலை எடுத்தமைக்கு மேற்குலகினதும் இந்தியாவினதும் அழுத்தம்தான் பிரதான காரணம். இவை ஆட்சிமாற்றத்தினை விரும்புகின்றன என்பது கடந்த சில வருடங்களாக எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான்.

மேற்குலகத்தையும், இந்தியாவையும் பொறுத்தவரை இரண்டு வேலைத்திட்டங்கள் உள்ளன. ஒன்று ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவது, இரண்டாவது தனக்குச் சாதகமான ஆட்சியைப் பாதுகாப்பது. இரண்டிற்கும் முக்கியமான நிபந்தனை தமிழ்த் தேசிய அரசியல் எழுச்சியடைய விடாமல் அடக்கிவைப்பது. தமிழ்த் தேசிய அரசியல் எழுச்சியடைந்தால் இந்த இரண்டு வேலைத்திட்டங்களையும் நகர்த்துவது அவற்றிற்கு கடினமாகிவிடும். இதனால் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற தமிழ்த் தேசிய அரசியலின் அடிப்படை எண்ணக்கருக்களை கைவிடுமாறு வலியுறுத்தி வந்தன. போராட்டங்கள் எதுவும் நடாத்த வேண்டாம் எனவும் அழுத்தம் கொடுத்து வந்தன.

சம்பந்தன் தலைமை அதனை முழுமையாக எற்றுக்கொண்டு கட்சியை வழிநடத்தி இருந்தது. தேர்தல் காலங்களில் மட்டும் வாக்குகளை பெற்றுக்கொள்ளும் வகையில் தமிழ்த் தேசிய கோசங்கள் உச்சரிக்கப்பட்டன. ஏனைய காலங்களில் அவற்றைத் தவிர்த்துக் கொண்டனர். பல்வேறு ஆக்கிரமிப்புக்கள் பச்சையாக இடம்பெற்றபோது போராட்டங்கள் நடாத்துவது பற்றி அக்கறைப்படவில்லை. இவர்களை மீறி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போராட்டங்கள் நடாத்தியபோது வாக்கு கிடைக்காது என்பதற்காக தாங்களும் போட்டிக்கு போராட்டங்களை நடாத்த முற்பட்டனர். அல்லது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் போராட்டங்களில் இலவசமாக முகங்களைக் காட்டினர். இப்போராட்டங்களில் மறந்தும் கூட சம்பந்தன், சுமந்திரன், விக்கினேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வதில்லை. இவை தவிர இன அழிப்பு என்ற தீர்மானம் வடமாகாண சபையில் நிறைவேற்றுவதை தடுத்தனர். ஜெனீவா விசாரணைக்கு சாட்சியங்களை வழங்குவதில் எந்த அக்கறையையும் செலுத்தவில்லை. இவற்றுக்கெல்லாம் காரணம் மேற்குலகமும் இந்தியாவும் நகர்த்தும் நிகழ்ச்சிநிரலை குழப்பக்கூடாது என்பதே.

ஆட்சி மாற்றம் வந்த பின்னரும் அந்த ஆட்சியை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக தமிழ் அரசியல் எழுச்சி அடைவதை அவை விரும்பவில்லை. இந்தியாவில் இவை பற்றி பேச முயற்சிக்கப்பட்டதாகவும் செய்திகள் வருகின்றன. வடமாகாண சபையின் ஆளுநர் சந்திரசிறீ மாற்றப்படுவார் என்பதற்கும் உத்தரவாதம் கொடுக்கப்பட்டதாக தகவல். காணி, பொலிஸ் அதிகாரம் கொடுக்கப்படமாட்டாது. மத்தியில் மூன்று அமைச்சர்களும் வடமாகாண சபையும் தான் அரசியல் தீர்வு. அவற்றுடன் திருப்திப்பட்டுக்கொண்டு போக வேண்டும் என்றே மேற்குலகும் இந்தியாவும் எதிர்பார்க்கின்றது. தமிழ் மக்களை அமைதிப்படுத்துவதற்காகத் தான் ஜனவரியில் போராட்டம் ஆரம்பமாகும் என மாவை அறைகூவல் விடுத்தார். இனியென்ன தீர்வு வந்துவிட்டது தானே, போராட்டங்கள் எதுவும் தேவையில்லை என மாவை அறிவிக்கலாம்

இந்தியாவினதும் மேற்குலகத்தினதும் ஆட்சி மாற்ற இலக்கிற்கு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காகவே தீர்மானம் எடுக்கும் பொறுப்பை சம்பந்தன் தன் கையில் வைத்திருக்கின்றார். கட்சிகளின் குழு, பாராளுமன்றக் குழு, தமிழ் அரசுக் கட்சி செயற்குழு எல்லாமே பெயருக்குத்தான். தீர்மானங்களை சம்பந்தன் தனித்தே எடுக்கின்றார். எடுத்த பின் எப்பாடுபட்டாவது கட்சியை அதற்கேற்றபடி கொண்டுவந்து விடுகிறார். இவ் விடயத்தில் எவருமே அசைக்க முடியாத பாரிய நிபுணத்துவம் அவரிடம் இருக்கின்றது.

தன்னுடைய தீர்மானத்தை கட்சியை துரிதமாக ஏற்க செய்வதற்காக தமிழ்த் தேசிய அரசியல் போராட்டங்களோடு எந்தவகையிலும் தொடர்புபடாதவர்களை கொழும்பிலிருந்து இறக்குமதி செய்கின்றார். முதலில் சுமந்திரன் கொண்டு வரப்பட்டார் பின்னர் விக்கினேஸ்வரன் கொண்டுவரப்பட்டார் தற்போது தவராசா கொண்டுவரப்படுகின்றார்.

சம்பந்தன் தலைமை மைத்திரிபால சிறிசேனாவிற்கு ஆதரவுகொடுப்பதை நியாயப்படுத்தும் வகையில் சப்பைக்கட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் தமிழ் மக்களுக்கான உத்தரவாதங்கள் எவற்றையும் காணவில்லை. மைத்திரியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை அப்படியே பிரதி பண்ணிய ஒன்றாகவே இருந்தது.

சட்டத்தின் ஆட்சியைக் கொண்டுவருதல், நீதித்துறைச் சுதந்திரத்தைப் பேணுதல், பாரளுமன்றத்தை வலுவுள்ளதாக்குதல் என்பவை பற்றி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இவற்றிற்கும் தமிழ்மக்களுக்கும் உள்ள தொடர்பு என்ன என்பது பற்றி தெளிவேதுமில்லை. நடைமுறையிலுள்ள சட்டங்கள் தமிழ்மக்களுக்கு எதிரானவை. இந்நிலையில் சட்டப்படி ஆட்சி நடைபெறுவதால் தமிழ்மக்களுக்கு என்ன பயன் கிடைக்கப்போகிறது. சிறிலங்காவின் நீதித்துறை என்பது வரலாற்று ரீதியாகவே தமிழ் மக்களை வஞ்சித்த நீதித்துறை. இது பற்றிய வரலாற்று அனுபவங்கள் தனிச்சிங்களச் சட்டத்திலிருந்து சுனாமி பொதுக்கட்டமைப்பு நீக்கம் ஊடாக வடக்கு - கிழக்குப் பிரிப்பு வரை நிறையவே இருக்கின்றன. இந்த நீதித்துறை சுதந்திரமாக இருப்பதால் தமிழ்மக்களுக்கு என்ன கிடைக்கப்போகின்றது? இவை தவிர தமிழ்மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறை சட்டங்கள் எல்லாவற்றையும் இந்தப் பாராளுமன்றமே நிறைவேற்றியது. இது எப்படி தமிழ் மக்களுக்குச் சாதகமாக இருக்கமுடியும்.

இங்கு மகிந்தர் அரசாங்கம் தான் தமிழ் மக்களுக்குப் பிரச்சினை என்கின்ற வகையில் ஒரு மாயை கட்டியெழுப்பப்படுகின்றது. இங்கு மகிந்தர் அரசாங்கம் மட்டும் பிரச்சினை அல்ல. மாறாக சிறிலங்கா அரசே பிரச்சினை. சிறிலங்கா அரசுருவாக்கத்திற்கு அடிப்படையாக இருந்த தூண்கள் தான் பிரச்சினை. இந்த அரசுருவாக்கக் கட்டமைப்பு இருக்கும் வரை ஆட்சிக்கு வருகின்ற எல்லா அரசாங்கங்களும் தமிழ் மக்களை ஒடுக்குகின்ற நடவடிக்கைகளைத் தான் மேற்கொள்ளும். இவையொன்றும் நீண்ட அரசியல் வரலாறு படைத்த சம்பந் தன் தலைமைக்குத் தெரியாததல்ல. அத் தலைமை தமது எஜமான்களின் நலன்களைப் பேணுவதற்காக மக்கள் முன்னால் நாடகமாடுகின்றது.

பொது எதிரணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ்மக்கள் பற்றிய விவகாரங்கள் எவற்றையும் உள்ளடக்கவேண்டாம் என தாம் தான் கூறியதாக சுமந்திரன் குறிப்பிடுகின்றார். இவருக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தது யார்? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்துள்ள கட்சிகளின் தலைவர்களா ? அல்லது தமிழரசுக் கட்சியின் செயற்குழுவா? கட்சிகளின் கூட்டமைப்பும், கட்சியின் செயற்குழுவும் இருக்கும் போது சுமந்திரன் மட்டும் தீர்மானம் எடுப்பது எந்தவகை ஜனநாயகம் ? சுரேஷ் பிரேமச்சந்திரன் கூட்டமைப்பின் பேச்சாளராக இருக்கின்ற போதும், பொது எதிரணியின் தலைவர்களுடன் கூட்டமைப்பின் தலைவர்கள் பேசச் செல்லும் வரை அவருக்கு இந்தத் தகவல் தெரிவிக்கப் படவில்லை.

மற்றைய விடயம் மிகவும் முக்கியமானது. தமிழ்மக்களின் பிரச்சினைகள் வெளிப்படையானவை. அவற்றுக்கான தீர்வுகளும் வெளிப்படையானவை. அவற்றை வெளிப்படையான அரங்குகளில் வைத்துப் பேசாமல் இரகசியமான அரங்குகளில் பேசித் தீர்மானிக்க முடியுமா? முதலில் மைத்திரி வெல்லட்டும், பின்னர் தமிழர் விவகாரம் பற்றி பேசலாம் என்பது சப்பைக்கட்டு வாதம். தேர்தல் விஞ்ஞாபனத்தை ஏற்றுத்தான் மக்கள் வாக்களிக்கின்றனர். தேர்தலில் வென்ற பின்னர் ஹெல உறுமயவுடன் ஓர் உடன்படிக்கையும் செய்த நிலையில் இனப்பிரச்சினையை மைத்திரி தீர்த்து வைப்பார் என நம்புவதற்கு தமிழ்மக்கள் முட்டாள்கள் அல்லர். இது விடயத்தில் மனோ கணேசனிடம் இருந்த நேர்மை கூட சம்பந்தன் தலைமையிடம் இருக்கவில்லை. மனோ கணேசன் மைத்திரி ஆட்சியில் தமிழ்மக்களுக்கு தேனும், பாலும் ஓடப்போவதில்லை என தெளிவாகவே குறிப்பிட்டார். இதைக் கூறும் துணிவு கூட சம்பந்தன் தலைமைக்கு இருக்கவில்லை.

தன்னுடைய தீர்மானத்தை கட்சியை துரிதமாக ஏற்க செய்வதற்காக தமிழ்த் தேசிய அரசியல் போராட்டங்களோடு எந்தவகையிலும் தொடர்புபடாதவர்களை கொழும்பிலிருந்து இறக்குமதி செய்கின்றார். முதலில் சுமந்திரன் கொண்டு வரப்பட்டார் பின்னர் விக்கினேஸ்வரன் கொண்டுவரப்பட்டார் தற்போது தவராசா கொண்டுவரப்படுகின்றார்.

உண்மையில் மைத்திரியை வேட்பாளராக நிறுத்தியமை இந்தியாவினதும், மேற்குலகத்தினதும் இணைந்த ஒரு வேலைத்திட்டமே. சீனாவின் செல்வாக்கை இலங்கையிலிருந்து அகற்றுவதே அவற்றின் இலக்கு. இந்த இலக்கு நோக்கிய நகர்விற்கு எந்தவித பிரதிபலனும் இல்லாமல் கூட்டமைப்பினர் சோரம் போயுள்ளனர். இந்தியாவும் மேற்குலகமும் தமிழ்மக்களைப் பயன்படுத்தி தமது நலன்களை வென்று கொண்டு செல்கின்றனர்.

எங்கள் தலைமைகள் மட்டும் எங்கள் விவகாரத்தை முன்வைத்து பேரம்பேசாமல் இந்தியாவினதும் மேற்குலகினதும் நிகழ்ச்சிநிரலுக்குள் தமிழ் மக்களின் விவ காரங்களையும் உள்ளடக்காமல், அவற்றிற்கு அடிமைச்சேவகம் செய்கின்றன.

*நன்றி - பொங்குதமிழ் இணையம்*






# தெரிந்த பேயும் தெரியாத பிசாசும்

பாகம் 167

அதோ வரப்போகிறது இதோ வரப்போகிறது என்றிருந்து ஒருவாறாக கால நீரோட்டம் ஜனாதிபதித் தேர்தலைக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. நாளை இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்படுமா இல்லையா, யார் ஜனாதிபதி புதியவரா பழையவரா என்ற கேள்விகளுக்கு விடை கிடைத்துவிடும். அதுவரை இவற்றைப் பற்றியெல்லாம் ஆரூடம் சொல்லக்கூடிய நிலையில் யாருமில்லை. ஒன்றில் புதிய பிசாசு அல்லது பழைய பேய் என்ற நிலைதான் தமிழ் மக்களைப் பொறுத்தவரை காணப்படுகின்றது. மைத்திரிக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வெறுமனே ஜனநாயக பாரம்பரியத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரே ஜனாதிபதியை தொடர்ந்து ஆட்சியில் வைத்திருக்கக்கூடாது என்ற வாதத்தை முன்வைத்து தேர்தலில் இந்த முடிவை எடுத்திருக்கிறது.

புதிதாக வரக்கூடிய ஜனாதிபதி இலங்கைத் தமிழர் விடயத்தில் என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார் என்பதில் தெளிவில்லை. போதாததற்கு பௌத்த சிங்களப் பேரினவாத அமைப்பான ஹெல உறுமயவுடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டு விட்டே மைத்திரி தேர்தலில் குதித்திருக்கிறார். இந்தப் பேரினவாத அமைப்பு தமிழர்களுக்கு எவ்வித அரசியல் அதிகாரங்களும் வழங்கப்படக் கூடாது என்பதிலும், இலங்கையில் சமஷ்டியை அடிப்படையாகக்கொண்ட கூட்டாட்சியைஏற்படுத்தக்கூடாது என்பதிலும் மிகவும் தீவிரமான பிடிவாதத்தைக் கடைப்பிடிக்கும் அமைப்பாக இருக்கிறது. அதனால் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டால் ஏற்படுத்தப்படவிருக்கும் அரசியலமைப்பு மாற்றங்களில் சிஹெல உறுமயவின் செல்வாக்கே மேலோங்கி நிற்கும். அதனால் தற்போது நடைமுறையிலிருக்கும் அரசியலமைப்பிலுள்ள 13ம் திருத்தமான மாகாண சபைகளுக்கு ஆப்பு வைத்து அதனை முற்றாகச் செயற்படாமலாக்குவதிலேயே அந்த அமைப்பு தனது கவனத்தைச் செலுத்தும். அதனால் சிஹெல உறுமயவின் செல்வாக்கால் தெரியாத பிசாசாகச் சிலவேளைகளில் தெரிவாகப்போகும் புதிய ஜனாதிபதி என்ன செய்யப் போகிறாரென்பதை எதிர்வு கூறுவது சிரமமானதாகவே காணப்படுகின்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனையற்ற விதத்தில் எதிரணி பொது வேட்பாளரான மைத்திரியை ஆதரிக்கப் போவதாய் அறிக்கை விட்டிருக்கிறது. ஆட்சிமாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் அதற்கான காரணமாயிருக்கிறது. சம்பந்தர் ஐயா சமீபத்தில் இந்தியாவுக்கெல்லாம் சென்று வந்திருப்பதால் சில வேளைகளில் எழுதப்படாத ஒப்பந்தங்களை எதிரணியினருடன் செய்திருக்கவும் கூடும். அப்படி எதுவும் இல்லையென்றால் புதிய பிசாசினால் ஆபத்துகளே அதிகமுண்டு. 'ஒருவனைப் பற்றி அறிய வேண்டுமென்றால் அவனது நண்பர்களை அறி' என்று சொல்வார்கள். மைத்திரியின் நண்பர்களில் சிஹெல உறுமயவினர் மிகவும் ஆபத்தானவர்கள். தமிழரின் மீது மிகவும் வன்மத்தைக் கொண்டிருப்பவர்கள். நாம் எடுக்கும் முடிவுகள் சில வேளைகளில் நமக்கே ஆபத்தாய் முடிந்து விடுவதுமுண்டு. அந்தவகையில் 13ம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி வடகிழக்கு மாகாண சபைகளை இயங்க விட்டிருக்கும் நிறைவேற்று அதிகாரமுடைய தற்போதைய தெரிந்த பேயை நாம் உதாசீனம் செய்துவிடவும் முடியாது. தற்போதைய ஜனாதிபதி மாகாண சபைகளை இயங்க விட்டுவிட்டு அவற்றின் செயற்பாடுகளை முடக்கினார் என்பது உண்மையே அதனால் வடமாகாண சபை முதல்வர் சி.விவிக்னேஸ்வரனுட்பட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் மகிந்தவுடன் அரசியல் நிர்வாக ரீதியில் ஒன்றுபட்டுச் செயற்படமுடியாது என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். வடமாகாண ஆளுனரை மாற்றி ஒரு சிவில் நிர்வாக அதிகாரியையாவது கவர்னராக நியமித்து சபையைச் சுயாதீனமாக இயங்க விட்டிருந்தாலாவது மகிந்தவுக்கான ஆதரவு தமிழ் மக்கள் மத்தியில் பெருகியிருக்கும். நல்ல சந்தர்ப்பங்களை அவர் தவறவிட்டுவிட்டார். தன்னைச் சுற்றியிருந்த அடிவருடிகளை முன்னிலைப்படுத்த வேண்டுமென்பதற்காக ஒரு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிக்கு இருக்கவேண்டிய தார்மீகக் கடமைகளை மறந்துசெயற்பட்டுவிட்டார். இந்த அடிவருடிகள் தங்களது ஜனாநாயகத்துக்குப் புறம்பான வன்முறைகளைப் பயன்படுத்தி அவருக்கு வாக்குகளைக் குவிக்கலாமேயன்றி மக்களின் செல்வாக்கைப் பெற்றிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இறுதி முடிவை மாற்றியமைக்க முடியாது.

## அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

கொழும்பிலிருக்கும் எனது சிங்கள நண்பரொருவருடன் ஸ்கைப்பில் இன்று காலை கதைத்தபோது அவர் ஆட்சிமாற்றத்தையே புத்திஜீவிகளில் பலரும் விரும்புவதாகக் கூறினார். "பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தொடர்ந்தும் அதே பாணியில் ஆட்சியை இன்னும் பலவருடங்களுக்குக் கொண்டு போக முடியாது. ஜனநாயகத் தன்மைகொண்ட அரசாலும் நல்ல கனவான்களான தலைவர்களாலுமே நாடு ஆளப்படவேண்டும். தற்போதுள்ள அரசிடம் அத்தகைய நல்லியல்புகள் இல்லாத தால் அவர்களுக்கு விடைகொடுத்து அனுப்பிவைப்பதைவிட வேறு தெரிவு இல்லையென்றார்.

லண்டனில் ஒரு சிங்கள இளைஞன் பின்வரும் தெளிவானவோர் கருத்தைக் கூறினான்: "நாங்கள் சிங்கள பௌத்தர்கள், நீங்கள் தமிழர்கள் - இந்துக்கள். நம் இரு சமூகத்தினரிடமும் சமாதானத்தையும் அன்பையும் விரும்பும் இயல்பு காலங்காலமாக நிலைபெற்றிருக்கிறது.

துரதிஷ்ட வசமாக சரித்திரத்தில் சில வருடங்கள் வன்மம் நிறைந்த கறைபடிந்த காலமாகிவிட்டது. தற்போது சிங்கள மக்கள் தமிழர்களுடன் சமாதானமாக வாழமுடியுமென்ற நம்பிக்கையைப் படிப்படியாகப் பெற்று வருகிறார்கள். தற்போது உள்ளவர் அவநம்பிக்கையையே மூலதனமாக வைத்து இலங்கையை மிக நீண்டகாலம் ஊழலும் வன்முறையும் நிறைந்த தனது குடும்ப ஆட்சிக்குள் வைத்திருக்கப் பார்க்கிறார். படித்த சிங்களவர்கள் இதனை ஆதரிக்கத் தயாரில்லை. ஆனாலும் சரியாகச் சிந்திக்கத் தெரியாதவர்கள் என்ன செய்யப் போகிறார்களோ தெரியாது. பெரும்பாலும் தற்போதுள்ளவருக்கு வெற்றி வாய்ப்புக் குறைவென்றே நினைக்கிறேன். நானும் அவரை ஆதரிக்கவில்லையென்றான்."

நான் விசாரித்த அனைத்துச் சிங்களவர்களும் இதையே கூறிக்கொண்டிருக்கிறார்கள். தமிழர்களைத் தோற்கடித்துத் தமது காரியத்தைச் சாதித்து விட்டதால் மகிந்த இனித் தேவையில்லையென்று அவரை ஒதுக்கி வைத்துவிட்டு நாகரீகமானவோர் அரசை உருவாக்க நினைக்கிறார்கள் போலத் தெரிகிறது. அதில் நியாயமில்லாமலுமில்லை. "எதனை எதனால் எவன் முடிப்பன் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்று ஒரு குறளிருக்கிறது. அதனைத் தமிழர்கள் பயன்படுத்துகிறார்களோ இல்லையோ சிங்களவர்கள் பயன்படுத்துகிறார்கள். ஒரு ஜனநாயக ஆட்சியமைப்புக்கு மிகவும் பொருத்தமான குறளது. துரதிஷ்ட வசமாக எமக்கு ஜனநாயக ஆட்சியுமில்லை, அக்குறளைப் பயன்படுத்தத் தக்க சூழ்நிலைகளும் சந்தர்ப்பங்களும் இல்லை. நாங்கள் ஆளப்படுவதற்கே பிறந்தவர்கள். எங்களிடம் கணிசமான அளவு வாக்குப்பலமிருந்தாலும் அதனை ஒரு பொருட்டாகக் கணக்கிலெடுப்பதற்கு யாருக்கும் தைரியமில்லை. அப்படிக் கணக்கிலெடுத்து எங்களுக்காகவும் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒருவரியை எழுதினாலும் பெரும்பான்மைச் சிங்களவர்கள் உஷாரடைந்து விடுவார்கள். சிஹெல உறுமய மைத்திரியிடமிருந்து பிய்த்துக்கொண்டு போய்விடும்.

சிங்கள பௌத்தர்கள் எவ்வளவுதான் நாகரீமானவோர் அரசியல் மாற்றத்தை விரும்பினாலும், தமிழர்களையும் சேர்த்தணைத்துக் கொண்டு போகவேண்டுமென்பதில் எந்தவிதமான ஆர்வத்தையும் காட்டப் போவதில்லை. பண்டா செல்வா ஒப்பந்தத்தின் காரணமாகத்தான் ஒரு பௌத்த பிக்குவால் பண்டா சுட்டுக் கொல்லப்பட்டார் என்று கருதுகிறார்கள். அப்படிச் செத்துப்போக யாரும் இனி முன்வரப்போவதில்லை. மகிந்தி தொடக்கம் மைத்திரி வரை இதுதான் நிலைமை. இவையெல்லாவற்றையும் வைத்துப் பார்க்கும் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மைத்திரியை நிபந்தனையற்று ஆதரிக்கிறோமென்று கூறுவது, நிபந்தனையற்ற சரணாகதி போலவே தென்படுகிறது.

இக்கட்டுரை எழுதப்படுமபோது தேர்தலில் என்ன நடக்கப் போகின்றது என்று தெரியாது. இதனை வாசிக்கும்போது மைத்திரியா, மகிந்தவா என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கும். ஆனால் யார் வந்தாலும் நமக்கொன்றும் நடக்கப் போவதில்லை என்ற முடிவுதான் நமக்குக் கிடைக்கவிருப்பதால் ஜனாதிபதித் தேர்தலைப் பற்றி தமிழர்கள் அலட்டிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. எல்லோரும் ஏறிச்சறுக்கி விழுந்த குதிரையில் மைத்திரியும் ஏறிச் சறுக்கி விழப் போகிறார். இல்லாவிட்டால் சிஹெல உறுமயவும் அது சார்ந்து நிற்கும் சிங்கள பௌத்த பேரினவாதமும் அவரைத் தள்ளி விழுத்தும்.

இரகுநாத ஐயரின் வாக்கிய பஞ்சாங்கத்தில் வருடாவருடம் வரும் ஆரூடசக்கரத்தில் (இப்போது அது வருகிறதோ தெரியவில்லை - பஞ்சாங்கத்தைக் கண்டு வருடக்கணக்காகி விட்டது) ஒரு வெற்றிலைக் காம்பை முறித்துக் கண்ணை மூடிக்கொண்டு தொட்டால் அன்றைய நாட்பலனை அறிந்து கொள்ளலாம். அதற்கு அன்றைய பேப்பரைத் தேடித் திரிய வேண்டியதில்லை. அதே போலத்தான் சிங்களவர்கள் அவர்களுக்காக நடத்தும் ஜனாதிபதித் தேர்தலில் நாமும் கண்ணை மூடிக் கொண்டு எமக்குத்தரப்படும் வாக்குச் சீட்டில் நமக்குத் தெரிந்த பேய்க்கோ, தெரியாத பிசாசுக்கோ அல்லது கூட நின்று போட்டியிடும் குரங்குகளுக்கோ, யாருக்காயினும் ஒரு புள்ளடியைப் போட்டு விடவேண்டியதுதான். எதிர்காலப் பலன் எதுவாயிருந்தாலென்ன? நமக்கேதும் நன்மை விளைந்துவிடவா போகிறது? இந்த உலகத்தில் நம்மைப் போன்ற ஆதரவற்ற சிறுபான்மை இனங்களுக்கு ஜனநாயகம் விட்டு வைத்திருக்கும் தெரிவு அதுதான்.

**நாங்கள் ஆளப்படுவதற்கே பிறந்தவர்கள். எங்களிடம் கணிசமான அளவு வாக்குப்பலமிருந்தாலும் அதனை ஒரு பொருட்டாகக் கணக்கிலெடுப்பதற்கு யாருக்கும் தைரியமில்லை. அப்படிக் கணக்கிலெடுத்து எங்களுக்காகவும் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒருவரியை எழுதினாலும் பெரும்பான்மைச் சிங்களவர்கள் உஷாரடைந்து விடுவார்கள்.**

அதை விடுத்து எங்களுக்கும் ஆட்சியில் பங்கு வேண்டும் அதிகாரப் பரவலாக்கல் வேண்டும் என்றெல்லாம் டிமாண்ட் பண்ண வெளிக்கிட்டால் பிரிவினை வாதி, பயங்கரவாதி என்றெல்லாம் பட்டங்கட்டி இராணுவ அடக்கு முறைக்குள் (அதற்குள் தான் நாம் இப்போதும் இருக்கிறோம்) நம்மைப் போட்டு விடுவார்கள்.

சுமார் முப்பததைந்து நாற்பது வருடங்களுக்குப் பிறகு தற்போது தற்போதைய ஜனாதிபதி மகிந்தவின் கூற்றுக்கு இணங்க ஒரு தெரிந்த பேயையோ அல்லது தெரியாத பிசாசையோ ஆதரிக்க வேண்டிய நிலைமைக்கு நாம் தள்ளப் பட்டுள்ளோம். அவர் நான் தெரிந்த பேய் என்னைத் தெரிவு செய்யுங்கள் என்கிறார். தெரியாத பிசாசான மைத்திரியோ எம்மைப்பற்றிய எந்தவித அக்கறையும் காட்டாத ஒரு தேர்தல் விஞ்ஞாபனத்துடன் எம்மிடம் வந்து ஆதரவு கேட்கிறார். நாம் யாரை ஆதரிப்பது? யார் வெற்றியடையப் போகிறார்? கடவுளுக்குத்தான் வெளிச்சம். எல்லாம் ஒன்பதாம் திகதி விடியத் தெரிந்து விடும்.

*தொடருவம்..*


அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

**seven | zero**
graphic designers
**020 7043 4310**
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP




creative artwork from **concept to design**



BRAND Niru®
Quality you can taste
Fantastic Tast..... TRY IT TODAY.
FROZEN CURRIES
Niru BRAND
Ready to Cook
Spicy & Sour delight!
FROZEN
Marinated
Emperor Curry
HALAL
SPECIAL PRICE £3.49
FAMILY PACK
(Serves 4)
800g
Mackerel Curry
SPECIAL PRICE £2.49
400g
Crab Curry
SPECIAL PRICE £4.99
100% NATURAL NO PRESERVATIVES
Easy To Cook
Ready in 15 mins!
4 பேருக்கு போதுமான
நண்டுக்கறி - £4.99
விளைமீன் கறி - £4.99
Microwave
தேவையில்லை
100% NATURAL NO PRESERVATIVES
Only £3.99
Special Packs!
900g Curry Powder
with
1 Kg
Flour
Hurry ! Limited Packs Only
The Right Choice
SURYAA
ROASTED CURRY POWDER
ROASTED RICE FLOUR
900g
HOT
EXTRA HOT
SURYAA New Improved Taste!
Great Offer for a Great New Tast !
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk

# தை முதலாம் திகதி தைப்பொங்கல்




*சம நேரத்தில் சம பரப்பளவு, சம தூரம் இல்லை*

**மாசிலாமணி**

*(ஒரு பேப்பருக்காக)*

உழவர் சேற்றில் கை வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்கலாம் இது தமிழில் உள்ள ஒரு கூற்று. அறுவடைச் செல்வம் வீட்டுக்கு வந்ததும் நிலம், நீர், கதிரவன், உழவு சாதனங்கள் ஆகியவற்றிற்கு நன்றிப் பெருக்கோடு எடுக்கும் விழாவே பொங்கற் பெருவிழா. திருவள்ளுவர் ஆண்டுப் பிறப்பாகவும் தை முதலாம் திகதி அறிவிக்கப் பட்டுள்ளதால் இப் பெருநாளின் பெருமை மேலும் உயர்ந்துள்ளது.

பொங்கல் பற்றி விபரமாக எதிர்பார்த்தால் ஏதோ அர்த்தமற்ற தலையங்கம் அல்லவோ போடப் பட்டிருக்கிறது என்று நீங்கள் எண்ணலாம். அப்படி அதை வெளிச்சமிட்டுக் குறிப்பிடுமளவிற்கு சில சோதிடக் கணிப்பாளர்கள் குழப்புகிறார்களே. மாதப் பிறப்புக்களைக் குழப்புகிறார்கள். தை முதலாம்திகதி வரும் தைப் பொங்கலைக் குழப்பகிறார்கள். சித்திரை முதலாம் திகதி வரும் சித்திரைப் புத்தாண்டையும் குழப்புகிறார்கள். ஆடி முதலாம் திகதி வரும் ஆடிப் பிறப்பையும் குழப்புகிறார்கள். ஆகையால் நான் சொல்ல முன்வருவது இந்தியா இலங்கையை மையமாக வைத்துதான் மாதப் பிறப்பு முடிவு செய்யப்பட வேண்டும். ஆசியாக் கண்டத்தில் ஒரு நாள் என்றால் அமெரிக்காக் கண்டத்தில் அதற்கு முதல் நாள் என்ற முறை மாறவேண்டும். இக்கட்டுரையை வாசித்த பின் வாசகர்களாகிய நீங்களே உணர்வீர்கள் இந்தக் குழப்பவாதிகள் ஆண்டுப் பிறப்பையே இழிவு படுத்துகிறார்கள் என்பதை.

வான் கோளத்தில் விண்மீன்கள் ஊடாக கதிரவன் ஒரு நாளைக்கு 0.99 பாகை மேற்கிலிருந்து கிழக்காக ஓடிக்கொண்டிருக்கின்றான். உண்மையில் கதிரவன் ஓடுவதில்லை. பூமி கதிரவனைச் சுற்றுவதால் பூமியில் இருந்து பார்க்கும் எங்களுக்கு கதிரவன் ஓடுவதுபோல் தோன்றுகிறான். இந்த ஓட்டம் சீராக நடைபெறுகிறது. தொடக்கப் புள்ளி என்று ஒன்று இல்லாவிடில் கோளத்தின் வில் போன்ற பகுதிகளை அடையாளப்படுத்த முடியாது. விண்ணில் அச்சுவினி என்னும் விண்மீன் தென்படும் இடத்தை தொடக்கப் புள்ளியாகக் அமைத்தார்கள். அதையே 0 பாகையாகக் கொண்டு முழு வான் கோளத்தையும் 30 பாகைக்கு ஒன்று என்ற ஒழுங்கில் மேடம் இடபம் மிதுனம் என்ற ஒழுங்கில் 12 ராசிகளாகப் பிரித்தார்கள். பூமி ஒருமுறை கதிரவனை வலம்வந்து முடிக்க பூமியிலுள்ள எங்களுக்கும் கதிரவன் வான் கோளத்தில் அமைக்கப்பட்ட 12 ராசிகளையும் ஒருமுறை சுற்றி முடித்ததுபோல் தோன்றும். அதாவது புறப்பட்ட அச்சுவினி விண்மீன் தென்படும் புள்ளிக்கே கதிரவனும் திரும்பி வந்துவிடுவான். அதுவே ஒரு ஆண்டு.

**வருகிற ஆனி மாதத்தில் 32 நாட்கள். கார்த்திகை மாதத்தில் 29 நாட்கள். இங்கு லீப் ஆண்டு என்று அறிவிக்கத் தேவையில்லை. கதிரவன் அந்த அந்த ராசிக்குள் எத்தனை நாட்கள் நிற்பதுபோல் தோன்றுகின்றானோ அந்த நாட்கள் தான் அந்த மாதத்திற்குரிய நாட்கள்.**

கதிரவன் ஒவ்வொரு ராசிக்குள்ளும் நிற்கும் காலம்தான் அந்த அந்த ராசிக்கான மாதங்கள். மேட ராசிக்குள் நிற்கும் காலம் சித்திரை. இடப ராசிக்குள் நிற்கும் காலம் வைகாசி. மிதுன ராசிக்குள் நிற்கும் காலம் ஆனி. அப்படியே 12 ராசிகளுக்கு 12 பெயர்களும் 12 மாதங்களுக்கு 12 பெயர்களும் உள்ளன. மலையாளத்தில் புத்திசாலித்தனமாக ராசிக்கு உள்ள பெயரையே மாதத்திற்கும் பயன் படுத்துகிறார்கள். தைப் பொங்கல் என்றால் அவர்கள் மகரப் பொங்கல் என்று கூறுவார்கள். ஆவணி ஓணம் என்றால் அவர்கள் சிங்க ஓணம் என்பார்கள்.

கோளம் என்பதால் ஒவ்வொரு 30 பாகை கொண்ட ராசிக்குள்ளும் சமமான காலம்தானே கதிரவன் நிற்பான் என்று எண்ணாதீர்கள். அப்படி இல்லை. பூமியின் வலம் வரும் பாதை நீள்வட்டப் பாதையாக உள்ளதால் பூமிக்கு அண்மை நிலை தூர நிலை என இரு நிலைகள் உண்டு. அண்மைநிலையில் பூமி வேகமாக ஓடும் தூர நிலையில் வேகம் குறைவாக ஓடும். இதன் காரணமாக சில மாதங்களில் நாட்கள் குறையும். சில மாதங்களில் நாட்கள் கூடும். எடுத்துக்காட்டிற்கு வருகிற ஆனி மாதத்தில் 32 நாட்கள். கார்த்திகை மாதத்தில் 29 நாட்கள். இங்கு லீப் ஆண்டு என்று ஒன்றை அறிவிக்கத் தேவையில்லை. கதிரவன் அந்த அந்த ராசிக்குள் எத்தனை நாட்கள் நிற்பதுபோல் தோன்றுகின்றானோ அந்த நாட்கள்தான் அந்த மாதத்திற்குரிய நாட்கள். 12 ராசிகளையும் கதிரவன் கடக்க ஆண்டும் முற்றுப் பெற்றுவிடும்.

இத்துடன் இதனுடன் தொடர்புடைய இன்னொன்றும் சொல்லவேண்டி உள்ளது. ஒவ்வொரு ராசியினுள்ளும் இரண்டேகால் நட்சத்திரங்கள் என்ற முறையில் அச்சுவினி பரணி கார்திகை ரோகினி என்ற ஒழுங்கில் 27 நட்சத்திரங்களை உள்ளடக்கி உள்ளார்கள். எடுத்துக்காட்டிற்கு மேட ராசிக்குள் அச்சுவினி பரணி ஆகிய இரு நட்சத்திரங்களுடன் கார்த்திகை நட்சத்திரத்தின் முதலாம் பாதம் என்னும் கால் பகுதியும் அடங்கும். $2\frac{1}{4} \times 12 = 27$ இருபத்தேழாவது நட்சத்திரமான ரேவதியின் கடைசிப் பகுதியும் அச்சுவினியின் முற்பகுதியும் ஒன்றுடன் ஒன்று இணையும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். காரணம் சைவர் பாகையும் 360 பாகையும் ஒரே புள்ளிதானே.

இப்பொழுது மாதப் பிறப்புப் பற்றிப் பார்ப்போம். ஒரு ராசியிலிருந்து மற்ற ராசிக்குள் கதிரவன் நுழையும் நாளே மாதப் பிறப்பு. இந்த நுழையும் நிகழ்வை சங்கிராந்தி என்பார்கள். இதிலும் ஒரு பிரச்சனை இருந்தது. அதை எளிதில் சமாளிக்கிறார்கள். இந்திய இலங்கை நேரப்படி பகலில் சங்கிராந்தி நிகழ்ந்தால் அன்றைய நாளை மாதப்பிறப்பாகக் கொள்கிறார்கள். இரவில் நிகழ்ந்தால் மறு நாளை மாதப்பிறப்பாகக் கொள்கிறார்கள். இதையே உறுதியாகத் தொடர்ந்து கடைப்பிடித்தால் எந்தக் குழப்பமும் வராது. இதைவிடுத்து, இந்தியா இலங்கையில் சங்கராந்தி நிகழும்போது இரவு அதனால் அவர்கள் மறுநாள் கொண்டாடட்டும் எங்களுக்கு அப்போது பகல்தானே அதனால் நாங்கள் முதல்நாளே கொண்டாட வேண்டும் என்கிறார்கள். இந்தியாவில் மாத இறுதி அன்று இங்கு மாதப் பிறப்பு என்று அறிவிப்பது மாதத்தையே இழிவு படுத்தும் செயல். இதை அவர்கள் உணராமல் இல்லை. தாங்கள் ஏதோ புதிதாகக் கண்டு பிடித்ததுபோல் தங்கள் கணிப்புத் திறனைப் பறைசாற்ற இந்தக் குழப்பத்தைச் செய்கிறார்கள். உறங்குபவனை எழுப்பலாம் ஆனால் வேண்டுமென்றே உறங்குபவனை எழுப்புவது சிரமம். நாங்கள்தான் இதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

கணிப்பாளர்கள் கவனத்திற்கு நாம் ஒரு விடயத்தை கூறலாம். மேஷ சங்கிராந்தியோ, கற்கடக சங்கிராந்தியோ அல்லது மகர சங்கிராந்தியோ நிகழ்ந்தால் அந்த மாதம் முழுவதும் கதிரவன் அந்த ராசியில் தானே நிற்கப் போகின்றான் ஒரு நாள் பிந்துவதால் திதி அல்லது நட்சத்திரம் தவறிவிடும் என்று கவலைப்படுகிறீர்களா? அதிலும் பார்க்க, இந்தியாவில் மாத இறுதியாக இருக்கும் நாளை, அமெரிக்காவில் மறுமாதத்தின் பிறப்பு என்று அறிவிப்பது எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தும். ஒரு நாள் பிந்தி அறிவிப்பது காலம் காலமாக உள்ள வழக்கம் தானே. காலம் காலமாக இரவில் சங்கிராந்தி நிகழ்ந்தால் மறுநாளை மாதப்பிறப்பு என்ற அறிவிக்கும் வழக்கம் தானே உள்ளது.

திதி அல்லது நட்சத்திர விடயத்தில் நீங்கள் கூறுவதில் அர்த்தம் இருக்கு. ஏகாதேசி மறுநாள் ஏகாதேசி அல்ல. அமாவாசை மறுநாள் வேறு, பௌர்ணமியும் அப்படியே. ஏன் தைப் பூசம் மறுநாள் பூசமாகவா இருக்கப்போகிறது. ஆகையால் உங்கள் கடும் போக்கை அவற்றுடன் நிறுத்திக் கொண்டு உலகம் முழுவதும் ஒரே நாளில் புத்தாண்டை கொண்டாட விடுங்கள்.

**சரியாகக் கணித்துப் பார்த்தால் ஐயாயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பு பிறந்த கலியுகத்தின் முதலாம் ஆண்டு ஏப்ரலில் பிறக்கவில்லை. பெப்ரவரி 18ல்தான்**

ஆங்கில ஆண்டோ கதிரவனின் வடக்குத் தெற்குப் பயணப் பாதையை மையமாக வைத்துக் கணிக்கப் படுவதால் பாதை என்ற அர்த்தத்தில் அயன ஆண்டு என்று பெயர் பெறுகிறது. தமிழ் ஆண்டோ கதிரவனின் விண்மீன் சஞ்சாரத்தை மையமாக வைத்து கணிக்கப் படுவதால் விண்மீன் சம்பந்த ஆண்டு என்று பெயர் பெறுகிறது. பாதை இல்லாத ஆண்டு என்ற அர்த்தத்தில் நிராயன ஆண்டு என்றும் அழைக்கிறார்கள். சோதிடத்துடன் தொடர்புடையதால் இதற்கு வேதசோதிட ஆண்டு என்ற பெயரும் உண்டு.

**எமது ஆண்டும் பருவ காலங்களும்.**

இங்கு சொல்லவேண்டிய விடயம் பூமியின் ஒரு சலனம் காரணமாக எங்கள் ஆண்டு ஆங்கில ஆண்டுபோல் பருவ காலங்களுக்கு ஒப்ப ஓடுவதில்லை. பூமி பம்பரம்போல் தன்னைத்தான் சுற்றுவதுடன் கதிரவனையும் சுற்றுகிறது என்ற கூற்று எங்கள் எல்லோருக்கும் தெரியும். இந்த இரண்டு செயல்களையும் செய்யும் பம்பரம் சற்று தளம்புவதையும் அவதானித்திருப்பீர்கள். அதுபோல் பூமியும் தளம்புகிறது. ஒருமுறை தளம்பி நிமிரப் பூமிக்கு 26400 ஆண்டுகள் செல்கிறது. கிழக்கிலிருந்து மேற்காக வட்டமிடும் பூமி ஒரு ஆண்டு காலத்தில் சிறிது மேற்கு நோக்கி தளம்புகிறது. அதனால் அந்த தளம்பும் கோணத்தையும் சேர்த்து ஓடவேண்டிய தேவை பூமிக்கு ஏற்படுகிறது. அதற்கு தேவைப்படும் காலம் 20 நிமிடங்கள். இதனால் அயன ஆண்டைவிட நிராயன ஆண்டு 20 நிமிடங்களால் நீளம் கூடுகிறது. 72 ஆண்டுகளில் அது ஒருநாளாகத் திரண்டு விடுகிறது. கி பி 285ல் கதிரவன் நடுக்கோட்டுக்கு வரும் நாளான மார்ச் 20ல் மேட சங்கிராந்தி நிகழ்ந்தது. இவ்வாண்டு ஏப்ரல் 14ல் நிகழ்கிறது. 20 நிமிடங்கள் திரண்டு 24 நாட்கள் வித்தியாசத்தை உருவாக்கி விட்டன. அதே ஆண்டு (கிபி 285) தை முதலாம் திகதி டிசெம்பர் 21ம் திகதிதான் வந்தது. அப்படியானால் அந்த ஆண்டின் தை முதலாம் திகதி நிச்சயம் அறுவடை விழாவாகக் கொண்டாடும் தகைமையுடன் இருந்திருக்கவில்லை. சரியாகக் கணித்துப் பார்ப்போமானால் ஐயாயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பு பிறந்த கலியுகத்தின் முதலாம் ஆண்டு ஏப்ரலில் பிறக்கவில்லை. பெப்ரவரி 18ல்தான் பிறந்தது. இது கணிப்பின் தவறில்லை. பூமியின் தளம்பல்தான் காரணி. இவற்றை நாம் தெரிந்து வைத்திருக்கலாமே அன்றிப் பரிகாரம் தேட முடியாது.

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டுமா?
TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா



# தை பிறந்தது

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது வழக்கில் உள்ள முதுமொழி. எதிர்கால நம்பிக்கையை ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஊக்குவிக்கும் வாசகம் இது. புதிய வருடம் புதிய உற்சாகம், மாணவர்களுக்கு புதிய வகுப்பு. சாதித்து முடிக்க, கடந்த காலத்தை எடை போட தூண்டலுக்குரியதாக எண்ணத்தை மனத்துக்குள் ஒவ்வொரு பொறுப்பாளர்களுக்கும் ஏற்படுத்துகின்ற ஒரு புது ஆண்டு. உத்தியோக உயர்வு, இடமாற்றம், உத்தியோக ஓய்வு போன்ற மாற்றங்களையும் ஏற்றங்களையும் ஏற்படுத்தும் தோற்றத்தோடு தை பிறக்கின்றது. நாற்றுமேடை, நாற்று நடுகை என தோட்டங்களிலும் விவசாயிகளின் சுறுசுறுப்பான ஓட்டம் தைபிறந்தால் தொடங்குகிறது.

வீட்டுக்கு முன் அழகாக வளர்த்த குறோட்டன் செடிகள், அளவோடு வெட்டப்பட்டு ஒவ்வொரு வீட்டின் முகப்பும் ஊரின் ஒரு புதுத் தோற்றத்தோடு காணப்படும் காலம் தை மாதம் தான். வேலிகளில் கிளை விட்டு உயரச் செழித்திருந்த கதியால்கள் அளவோடு வெட்டப்பட்டு வீடுகளும் கூட அழகாக காட்சி தருகின்ற மாதம் தை மாதம். குறுக்கன் அடிக்கின்ற வாழைகள், கமுகு, தென்னம்பிள்ளைகள் என்பன புது நடுகையைக் காண்பதும் தை மாதத்தில் தான். அந்த நாட்களில் தை பிறந்தால் புதிய வருட வருகையை அறிவிப்பதாக கலண்டர்கள் தான் முதலில் காணப்படும். ஒவ்வொரு கடைகளிலும் லீலா பஞ்சாங்கக் கலண்டர்கள், மெய் கண்டான் திருக்குறட் கலண்டர்கள் என்பன போட்டி போட்டுக் கொண்டு ஐப்பசி மாத பிற்பகுதிகளிலே விற்பனைக்கு வந்து விடும். தெய்வப் படங்கள். தலைவர்களுடைய படங்களை தாங்கியதாக குட்டிக் கடைகளிலும் கூட இவை நிரைக்கு தொங்கிக் கொண்டிருக்கும். பொங்கலையொட்டி, மற்றும் அதற்கு முன் வருகின்ற நத்தாரையொட்டி புடவைக் கடைகள் கழிவு விலைகளை விளம்பரமாகப் போடும். தங்கள் பெயர் பதித்த மாத, வருட கலண்டர்களை இலவசமாக வாடிக்கையாளர்களுக்கு இந்தப் புடவைக் கடைகளும் வழங்குவதும் உண்டு. இலவசக் கலண்டர்களைப் போட்டி போட்டுக் கொண்டு சேகரிப்பதில் சிறுவர்களாக இருந்த எங்களுக்கு ஒரு தனி ஆர்வம்.

தைப்பிறப்பு இன்னொரு அம்சமான தைப்பொங்கலையும் கொண்டிருக்கின்றது. தைப்பொங்கலுக்கான ஆரவாரம் சினிமா போஸ்டர்கள் மூலம் ஆரம்பிக்கப்பட்டு விடும். யாழ்ப்பாணத்தில் ராணி சினிமா, வெலிங்டன், வின்சர், ராஜா தியேட்டர்கள் என்று இருந்த அத்தனை சினிமா தியேட்டர்களிலும் ஒவ்வொரு பொங்கலுக்கும் புதுப்பட விநியோகம் இடம்பெறும். தங்கள் புதுப்படங்களை ஏற்கனவே, கதாநாயகன், கதாநாயகிகளுடைய பெரிய கட்அவுட்களோடு விளம்பரப்படுத்துவது இந்த தியேட்டர்களின் வாடிக்கை. மாட்டு வண்டில்களில் தைப் பொங்கலுக்குத் தேவையான மண்பானை சட்டிகளை வைக்கோல் இடையிடையே பொருத்தி அது ஆடி உடைந்து விடாமல் இருப்பதற்கான பாதுகாப்போடு வீதி வீதியாகக் கொண்டு வருவார்கள். அம்மம்மா பானையை சுண்டிப் பார்த்து வெடிப்பில்லாத பானையாக உறுதிப்படுத்தி வேண்டுவது இப்பொழுதும் ஞாபகத்தில் இருக்கின்றது.

கடைகளிலும் பொங்கல் பானைகள், சட்டிகள் நிறைந்து காணப்படும். அலுமினிய தொழிற்சாலைகளிலும் அலுமினிய பானை, சட்டிகளை பொங்கலுக்கு காட்சிப்படுத்துவதும் மலிவு விற்பனையில் விற்பதும் பிற்காலத்தில் வழக்கமாகி விட்டது. பொங்கலுக்காக வாழைக்குலைகளை பழுக்கப் போடுவது ஒவ்வொரு வீடுகளிலும் பிள்ளைகளுடைய வேலையாக இருந்தது. அளவாக வெட்டிய கிடங்கில் முற்றிய வாழைக் குலையை வைத்து வாழைத் தண்டால் இடைவெளி இல்லாமல் பாதுகாப்பாக மூடி ஒரு மூலையில் அளவாக ஓட்டையிட்டு சிரட்டை மூலமோ, பால்ப் பேணி ஊடாகவோ அந்த ஓட்டையினூடாக மூன்று நாட்களுக்கு புகையூதி பழுக்க வைத்து பொங்கலுக்கு வாழைப் பழத்தை தயார் படுத்துவது அந்தக் காலங்களில் வீடு தோறும் வாடிக்கை. சந்தை, சங்கக்கடைகள் என எல்லாவற்றிலும் சக்கரை, பயறு, பச்சையரிசி, கயு, தேங்காய், பிளம்ஸ், கரும்பு, மஞ்சள் என்று எல்லாமே விற்பனைக்கு வந்துவிடும். இவற்றோடு சீனவெடியும் பொங்கலை அறிவிக்கின்ற இன்னொரு அம்சம். யானை வெடி, மூல வெடி, சீன வெடி என்று பெரிய வெடிகளும், பூரிஸ் என்கின்ற சிறுவர்களுக்கான சீறி எரிகின்ற குச்சி தாங்கிய வான வெடிகளும் ஆக எல்லாம் விற்பனைக்கு வந்துவிடும். பொங்கலுக்கு 10 நாட்களுக்கு முன்னதாக வீடு தோறும் இரவிரவாக வெடிகள் வெடிப்பது வழக்கமாகி விடும்.

தைப்பொங்கல் வரையும் வெடித்த வெடிகள் எங்கும், சிறு துண்டங்களாக கடதாசிகள் சிதறி எவ்வளவு வெடிகள் வெடித்தது என்பதைக் காட்டுகின்ற நிகழ்வுகள் வீடு தோறும் தைப்பொங்கலில் நடக்கின்ற ஒன்று. தைப்பொங்கலுக்கு என்று அழகாக விடியற்காலை முற்றத்தை சாணத்தால் மெழுகி நாற்புறமும் தோரணம் தொங்கவிட்டு மாவிலை இடையிடையே சொருகி, மூன்று கல் அடுப்பு

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

சுத்தமாக சாணகம் பூசி நடுவிலே வைத்து சுற்ற வர உலக்கையால் அளவாக பெட்டிகட்டி கோலம் போட்டு அடுப்பில் பானையை வைத்து அதேவேளை ஒரு மூலையில் நிறைகுடம் வைத்து விடியற்காலையிலே பொங்கலுக்கான ஆயத்தம் தயாராகிவிடும். ஆண்பிள்ளைகளாக நாங்கள், விடியற்காலையிலே முழுகித் தோய்ந்து பொங்கி சரிகின்ற போது மூன்று முறை சுற்றி பச்சையரிசியை பானையில் போடுவதற்கு தயாராகி விடுவோம். பொங்கல் பலகாரங்களும் வீடுகள் தோறும் இந்த வேளையில் சுட்டு தயாரிக்கப்படுவது வழக்கம். பொங்கல் முடிய கமகமக்கின்ற அந்த சக்கரைப் பொங்கலை மூன்று தலை வாழையிலும் போட்டு அதற்கு மேலே வாழைப்பழம் உரித்து வைத்து நெய் ஊற்றி, பூக்கள் சகிதம் சூரியனைப் பார்த்து வணங்கி, பின்னர் வீட்டிலுள்ளவர்கள் அனைவரும் பந்திப் பாயில் உட்கார்ந்து பொங்கலை ஒரு பிடி பிடிப்போம்.

### ஆனந்தமான அமைதியான அந்தப் பொங்கலை இன்று நினைத்தாலும் பொங்கல் போல இனிக்கத் தான் செய்கின்றது

அழகான வர்ணக் குஞ்சுப் பெட்டிகளில் அம்மா தருகின்ற, பொங்கலை அயல் வீடுகளுக்குக் கொண்டு சென்று கொடுப்பது அந்த நாட்களில் எங்கள் வேலை. அடுத்த வீடுகளுக்குப் போவதும், பொங்கல் விடுமுறை நாளிலே மாபிள் அடி, அது இது என்று முழுநாளும் பொங்கல் தினத்தில் எங்களுக்கான கழிப்பான நிகழ்ச்சிகளாக இருக்கும்.

இவ்வாறாக பெரியவர்கள் பொங்கல் மாலை தோறும் மாட்டுவண்டிச் சவாரி நடக்கின்ற இடத்திற்குப் போய் விடுவார்கள். இளைஞர்கள் பொங்கல் நாளில் 4-5 காட்சிகள் என்று அதிகாலை முதல் நள்ளிரவு வரை நடக்கின்ற சினிமா புதுப்படங்களைப் பார்க்க யாழ்ப்பாணத்திற்கு படை எடுத்து விடுவார்கள். சிறுவர்களாகிய நாங்கள் வீட்டோடு விளையாடிக் கொண்டிருப்போம். ஆனந்தமான அமைதியான அந்தப் பொங்கலை இன்று நினைத்தாலும் பொங்கல் போல இனிக்கத் தான் செய்கின்றது.

# கோர்த்து விடும் செய்திகள்

## ▪ அருட் தந்தையா மருட் தந்தையா

உலகத் தமிழர் பேரவை (இருவர் பேரவை)ச் சேர்ந்த அருட் தந்தை இலங்கையில் மக்களாட்சியைப் பாதுகாக்க தமிழர்கள் வாக்களிக்க வேண்டும் என்று சொல்லியிருந்தார். தமிழர்களைப் பொறுத்தவரை இலங்கையில் மக்களாட்சி என்று ஒன்று இருந்ததுமில்லை இருக்கப் போவதுமில்லை. இலங்கைப் பாராளமன்றத்துக்குள் வைத்தே தமிழ்ப் பாராளமன்ற உறுப்பினரகள் அடித்து அரை நிர்வாணமாக்கப் பட்டபோதே தமிழர்களுக்கான மக்களாட்சி இலங்கையில் இல்லாமல் செய்யப்பட்டுவிட்டது. இப்படியெல்லாம் அருட்தந்தை பேசினால் நீங்கள் அருட் தந்தையா அல்லது மருட் தந்தையா என மக்கள் கேட்கத் தொடங்கிவிடுவார்கள்.

## ▪ கண்டிக்கப் படவேண்டியதுதான்

சந்திரிக்கா பண்டாரநாயக்க மிஸ்டர் பிரபாகரன் என விளித்தமையை பலர் கண்டித்தார்கள். ஆம் அது கண்டிக்கப்பட வேண்டியதுதான். மேதகு பிரபாகரன் எனவல்லவா சொல்லியிருக்க வேண்டும். எங்கள் சுதந்திரமான வாழ்வைப் பற்றிக் கவலைப்படாதவர்கள். எமது பேரவலங்களைப் பற்றி அக்கறையற்றவர்கள்

இப்போது நாம் சுதந்திரமாக (?) வாக்களிக்க வேண்டும் என்கின்றனர். இதுவரை ஒப்பந்தம் போட்டு ஏமாந்தோம். இந்த முறை ஒப்பந்தம் போடாமல் ஏமாறப்போகின்றோம். ஒரு முன்னேற்றம் தான்.

## ▪ தமிழர்கள் இரண்டு நாட்களை குறித்து வைத்துக்கொள்ளுங்கள்

ஒன்று 2015 ஏப்ரல் மாதம் 19-ம் திகதி. அதாவது மைத்திரிபால சிரிசேனவின் நூறாவது நாள். அன்று அவருக்கு வாக்களிக்கச் சொன்னவர்களைப் பார்த்து நாம் சிரிக்க வேண்டிய நாள். அடுத்தது ஆண்டு 2021 ஜனவரி 2-ம் திகதி. அப்போது குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான பிரச்சாரத்தில் மைத்திரிபால சிரிசேன யாழ்ப்பாணத்தில் வைத்துச் சொல்லப்போகின்றார் 'நான் உங்களுக்குத் தெரிந்த பிசாசு எனக்கு வாக்களியுங்க்ள்' என்று

## ▪ அட்டமத்துச் சனியன் இப்படி வந்தது

மஹிந்த ராஜபக்சவிற்கு அட்டமத்துச் சனியன் அதனால்தான் அவரது நிலைமை இப்படி ஆச்சுது. அட்டமத்துச் சனியன் வேறு வேறு உருவங்களில் வருமாம். ராஜபக்சவிற்கு நீர்மூழ்கிக் கப்படில் அட்டமத்துச் சனியன் வந்தது. இந்தத் தேர்தலில் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய உண்டு. ஒன்று சோதிடத்தை நம்பாதீர்கள். இரண்டாவது அரசியலில் பிழைப்பு நடத்துவோர்க்கு தேர்தல் கூற்றமாகும். இத்தனைக்கும் மத்தியில் பொறுத்த நேரத்தில் ஒற்றுமையுடனும் தேர்தலை ஒழுங்காகவும் செய்து முடித்த சிங்களவர்கள் அனைவருக்கும் நாம் தலைவணங்க வேண்டும்.

என்னதான் போட்டி பொறாமை இருந்தாலும் தேசிய நலனைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்பதை நாம் சிங்களவர்களிடம் இருந்து கற்றுக் கொள்வோமாக. ஒரு நண்பர் சொல்லிக் கொண்டிருந்தார் மச்சான் உவங்களும் உவங்கட ஆமியும் இரண்டாப் பிளவுபட்டு அடி படட்டும் என்று.

## ▪ தமிழின விரோதிகளுக்கு தீனியிடும் கூத்தமைப்பு

விக்கி ஐயா முதல்வர் ஆக முன்னர் இந்தியாவில் உள்ள தமிழின விரோதிகள் பொது விவாதங்களில் வாங்கிக் கட்டுபவர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு விக்கி ஐயா மிகச் சிறந்த விவாதப் படைக்கலன்களை வழங்கி விட்டார். "தமிழ்நாட்டில் இருக்கும் அரசியல்வாதிகள் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பதால் சிங்களவர்கள் தமிழர்கள்மீது கடுமையாக நடந்து கொள்கின்றார்கள்" இப்படிப் பல பிதற்றல்களை விக்கி ஐயா செய்துள்ளார்.

இந்தியத் தொலைக்காட்சிகளில் விக்கி ஐயாவின் 'திருவாசகங்களை' தமிழின விரோதிகள் தமது விவாதங்களுக்கு ஆதரவாக முன்வைக்கின்றார்கள். விக்கி ஐயாவும் ஒரு தமிழின விரோதியா? அவரைப் புது டில்லிதான் 'ஆட்சியில்' அமர்த்தியதா? இது போதாது என்று சம்பந்தன் ஐயா விடுதலைப் புலிகள் சர்வாதிகாரிகள் என்றார்.

*- ஊருளவாளி*

3 Course Set Meal

£12 Per person
(T&C Apply)

Starters:
Any two from the list
- Calamari or Fried Squid
- Garlic Chilli Mogo or Chilli Paneer
- Nairobi Bhajia or Potato & Spinach Dumpling
- Sheekh Kebab or Mutton Roll
- Masala Dosa

Main Course:
Any two curries from
- Chicken Tikka Masala or Lamb Madras
- Kadai Paneer or Aubergine Masala
- Bombay Aloo or Tadka Dal
- And Pilau Rice and Naan or Kerala Paratha
- Dessert: Gajar Ka Halwa or Gulab Jamun or Ice Cream

FUSHIA
TEL - 020 8680 8833
3, Brighton Road, South Croydon, Surrey, CR2 6EA
web : www.fushiauk.com Mail : info@fushiauk.com

60 ACRES PRIVATE LAND FOR SALE !
60 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.




வவுனியா தமிழ்ப் பகுதியில்
60 ஏக்கர் வயல், தோட்டம்
செய்யக்கூடிய நீர் வளமுள்ள
குடி இருக்கக்கூடிய காணி
விற்பனைக்கு உண்டு.

Only Genuine buyers call. Preferable charitable organizations.


தொடர்புகளுக்கு - ராமநாதன் - 07932456464


# பாரிசில் படுகொலை செய்யப்பட்ட CHARLIE HEBDO சஞ்சிகையின் கார்ட்டுனிஸ்ட்டுகளுக்காக புகழ்பெற்ற சில சித்திரக்காரர்களால் வரையப்பட்ட கோட்டோவியங்கள்.

















































# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: **info@orumanam.com**



## மணமகள் தேவை

1. 28 வயது, 5'8" work permit visa Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5281

2. 46 வயது, 5'7" British Citizen working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5275

3. 34 வயது, 5'7" Graduate, Student visa in uk, working as a sale assistance, divorced தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5274

4. 33 வயது, 5'5" Permanent Resident in uk, working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5267

5. 32 வயது, 5'5" Self employed living in srilanka தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5265

6. 52 வயது, 5'10" British citizen in uk graduate working in a medical sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5263

7. 23 வயது, 5'3" born and brought up in uk working in NHS தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5261

8. 31 வயது, 5'10" Asylum seeker in uk finished diploma தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5260

9. 32 வயது, 5'6" Permanent residence in UK graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5258

10. 35 வயது, 5'9" Asylum seeker in UK Software Engineering தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5256

11. 30 வயது, 5'8" Permanent residence in UK working in a super தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5255

12. 46 வயது, 5'6" German Citizen divorced working in supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4660

13. 30 வயது, 6'0" Engineer work permit visa working in a company in Singapore தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5254

14. 28 வயது, 5'8" Graduate work permit visa in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5251

15. 39 வயது, 5'7" Permanent residence divorced self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5250

16. 35 வயது, 6'0" work permit visa engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5249

17. 34 வயது, 5'4" 10 years visa in france working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5243

18. 33 வயது, 5'7" British citizen Engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5237

19. 33 வயது, 5'10" British citizen lawyer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5205

20. 28 வயது, 6'1" Permanent residence in uk working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5203

21. 31 வயது, 5'10" HSMP visa graduate working in a company in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5197

22. 31 வயது, 6'0" Work permit visa graduate working as a manager in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5195

23. 33 வயது, 6'1" British citizen working in a food court தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5191

24. 38 வயது, 5'4" British citizen working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5190

25. 34 வயது, 5'9" Permanent residence in uk graduate working as a manager in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5185

26. 33 வயது, 5'6" Canandian citizen working as a sales manager in Canada தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5184

27. 38 வயது, 5'7" British citizen divorced working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5183

28. 27 வயது, 5'8" Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5182

29. 31 வயது, 5'9" Permanent residence in uk working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5181

30. 25 வயது, 5'7" Permanent residence in uk working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5180

31. 41 வயது, 5'6" British citizen divorced graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4816

32. 25 வயது, 4'7" doctor in Ireland தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5177

33. 26 வயது, 5'8" British citizen graduate self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4544

34. 32 வயது, 5'6" Permanent residence in uk working in a financial sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5176

35. 42 வயது, 5'8" British citizen graduate working in a IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4522

36. 52 வயது, 5'6" Europe citizen in uk working in a medical sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5175

37. 33 வயது, 5'6" Permanent residence in uk graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5172

38. 32 வயது, 6'2" Permanent residence US graduate working in a company graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5164

39. 38 வயது, 5'9" Australian citizen doctor divorced தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5163

40. 37 வயது, 6'2" Permanent residence in uk working in NHS தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5159

41. 28 வயது, 5'5" British citizen graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5156

42. 35 வயது, 5'9" student visa living in UK for 10 years eligible for PR தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5151

43. 27 வயது, 5'7" graduate student visa working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5149

44. 31 வயது, 5'6" Entrepreneur visa self-employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5146

45. 30 வயது, 5'9" 3 years temporary visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5145

46. 30 வயது, 6'0" British citizen graduate working in a company as a manager தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5140

47. 37 வயது, 5'4" British citizen store manager in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5143

48. 33 வயது, 5'10" Graduate asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5136

## மணமகன் தேவை

1. 30 வயது, 5'1" British citizen Graduate.working as a Medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5282

2. 29 வயது, 5'5" Graduate divorced living in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5264

3. 40 வயது, 5'6" Teacher in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5259

4. 30 வயது, 5'4" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5252

5. 29 வயது, 5'3" lawyer working in Australia தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5246

6. 24 வயது, 5'5" Graduate german citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5245

7. 24 வயது, 5'5" Engineer living in India தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4902

8. 24 வயது, 5'3" British citizen accountant working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5215

9. 43 வயது, 5'4" British citizen divorced working as a care coordinator in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5189

10. 29 வயது, 5'5" British citizen doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5169

11. 33 வயது, 5'4" British citizen graduate student தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5162

12. 30 வயது, 5'7" British citizen chatered accountant in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5158

13. 29 வயது, 5'5" British citizen doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5154

14. 33 வயது, 5'7" Canadian citizen graduate working in a mediacal sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5125

15. 39 வயது, 5'3" German citizen graphic designer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4132

16. 29 வயது, 5'8" British citizen graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

17. 25 வயது, 5'3" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5126

18. 47 வயது, 5'6" British citizen working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5117

19. 25 வயது, 5'3" British citizen graduate working in a private company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3575

20. 30 வயது, 5'4" German citizen working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5089

21. 29 வயது, 5'5" British citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5086

22. 49 வயது, 5'3" british citizen divorced working as a cashier தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5077

23. 41 வயது, 5'5" british citizen divorced தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5075

24. 29 வயது, 5'3" british citizen accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5073

25. 33 வயது, 5'0" Graduate, Working in Government sector in Colombo தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5049

26. 24 வயது, 5'3" british citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5070

27. 25 வயது, 4'7" asylum seeker in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5065

28. 42 வயது, 5'2" British citizen divorced living with 2 children தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5064

29. 25 வயது, 5'5" British citizen, looking after the business தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5059

30. 26 வயது, 5'3" Graduate, British citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5054

31. 28 வயது, 5'2" Graduate, British citizen, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5053

32. 21 வயது, 5'3" Residing in Srilanka, studied computer course தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5052

33. 24 வயது, 5'2" Graduate, Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5047

34. 27 வயது, 5'0" Residing in Srilanka, Completed Olevel தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5042

35. 37 வயது, 5'2" Graduate, Working as a Teacher in Colombo தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5012

36. 35 வயது, 5'4" Graduate, Working as a Teacher in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4827

37. 31 வயது, 5'5" German citizen lawyer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5034

38. 35 வயது, 5'6" Canadian citizen accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5020

39. 40 வயது, 5'4" Graduate, Malaysian Nationality ,PR in Australia, Working as a Doctor in Auatralia தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5010

40. 27 வயது, 5'6" Graduate, Australian citizen, Working in a Medical Sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5006

41. 33 வயது, 5'2" Graduate, Canadian citizen, Working at Ministry of Health தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5000

42. 37 வயது, 5'5" Residing in Srilanka, doing computer course தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5005

43. 21 வயது, 5'1" Graduate, Canadian Citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5003

44. 22 வயது, 5'0" Residing in Sri Lanka, doing computer course தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4998

45. 40 வயது, 5'5" Divorced, France citizen , Self-employed தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4996

46. 29 வயது, 5'2" Graduate, Residing in srilanka, working as AG Officer of Land Section தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4999

47. 37 வயது, 5'2" Residing in Sri lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4992

48. 33 வயது, 5'3" Divorced, Graduate, Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4991

49. 18 வயது, 5'4" Graduate, Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4989

50. 26 வயது, 5'1" Graduate, Canadian citizen, Working in an insurance company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4986

51. 28 வயது, 5'7" Graduate, British citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4980

52. 36 வயது, 5'2" Graduate, UK PR, working as a Music teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4977

53. 33 வயது, 5'1" Graduate, Residing in India, working as an Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4976

54. 32 வயது, 5'0" Permanent residence in uk divorced accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4961

55. 41 வயது, 5'5" British citizen divorced working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4960

56. 34 வயது, 5'4" Graduate, British citizen working as a Business Manager தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4957

57. 30 வயது, 5'8" Canadian citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4941

58. 33 வயது, 5'4" temporary visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4189

59. 51 வயது, 5'4" Permanent residence in uk working as a Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 656

60. 48 வயது, 5'3" Divorced,British citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4903

61. 32 வயது, 5'6" Graduate, Residing in Italy, Work permit visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4907

62. 30 வயது, 5'4" Graduate, Canadian citizen, Working in college தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4910

63. 39 வயது, 5'4" Canadian citizen, Head Teacher in canada தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4915

இணையத்தில்
மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# இனியாவது தமிழ் தலைவர்கள் தமது நிலைப்பாட்டினை மாற்றுவார்களா ?

**குலம்**

சிங்கள பேரினவாதத் தலைவர்கள் மீண்டும் மீண்டும் ஒரே உண்மையை தமிழ் மக்களுக்கும் தமிழ் தலைவர்களுக்கும் சொல்லிக் கொள்ளுகின்றனர் , ஆனால் எமது தலைவர்களுக்கு அது விளங்கவில்லையா அல்லது விளங்காததுபோல் நடிக்கிறார்களா தெரியவில்லை.

இந்த ஜனாதிபதி தேர்தலில் கூட எந்த ஒரு வேட்பாளரும், தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனை பற்றியோ , மீள் குடியேற்றம் பற்றியோ, தமிழர் புனர்வாழ்வு பற்றியோ , மீள் கட்டுமானங்கள் பற்றியோ ,தமிழ் பிரதேசத்தில் உள்ள ராணுவப் பிரசன்னம் பற்றியோ , தமிழ்மண் ஆக்கிரமிப்பு பற்றியோ, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் பற்றியோ , போர்க்கால யுத்தமீறல்கள் பற்றியோ, இன அழிப்பு பற்றியோ மறந்துங்கூட பேசுவதில்லை.

மாறாக ஐ. நா வின் போர்க்குற்ற விசாரணைக்கு நாம் ஆதரவளிக்கப் போவதில்லை என்றும், தமிழர் தாயகத்திலிருந்து ராணுவத்தை எந்தக் காரணம் கொண்டும் விலக்கிக் கொள்ளப் போவதில்லை என்றும் ஆணித்தரமாக இன்றுகூட மேடைகளில் பேசி இருக்கிறார்கள்.

காரணம் தமிழர்களுக்கு சார்பாக எதையாவது பேசினால் சிங்கள மக்களின் வாக்குகளை இழந்துவிடுவோம் என்ற பயம், அதாவது பெரும்பான்மை சிங்களமக்கள் , தமிழ் மக்களுக்கு சம உரிமை கொடுப்பதையோ , அவர்களோடு சேர்ந்து வாழ்வதையோ விரும்பவில்லை என்பதுதான் இன்றுவரை அங்குள்ள நிதர்சனம்.

2/3 பெரும்பான்மையுடன் சர்வ அதிகாரங்களையும் கையில் வைத்திருந்த மகிந்தவினால், தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்கு எந்த ஒரு தீர்வையும் இன்றுவரை கொடுக்கமுடியவில்லை , முடியாது என்பதே உண்மை. ஆட்சி மாற்றம் வந்து , அதிகாரங்கள் குறைக்கப்பட்ட ஜனாதிபதியினாலோ அன்றி அதிகாரங்கள் கொண்ட சிங்கள பாராளுமன்றத்தினாலோ தமிழ்மக்களின் தேசிய இனப் பிரச்சனைக்கு ஒரு தீர்வை முன்வைப்பதென்பது முடியாத ஒன்றாகும். காலம் கடத்தும் கபட நாடகம் .

தமிழ் அரசியல் தலைவர்கள், இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி , தமிழ் மக்கள் விரும்பும் அரசியல் தீர்வை, தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், நியாயப் படுத்தி, விட்டுச் சென்ற புள்ளியில் இருந்து தொடரப்படவேண்டும்.

முதலில் ஒரு பத்திரிகையாளர் மாநாட்டினை நடாத்தி, ஊடகங்களுக்கு சிங்கள தலைவர்களின் இந்த நிலைப்பாட்டினை புரிய வைக்க வேண்டும், இவற்றை இலங்கையிலுள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு அறியப் படுத்தவேண்டும், இந்திய மத்திய அரசிற்கு இவற்றை தெளிவு படுத்தி , அவர்களினூடாக ஐ நா விற்கு எடுத்து செல்லலாம், இந்தியா இதற்கு ஆதரவு தராவிடில் , புலத்திலுள்ள அமைப்புக்களுடன் இணைந்து ஐ நா வில், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் பிரேரணையை முன்வைக்கவேண்டும், இது தமிழ் மக்களின் உரிமை என்பதை முதலில் புரிந்து கொள்ளவேண்டும்.

ஒரு அரசினால் ஒரு இன மக்கள் புறக்கணிக்க படும்போது , சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், தமது பிரேரணையை ஐக்கிய நாடுகள் சபையில் அம்மக்களினால் முன் வைக்க முடியும்.

இதனை செய்ய முன்வருவார்களா எமது தலைவர்கள் ? ?

# குப்பிழான் கிராம உதய பொன்விழா













குப்பிழான் கிராம உதய பொன்விழா நிகழ்வுகள் லண்டன் மாநகரில் மிகவும் சிறப்பாகவும் விமர்சையாகவும் 29-11-2014 சனிக் கிழமை கொண்டாடப்பட்டது. பிரித்தானியாவின் சகல பகுதிகளிலிருந்தும், ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் பெருமளவு மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்களையே மேலே நீங்கள் காண்கிறீர்கள்

# 2015ம் ஆண்டும்

(19ம் பக்கத் தொடர்ச்சி)

..தந்திரமாகச் செயற்பட வேண்டும். நைஜீரியாவில் செயற்படும் பொக்கோகரம், சோமாலியாவில் செயற்படும் அல் ஷபாப் ஆகிய அல் கெய்தாவின் துணை அமைப்புக்களும் பல ஆளணி இழப்புக்களைச் சந்திக்கும்.

பொக்கோகரம் செயலிழக்கச் செய்யப் படலாம். பாக்கிஸ்த்தானில் பல தீவிரவாதிகள் கொல்லப் படுவர்.

லக்சத் இ தொய்பர் போன் இந்திய எதிர்ப்பு அமைப்புக்கள் வலு விழக்கும். பாக்கிஸ்த்தானில் இருந்து பல போராளிகள் ஆப்கானிஸ்த்தானிற்குத் தப்பிச் செல்வர். ஆளில்லாப் போர்விமானத் தாக்குதல்கள் தொடர்ந்தும் தீவிரமடையும்.

### ◆ மத்திய கிழக்கு - Sykes-Picot கிழித்த கோடு அழிக்கப்படுமா?

முதலாம் உலகப் போரின் பின்னர் இனி ஒரு இசுலாமியப் பேரரசு உருவாகக் கூடாது என்ற நோக்கத்துடன் பிரான்ஸும் ஐக்கிய இராச்சியமும் ஒன்றிணைந்து மத்திய கிழக்கில் சிரியா, ஈராக், லிபியா, லெபனான் போன்ற நாடுகளின் எல்லைகளை வகுத்துக் கொண்டன.

Sykes-Picot எல்லைகள் எனப்படும் கோடுகளை ஏற்கனவே 2014-ம் ஆண்டு ஐ.எஸ்.ஐ.எஸ் எனப்படும் இசுலாமிய அரசு என்னும் அமைப்பும் குர்திஷ் மக்களின் பெஷ்மோர்கா அமைப்பும் அழித்து விட்டன. துருக்கி வேறு ஒரு புறம் ஈராக்கின் சில பிரதேசங்கள் தன்னுடன் இணைக்கப்பட வேண்டும் என அடம்பிடிக்கின்றது.

சிரிய உள்நாட்டுப் போர் முடியும் அறிகுறிகள் 2015 இலும் இல்லை. பஷார் அசாத்தையும் அசைக்க முடியாது. ஈரான் தனது அணுக் குண்டுத் தயாரிப்பில் பல விட்டுக் கொடுப்புக்களைச் செய்ய வேண்டி இருக்கும். அல்லது அது பெரும் உள் நாட்டு நெருக்கடியைச் சந்திக்கும்.

### ◆ ஐக்கிய அமெரிக்கா - தேறுதலும் தேர்தலும்

2015-ம் ஆண்டு பொருளாதார ரீதியில் பெரும் வளர்ச்சியை ஐக்கிய அமெரிக்கா எட்டும். அதுவே மற்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும். அமெரிக்காவின் கிழக்கு நோக்கிய நகர்வு 2014இல் மத்திய கிழக்கிலும் உக்ரேனிலும் தடைபட்டது. உக்ரேனை முழுமையாக அமெரிக்காவால் பாதுகாக்க முடியாது. 2016-ம் ஆண்டு நவம்பர் மாதம் நடக்கவிருக்கும் அமெரிக்க அதிபருக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரைத் தெரிவு செய்வதில் 2015-ம் ஆண்டு அமெரிக்கா அல்லோல் கல்லோலப்படும். பராக் ஒபாமாவின் மக்களாட்சிக் கட்சியினர் ஹிலரி கிளிண்டனைத் தெரிவு செய்யும் வாய்ப்புக்களே மிக அதிகம்.

### ◆ படைத்துறை - போட்டிகளும் இழப்புக்களும்

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் அடங்கிப் போயிருந்த படைவலு பெருக்கும் போட்டி 2015-ம் ஆண்டு மீண்டும் தீவிரமடையும். மேற்கில் இரசியாவும் கிழக்கில் ஜப்பானும் இதில் அதிக அக்கறைகாட்டும். இணையவெளியில் பல தாக்குதல்கள் நடை பெறும். ஆங்காங்கு நடக்கும் சிறு மோதல்களால் பல படையினர் 2015இல் இறப்பார்கள். மேலும் நவீனமயப் படுத்தப்பட்ட படைக்கலன்கள் உருவாக்கப் படும். அவற்றைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு போர் முனைகள் உருவாக்கப்படும். ஆப்கானிஸ்த்தானில் இருந்து வெளியேறும் படையினர் மத்திய கிழக்கு நோக்கி நகரலாம். நேட்டோப் படையினர் தொடர்ந்து களமுனை அனுபவம் பெற்றுக் கொண்டிருக்க எங்காவது போர் புரிந்து கொண்டே இருக்க வேண்டும்.

2015-இல் சிறு பொருளாதார மேம்பாடு தவிர வேறு எந்த நல்ல மாற்றமும் ஏற்படப் போவதில்லை.

கருத்துக்களுக்கு -
facebook.com/orupaper @orupaper

# Political Battle..

( continuation from page 5)

Lack of confidence in a domestic mechanism is not only from that of a survivor's perspective. David Scheffer, the first U.S. ambassador-at-large for war crimes issues (1997-2001) wrote, "If the tribunals' work had been left to domestic courts, particularly in devastated societies, there simply would not have been any justice at all."

A gruelling battle is taking place in Sri Lanka between both leading presidential candidates despite certain factors which keep them united, such as 'war victory', denial of mass atrocities and rejection of an international investigation into such atrocities. Disturbingly all leading figures in the presidential debate are in competition with each other for self-proclamation and self-promotion in terms of credibility for the war victory, and complete denial of responsibility or acknowledgement of mass atrocities during the war. Sri Lanka's history underlines consecutive governments have had a deliberate policy of destruction and degradation of the Tamil nation, very similar to the trend observed in Bosnia by United States Ambassador to the UN Samantha Power when she was covering the Bosnian war as a journalist.

## Challenge to International Conscience and Justice

Hence, regardless of which leading candidate is to win Sri Lanka's seventh presidential election, victims and survivors of mass atrocities will find it difficult to expect justice or a genuine and credible domestic mechanism into these heinous crimes. Considering Sri Lanka's political dynamics, the culture of impunity in Sri Lanka will remain unchanged regardless of the outcome of the election. The colour may change but the cage will remain the same.

Therefore it is vital that a sustainable independent international investigation mechanism into mass atrocities be designed to deliver justice for the victims and survivors. On 3-6 December 2014 the International Nuremberg Principles Academy and the Wayamo Foundation hosted a two-day conference titled "Preventing Genocide and Other Atrocity Crimes: Challenges in Today's World" and concurrent four-day journalism workshop.

During the conference, Adama Dieng, the Special Adviser to the UN Secretary-General on the Prevention of Genocide said that the, "UN Secretary-General had courage to accept UN failure in SriLanka". Following the event, he also said that the killing of thousands of Tamils "under our eyes" during the end of the armed conflict in 2009, was a "failure of the international community". Speaking at the same conference, Margit Hellwig-Botte, Head of Division (Conceptual Issues and R2P), UN Department, Federal Foreign Office, Germany said, "Never again triggered again due to UN failure in Sri Lanka" in 2009. In September 2014, the US had said that several lives could have been saved had the global community acted earlier and more appropriately to situations in some troubled nations such as Sri Lanka.

After execution of mass atrocities and their failure to stop it, international actors have accepted their failure. Time has arrived for course correction, and Sri Lanka's forthcoming presidential election will be the litmus test for it, and a challenge to international conscience. Will international actors bring perpetrators of mass atrocity crimes in Sri Lanka to international justice and prove "Never Again" to be more than just a slogan?

# தமிழ் திரையுலகின் அதி (பயங்கர) மேதாவிகளே !



தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, ஏன் அகில உலக, பிரபஞ்ச இன்ன பிறதையும் தூக்கி பிடித்துக்கொண்டிருக்கும் (திரையுலகை சொன்னேன்.அப்புறம் எதைன்னு வேற கேப்பாங்க இல்ல). அல்லது அப்படி நினைத்துக் கொண்டிருக்கும் அதி(பயங்கர) மேதாவிகளே.

நீங்கள்தான் ரசிகர்களின் கலைத்தாகத்தை தீர்க்கும் அமுதத்தை, (அடிக்கடி சொல்லமாட்டேன் நீங்களே அவ்வப்போது இந்த பத்தியில எங்கெங்க தேவைப்படுதோ போட்டுக்கங்க, எதையா? ஏன்யா என் வாயாலே சொல்ல வைக்குறிங்க? அதான், அப்படி நினைத்துக்கொண்டிருக்கும்) தரும் வல்லவர்கள்.

நீங்கள் தான் உங்கள் கலைப்படைப்பின் மூலம் துவண்டு கிடக்கும் ரசிகனோடதை தட்டி எழுப்புகிறீர்கள், எதையா ? என்னய்யா உங்களோட ? புத்துணர்ச்சியைத்தான்.

நீங்கள் தான் ரசிகனின் தேவையை உணர்ந்து அவனுக்கு என்ன தேவையோ அதை அவனிடம்சரியாக கொண்டு போய் சேர்ப்பதில கை தேர்ந்தவர்கள்.

நீங்கள் தான் உங்கள் மூளையை மீண்டும் சொல்கிறேன் உங்கள் மூளையை கசக்கிபிழிந்து புதுப்புது பரிமாணங்களில் (பரிணாமங்களில் கூட )சினிமாவை ரசிகனிடம் கொண்டு வந்து சேர்க்கிறீர்கள்.

நீங்கள்தான்....... இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம் போதும் கை வலிக்கிறது.(அதுமட்டுமல்ல ஒரு நாளைக்கு நான்கைந்து பொய்கள் தான் சொல்வது வழக்கம்)

விசயத்துக்கு வருவோம்

நாங்கள் ரசிகர்களுக்காக படம் எடுக்கிறோம் அவர்கள் ரசிக்கிறார்கள், ஆனால் இந்த இணையத்தில் எழுதுபவர்கள் தான் நொர நாட்டியம் பேசுகிறார்கள்,நொட்டம் சொல்கிறார்கள் என்கிறீர்கள்.

சரிதான்

நீங்கள் சோறு தானே சாப்பிடுகிறீர்கள் ? அய்யய்யோ கதை கெட்டுது, (அட உங்க கதை இல்லைய்யா, நான் சொல்ல வந்த கதை) நான் சொல்ல வந்ததின் அர்த்தம் அதுவல்ல. நீங்கள் உணவு உண்கிறீர்கள் தானே. உதாரணத்திற்கு உங்கள் மனைவி சமைத்ததை சப்புக்கொட்டி சாப்பிட்டு கொண்டிருக்கிறீர்கள் அப்போது உங்கள் மனைவி நேற்று டிவியில் பார்த்த புது பதார்த்தமொன்றை, நானே புதுசா ஒரு ஐட்டம் ட்ரை பண்ணியிருக்கேன் (எல்லாம் உங்ககிட்ட இருந்து கத்துக்கிட்டதுதான்)சாப்பிடுங்கன்னு வைக்குறாங்க, அதை சாப்பிட்டதும் உங்க முகம் இஞ்சி சாப்பிட்ட சிங்கம் மாதிரி ஆனாலும் வெளிக்காட்டிக்காம நல்லா இருக்கும்மா அப்படின்னுட்டு போயிடுவீங்க ( இதுதான் நீங்க சொல்ற ரசிகர்களுக்காக படம் எடுக்குறோம் அவங்க ரசிக்குறாங்க).

இப்போ நீங்க செம்ம பசியில போய் ஒரு ஹோட்டல்ல எது ரெடியா இருக்கோ சீக்கிரம் கேட்டுட்டு இட்லி என்றதும் நாலு வாங்கி சாப்பிடுறீங்க, பசியடங்கிய பின் மெனு கார்டை பார்த்து இருப்பதிலே விலையுயர்ந்த ஒன்றை ஆர்டர் செஞ்சுட்டு காத்திருக்கீங்க,,,,,

வந்த ஐட்டமோ அன்னைக்கு உங்க மனைவி செஞ்ச புது ஐட்டத்தை விட சுமாராதான் இருக்கு. என்ன உப்பு தான் கொஞ்சம் கூட (பயபுள்ள உங்க மூஞ்ச பாத்து என்ன நினைச்சுதோ தெரியல).இப்ப உங்க ரியாக்சன் எப்படி இருக்கும் அன்னைக்கு சாப்பிட்ட மாதிரி பொத்திக்கிட்டு சாப்பிட்டுட்டு வந்துடுவீங்களா? ஓட்டலாயா நடத்துறீங்க ஓட்டலுன்னு கலகலப்புல வர்ற ஆண்ட்டி ரேஞ்சுக்கு சவுண்டு விடமாட்டீங்க ?

உங்க சத்தத்தை கேட்ட ஹோட்டல் சூப்பர்வைசர் வந்து பிரச்சினையை கேட்டுட்டு, "சாப்பிட இஷ்டமா இருந்தா சாப்பிடு இல்லன்னா திண்ணதுக்கு பில்லை கட்டுட்டு போயிட்டே இரு", "அவனவன் எவ்ளோ கஷ்டப்பட்டு சமைக்கிறான், ஒரு நாள் பூரா நெருப்புல நின்னு, அங்கங்க சூடு பட்டுக்கிட்டு புகையில, மசாலா நெடியில லோல் பட்டுக்கிட்டு புதுப்புது ஐட்டமா செஞ்சு குடுத்தா நல்லாயில்லயாம்ல, நல்லாயில்ல. நாலு இட்லி சாப்டவுடனே உன் பசி அடங்கிடுச்சுல்ல, அப்பவே எழுந்து போக வேண்டியது தானே.இந்த ஐட்டமே வெளிய இருக்க கையேந்தி பவன்ல பாத்திரம் கழுவுறவரு சொல்லித்தந்த மெனுயா. இஷ்டமா இருந்தா திண்ணு இல்லன்னா போயிட்டே இரு". "எங்க சாப்பாட்டை சப்புக்கொட்டி சாப்பிட நிறைய ஆளுங்க இருக்காங்க அவங்களுக்குதான் நாங்க ஹோட்டல் நடத்துறோம், போங்க சார்"

அவர் சொல்வது போல கஷ்டப்பட்டு சமைக்கும் ஒரே காரணத்திற்க்காக நல்லா இல்லன்னா கூட மூடிக்கிட்டு சாப்பிட்டுட்டு வரவா முடியும்.

அப்படித்தான் இருக்கிறது உங்கள் பிரசங்கமும்.

ஓகே ஆல்ரைட்.கடைசியா ஒண்ணே ஒண்ணு சொல்லிக்கறேன் இணையத்தில் இயங்கும் திரைப்பட ரசிகர்கள் சார்பில்.

தலைப்பை ஒரு முறை வாசிக்க,

உங்களுக்கு விமர்சனத்தை தாங்கிக்கும் பக்குவம் (வக்கு என்றும் பொருள் கொள்ளலாம்)இல்லையெனில் இணையப்பக்கம் வராமல் மூடிக்கொண்டு இருக்கவும்

எதையா ?

உங்களுக்கு ஓயாம விளக்கம் குடுக்கனுமாய்யா?

உங்கள் லேப்டாப்பையும், இன்ன பிறதையும்.

என்ன இன்ன பிறதுன்னாவா ? ஷ்ஷ்ஷ்ஷ்ப்பா,

PCயையும் மொபைலையும்... தான்பா..

*- கோகுல் மனதில் வலைப்பூ*

# பாலசந்தரின் மறைவு குறித்து....



திரைப்படத்துறையில்
புதுமைகள் புகுத்திய
தமிழ்ப்பெரும் கலைஞனே!
நிரையெனத் தமிழரைத்
திரையுலகணைத்த
நெடுங்கலைப் பயணமே!
வரையது இன்றி
தமிழ்த்திரையுலகில்
விரிவினைக் கொணர்ந்த
தமிழ்மூதறிஞனே!
விரைந்துநீ பிரிந்து விண்ணுல
கடைந்து
வேதனைத்தீயினில்
எம்மையிட்டதால்
கரையது இன்றி விழிதனில் நீரை
கசிந்திடச் செய்தாய் கே.பி ஐயனே
திரையுலகதனின் தீர்க்கதரிசியே!

சாதியை ஒழிக்கச் சமரது செய்தாய்
காதலை வெறுத்தோர்
கடிமனம் தகர்த்து
சாதலை நீக்கிச் சாதனை புரிந்தாய்
மீதமாய் நின்ற
மூடக் கொள்கைகள்
தேடியே நீயும் தகர்த்திட வைத்தாய்
பாமரர் மத்தியில் பாடமாய்
நின்றாய்
ஏட்டுப் படிப்பை அறியாப் பாமரர்
நாட்டினை அறிய நாடியாய்
நின்றாய்
சுப்பர் ஸ்ராரினை
சுகமுடன் தந்தாய்
உலக நாயகனை
உவப்பொடு உவந்தாய்
பிரகாஸ் ராஜினைப்
பிரபல மாக்கினாய்
கலையுலகினுக்கே காவிய மானாய்
மரபினை உடைத்து புது
மரபினைத் தந்தாய்
வரம்புகள் உடைத்து புது
வரம்புகள் அமைத்தாய்
எதுவென அறியா
இளையோர் மத்தியில்
இதுவென உலகை
ஏற்றியே அளித்தாய்
கரையிலா உந்தன்
கருத்துகள் நடிப்பால்
கரைபுரண்டோடும்
சாதனை படைத்தாய்
தொட்டிட முடியா
உறவுகள் மத்தியில்
இட்ட உன் கருத்துகள்
அளவில அளவில
மாற்றிட முடியா
மானிட மரபுகள் – உன்
மாற்றம் கண்டு மகிழ்ந்து போயின
திரைப்படத் துறையின்
தேவையை உணர்ந்து
கரையிலாக்
கவிதாலயாவினைத் தந்தாய்
நுாற்றொரு
படத்தை நுணுக்கமாய் இயக்கி
ஆற்றலின் ஆளுமை
அள்ளியே தந்தாய்

2

வேற்றுக் கருத்தையும்
விருப்புடன் நுகர்ந்து
வேற்றுமை தனிலும்
ஒற்றுமை கண்டாய்
உந்தனால் உயர்ந்தோர்
பட்டியல் அமைத்தால்
எந்தன் கவியது
பல தாள் தொடரும்
நாடகத்துறையில்
நடிப்பினைத் தொடர்ந்து
நீர்க்குமிழியால்
திரையுல கிணைந்து
உத்தம வில்லன்
படத்தினில் நடித்து
உத்தமனே நீ
உலகைத் துறந்தாய்
உலகெலாம் உள்ள
தமிழர்கள் இதயம்
நிலைகுலைந்ததுவே
உன்பிரிவினைக்கேட்டு

கே.பி ஐயனே!
நீ காட்டிய வழியதால்
திரையுலகென்றும்
தன்பணி தொடரும்
வாழிய உன் நாமம்!
வாழிய உன் கருத்து!
வாழிய உன் முயற்சி!
வாழிய உன் துணிவு!
வாழிய உன் திடசங்கற்பம்!
வாழிய உன் மாற்றங்கள்!

உன் ஆத்மா சாந்திபெற உலகத்தமிழர்
சார்பில் வேண்டி நிற்கும்

*கவிஞர் பாலரவி (லண்டன்)*


Door To Door
2 x Tea Carton for £ 19.50
GLEN CARRIERS
Most Trusted and Reliable Name in the Trade Since 1985
GlenCarriers
Laksiri Seva
(Glen Carriers Forwarding Limited)
• இலங்கை உட்பட அனைத்து நாடுகளுக்கும் கப்பல் அல்லது விமான மார்க்மாகவும் பொதிகள் குறைந்த விலையில், பாதுகாப்பாகவும், நம்பிக்கையாகவும் அனுப்பப்பட்டு, உரிய நேரத்தில் கையளிக்கப்படும்.
• 30 வருட கால அனுபவமும் திறனும் மிக்க உலகளாவிய சேவைக்கு பெயர் பெற்றது எங்கள் நிறுவனம்
இலங்கையில் எப்பாகத்திலும் நேரடி விநியோகம் செய்யப்படும்
Collection from £ 10 within London
Collection from your door point in any part of UK or Europe
Colombo Warehouse | Laksiri Seva Pvt Ltd. 66, New Nuge Road, Peliyagoda, Colombo Telephone: + 94 1129 177 29-31
Eastern Province Warehouse | Laksiri Seva Pvt Ltd. 26, Hmyl Lane, Main Street, Addappallam, Ninthavur. 0672 0510 50-51
Tel : 020 8743 7353 || 14 Allied Way, Off Warple Way, Acton, London W3 0RQ
Web : www.glencarriers.com
Email : info@glencarriers.com

# சினிமா




## கப்பல்

இயக்குநர் ஷங்கருக்கு நகைச்சுவை என்றால் மிகவும் பிடிக்கும். நகைச்சுவை நடிகர்களின் பேச்சுக்களை விரும்பிக் கேட்பார். அவர்களுடன் நிறைய பேசுவார். நகைச்சுவை படங்களை விரும்பிப் பார்ப்பார். எல்லாம் சரிதான். இந்தப் படத்தின் நகைச்சுவை காட்சிகள் அவருக்கு படத்தை வாங்கி வெளியிடும் அவரை கொண்டு போயிருக்கிறது என்றால் இது நிச்சயம் கடவுள் அருள்தான்.

சின்ன வயதில் இருந்தே திருமணம் செய்யக் கூடாது என்ற கொள்கையில் இருக்கும் நண்பர்களுடன் இருப்பவன் ஹீரோ வாசு. வாலிப வயது வந்தவுடன் காதலிக்க மனசு துடிக்கிறது. ஆனால் நண்பர்களுக்கு செய்த சத்தியம் தடுக்கிறது. அதையும் மீறி சென்னைக்கு ஓடி வந்து ஒரு காதலியைத் தேடிப் பிடிக்கிறார். அதற்குள் அவரது நண்பர்களும் சென்னைக்கு வந்துவிட அவர்களுக்குத் தெரியாமல் தனது காதலை வளர்க்கத் தெரியவில்லை ஹீரோவுக்கு. நண்பர்கள் ஹீரோவின் காதலை முறியடிக்க நினைக்கிறார்கள். இதைச் செய்து முடித்தார்களா இல்லையா என்பதுதான் கதை..

நகைச்சுவை படம் என்றாலே லாஜிக் தேவையில்லைதான். ஆனால் இந்த அளவுக்கா..?

இப்படியொரு நண்பர்கள் குழாமை இந்தியாவில் எந்த மூலையிலும் நீங்கள் பார்க்க முடியாது. ஆனால் குடும்பத்தில் பார்க்கலாம்.. இப்படியொரு குரூர மனம் கொண்டவர்கள் நமக்கு நண்பர்களாகவும் இருக்க முடியாது. நட்பின் வலிமையைக் காட்டுவதற்கு வேறுமையக் கருத்தே கிடைக்கலியா இயக்குநர்...?

காட்சியமைப்புகளில்தான் நகைச்சுவையைக் காட்டியிருக்கிறார் இயக்குநர். இயக்கத் திறமையுள்ளவர்தான். நன்கு தெரிகிறது.. வி.டி.வி கணேஷின் ஒரு சின்ன ஆக்சனிலேயே சிரிப்பை வரவழைக்கிறார் இயக்குநர். ஆனாலும் அநியாயத்திற்கு காட்சிக்கு காட்சி லாஜிக் உதைப்பதால் இடைவேளைக்கு பின்பு ரசிக்கவே முடியவில்லை. காட்சிகளால் சிரிக்கப்பட்டு ஏதோ கடமையை ஆற்ற வேண்டியதாகிவிட்டது.

நண்பர்கள் செய்யும் கலாட்டாக்களை சிரித்துக் கொண்டே வைபவ் எதிர்கொள்வதெல்லாம் நமக்கே கோபத்தைக் கிளப்புகிறது. அவ்ளோ பெரிய கோடீஸ்வரப் பெண்ணிற்கு கோபம் வராதா..? நட்புதான் முக்கியம் என்பதற்கு ஹீரோ எதை முன் வைக்கிறார் என்பதை மட்டும் படத்தில் சொல்லவேயில்லை. இதனாலேயே நட்பு என்று சொல்லும்போதெல்லாம் எரிச்சல்தான் வருகிறது.!

ஹீரோயின் குடிபோதையில் 'ஐ லவ் யூ' சொல்லிவிட்டார் என்பதற்காக ஹீரோ அடுத்த நாளே அவரது வீட்டில் போய் நிற்பதெல்லாம் கொட்டாம்பட்டியில்கூட நடக்காதே இயக்குநர் ஸார்..? இத்தனை பெரிய கோடீஸ்வர பெண்.. யாரோ ஒருவன்.. முன் பின் தெரியாதவன்.. பார்த்தவுடன் அவன் தகுதியென்ன என்பதுகூட தெரியாமல் காதலித்துவிடுவாளா..?

முதலில் இந்தப் படத்திற்கு எப்படி 'U' Certificate கொடுத்தார்கள் என்பதை சி.பி.ஐ. விசாரணை வைத்துதான் கண்டுபிடிக்க வேண்டும். சிறந்த படங்களில் கூட ஏதாவது ஒரு லொட்டு, லொசுக்கை சொல்லி 'U' தர மறுக்கும் சென்சார் குழு 'A' Certificate பெறும் முழு தகுதியுள்ள இந்தப் படத்துக்கு 'U' Certificate கொடுத்தது மோசடித்தனம் என்றே தோன்றுகிறது.

நகைச்சுவையில் பிளாக் காமெடி என்ற ஒரு வகையும் உண்டு. குழந்தைகளைக் கவரும் காமெடியும் உண்டு. இது பிளாக் காமெடி படம். இதைப் போய் குடும்பத்துடன் பாருங்கள் என்றால் எப்படி..?

கேரக்டர் ஸ்கெட்ச்கூட முற்றிலும் அர்த்தமற்றதாக இருக்கிறது. நண்பர்களின் குடும்பத்தினரை காணவில்லை. இந்த நண்பர்கள் வேலை வெட்டிக்கே போகவில்லையெனில் சோத்துக்கு என்ன செய்கிறார்கள். இவர்கள் திருமணம் செய்ய மாட்டோம் என்ற கருத்திற்கு அவர்களது குடும்பத்தினர் ஏதும் சொல்லவில்லையா..?

இரட்டை அர்த்த வசனங்கள்.. முகம் சுழிக்க வைக்கும் காட்சிகள்.. கொஞ்சமும் நட்பை உயர்வாகக் காட்டிவிடாத திரைக்கதை.. இப்படி எடுக்கப்பட்டிருக்கும் இந்தப் படத்தின் கிளைமாக்ஸ்தான் மகா சொதப்பல்..

ஏதோ சில காமெடி சீன்களினால் கிளைமாக்ஸ் தள்ளாடி தள்ளாடி செல்கிறது. ஆனால் பார்க்கத்தான் முடியவில்லை.

இதில் நடிகர்களின் நடிப்பெல்லாம் எதற்கு..? இசையும் சுமார்தான்.. பாடல் காட்சிகளை எடுத்திருக்கும் விதம் மட்டுமே ரசனையானது. ஹீரோயினிடம் கோடம்பாக்கம் எதிர்பார்க்கும் விஷயங்கள் இல்லை என்பது மட்டும் தெரிகிறது.

பெண்கள் பக்கமே போகாதவர்கள்.. பெண் வாடையை நுகராதவர்களுக்கு பெண்கள் கிடைத்தால் என்னாகும் என்பதை ஹீரோவும், அவரது திருமணம் செய்யப் போகும் நண்பனும் காட்டிவிடுகிறார்கள்.

ஒரு மிகப் பெரிய இயக்குநரிடம் வேலை பார்த்தவர்.. தொழில் கற்றுக் கொண்டவர் என்பதால் அவரது படம் எப்படியிருக்கும் என்று எதிர்பார்ப்போடு வந்தவர்களை வெறுமனே ஏமாற்றி அனுப்பியிருக்கிறார் இயக்குநர்.

அடுத்தடுத்த படங்களை நிச்சயம் சமூகப் பொறுப்போடு எடுக்கிறேன் என்று சமீபத்திய பிரஸ்மீட்டில் சொல்லியிருக்கிறார் இயக்குநர் கார்த்திக் கிரீஷ். அதைக் காப்பாற்றுவார் என்று நம்புகிறோம்.

*- உண்மைத்தமிழன்*

# சினித்துளி

## 'லிங்கா' நஷ்டம் - உண்ணாவிரதம்!



'லிங்கா' படத்தில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்ய வலியுறுத்தி, விநியோகஸ்தர்கள் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் இருக்க அனுமதி கேட்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 45 கோடியில் தயாரிக்கப்பட்ட 'லிங்கா' படத்தை 220 கோடிக்கு வியாபாரம் செய்துள்ள நிலையில், இழப்பு ஏற்பட்டுள்ளது. விநியோகஸ்தர்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் குறித்து வேந்தர் மூவிஸ் நிறுவனம், ஈராஸ் நிறுவனம் இரண்டும் கண்டுகொள்ளவில்லை.

இதனால் படத்தை வாங்கிய விநியோகஸ்தர்கள் தங்களுக்கு நஷ்டமான தொகையை திருப்பிக்கொடுக்க வேண்டும் என்று தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றனர். நஷ்ட ஈடு கேட்டு விநியோகஸ்தர்களும், திரையரங்க உரிமையாளர்களும் அடையாள உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளனர்.

## விஜயின் 'புலி'!



'முன்பொரு காலத்தில்'எஸ்.ஜே.சூர்யா விஜய்யை வைத்து இயக்குவதற்காக 'புலி' என்ற பெயரில் ஒரு படத்தை பரிசீலனையில் வைத்திருந்தார். எனினும் சில காரணங்களால் படம் கைவிடப்பட்டது. தற்போது சிம்பு தேவன் இயக்கும் படத்திற்கு 'மாரிசன்', 'கருடா', 'போர்வாள்' இப்படி பல பெயர்கள் பரிசீலனையில் இருந்துவந்தது. தற்போது இந்த படத்திற்கு 'புலி' என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படமாவது சர்ச்சைகளில்லாது வருமா ?

## 'ஐ' பொங்கலுக்கு இல்லை!



ரசிகர்களாலும், சினிமா உலகினராலும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஷங்கரின் 'ஐ' படத்தின் ரிலீஸுக்கு சென்னை உயர்நீதிமன்றம் 3 வார இடைக்கால தடை விதித்துள்ளது. இதனால் ஐ படம் பொங்கலுக்கு இல்லை என உறுதியாகிவிட்டது. ஐ படத்தின் தயாரிப்பிற்காக வாங்கிய கடனை திரும்ப செலுத்தாததால் படத்தின் தயாரிப்பாளர் ஆஸ்கார் பிலிம்ஸ் ரவிச்சந்திரன் மீது 'Picture media works' நிறுவனத்தினர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

அதன் விளைவாக வரும் ஜனவரி 30ம் தேதிக்குள் பதிலளிக்குமாறு ஆஸ்கார் பிலிம்ஸ் ரவிச்சந்திரனுக்கு உத்தரவிட்டுள்ளது. அதுவரை படத்தை வெளியிட வேண்டாம் என்றும் தயாரிப்பளாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## சங்கருக்கு இளையராஜா நோட்டீஸ்



'கப்பல்' படத்தில், தனது பாடலைப் பயன்படுத்தியதற்காக அதன் தயாரிப்பாளரான இயக்குனர் சங்கருக்கு இளையராஜா வக்கீல் நோட்டீஸ் அனுப்பியுள்ளார். இயக்குனர் சங்கர் இயக்கத்தில் கிரீஷ் இயக்கிய இப்படத்திற்கு நடராஜன் சங்கரன் என்பவர் இசையமைத்துள்ளார். இந்த படத்தில் இடம் பெறும் ஒரு பாடல் காட்சியில், கரகாட்டக்காரன் படத்துக்காக இளையராஜா இசையமைத்த "ஊரு விட்டு ஊரு வந்து..." பாடலை அப்படியே எடுத்துப் பயன்படுத்தியுள்ளனர்.

தனது அனுமதியின்றி இந்தப் பாடலைப் பயன்படுத்தியதைக் கண்டித்தும், உடனடியாக பாடலை படத்திலிருந்து நீக்குமாறு கேட்டும் இயக்குனர் சங்கருக்கு இளையராஜா வக்கீல் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

MARSANS
SOLICITORS & ADVOCATES
"New Law Firm in the heart of London"

Areas of law:
- Immigration
- Civil/Commercial Litigation
- Business Crime /VAT
- Commercial & Residential Property
- India Desk

Tamil Speaking Barrister and Solicitors
Contact Marsans, Solicitors and Advocates for expert legal advice and assistance.
Languages: Tamil, Hindi, Telugu, Malayalam
Marasans have dual qualified lawyers with specialist knowledge to assist on India / UK related issues such as;
- Recovery of family properties
- Matrimonial /custodial disputes
- Immigration - Tier 4 and Tier 5 sponsor license
- Asset tracing
- Sponsor licences



FIRST FLOOR, 277-281 OXFORD STREET, LONDON, W1C 2DL DX 138882 MAYFAIR Mail : email@marsans.co.uk Web : www.marsans.co.uk
PHONE: 020 7499 0620 | MOB: 07837 450 397 | FAX: 020 7499 7109 | EMERGENCY: 020 7408 5080

தமிழே எங்கள் உயிர்
TAMIL IS OUR LIFE

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை - ஐக்கிய இராச்சியக் கிளை

**Tamil Education Development Council– United Kingdom TEDC U.K**

162 Franciscan Road, London SW17 8HH Tel: 020 8432 6999 | Mob: 077 7175 3525



## தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை ஐக்கிய இராச்சியக் கிளையின் ஆசிரியர் மதிப்பளிப்பும் அதிதிறன் பெற்ற மாணவர்களின் பரிசளிப்பும்

'தமிழே எங்கள் உயிர்' என்பதற்கிணங்க தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை உலகளாவிய வகையில் 14 நாடுகளில் தமிழ்க் கல்வியை நாற்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்க் குழந்தைகளுக்குப் புகட்டும் பணியில் தனது மகத்தான சேவையைச் செய்து வருகிறது. இந்த வகையில் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை இங்கு வாழும் தமிழ்ச்சிறார்களின் தமிழ்மொழி, கலை, பண்பாடு மேம்பட தனது பணியை ஆற்றி வருகிறது.

**நாள் – 25.01.2015 ஞாயிற்றுக்கிழமை :::: காலம் – காலை 10.00 மணி**

**இடம் - Byron Hall, Harrow Leisure Centre, Christchurch Avenue, Harrow, Middlesex HA3 5BD**

அனைத்துலக தமிழ்ப் பொதுத் தேர்வு 2014இல் அதிதிறன் (1+) பெற்ற நானூற்றிமுப்பது மாணவர்களிற்கான பரிசளிப்புடனான ஆசிரியர் மதிப்பளிப்பிற்கு வருகையை உறுதி செய்யாதவர் வருகையை எம்முடன் தொடர்பு கொண்டு வருகையை உறுதசெய்யுமாறு அன்புடன் கேட்டுகொள்கின்றோம்.

31.01.15 - 01.02.15 ஆகிய நாட்களில் வளர்தமிழ் நூல்களைப் பயன்படுத்தும் தமிழ்ப்பள்ளிகளில் அனைத்துலக அரையாண்டு தமிழ்ப் பொதுத் தேர்வு நடைபெறும்

**தமிழ்த்திறன் போட்டிகள் 2014-2015 பேச்சுப் போட்டி, திருக்குறட்போட்டி, கட்டுரைப் போட்டி**

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை, வளர்தமிழ் பாடநூலைப் பின்பற்றும் அனைத்துப் பள்ளிகளுக்கிடையிலான தமிழ்த்திறன் இறுதிப் போட்டிகள் 15.02.2015 ஞாயிற்றுக்கிழமை The Archbishop Lanfranc Academy, Mitcham Road, Croydon, Surrey CR9 3AS இல் நடைபெறவுள்ளது.

---

உலகளாவிய வகையில் பதின்நான்கு நாடுகளில் நாற்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு ஒரே பாடத்திட்டம், ஒரே தேர்வு, ஒரே சான்றிதழ். அனைத்துலகத் தமிழ்ப் பொதுத்தேர்வு 2015 வளர்தமிழ் 1 முதல் வளர்தமிழ் 12 வரை கேட்டல், பேசுதல், வாசித்தல் திறன்களிற்கான வாய்மொழித் தேர்வுகள் 02/05/2015 - 10/05/2015 காலப்பகுதி நாளில் நடைபெறும். எழுதுதல் தேர்வு 06.06.2015 சனிக்கிழமை

International Tamil General Examination 2015 - Private candidate's application form can be downloaded from www.tedc.org.uk

---

**மேல் நிலைக்கல்வி -தமிழ் இலக்கியமாணி பட்டயக்கல்வி B.T.L-Batchelor of Tamil Literature**

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை வளர்தமிழ் 12 முடித்த மாணவர்களுக்காகவும் தமிழ் ஆர்வலர்களுக்காகவும் பட்டயக்கல்வி (Bachelor of Tamil Literature) கற்கைநெறியையும் தொடங்கியுள்ளது. இப்பட்டயக்கல்வியைக் கற்க விரும்புவோர் எம்மைத் தொடர்பு கொண்டு பாடநூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

---

நன்றி – தொலைபேசி : 020 8432 6999 / 07771 753525 மின்னஞ்சல் - tedcuk2014@gmail.com

---

nachiyar events

PROUDLY PRESENTS

# LONDON TAMIL MARKET

## 2015ஆம் ஆண்டு சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இலண்டன் தமிழர் சந்தை

**11TH & 12TH APRIL 2015**
**AT 10.00 AM TO 8.00 PM**

**BYRON HALL,**
**HARROW LEISURE CENTRE, HARROW,**
**MIDDLESEX, HA3 5BD, LONDON**

அறுசுவை தாயக உணவுகளின் சங்கமம்
விசேட விலைக் கழிவுகளில் பொருட்கள் சேவைகள்

*The countdown has started to the mega London tamil market trade show for the first time in London*

- Activities for Kids
- Huge Varity of stalls
- Vibrant multicultural shows
- Many exiting activities for all ages

2015 London Tamil Market

Contacts;
info@nachiyarevents.com
T:0207 706 1122
M : 079 5184 7840 , 079 8882 6507



Web : www.nachiyarevents.com

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
### Southall Travel?

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
### சவுத்ஹோல் டிராவல்
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

5553 ATOL PROTECTED